DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர் இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS
SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25 வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில் எதிர்க்கும் கதிர் வீச்சு
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1313 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 4, 2021

# ஒன்ராறியோ மாகாணப் பாடசாலைகள் 2021 இலையுதிர் காலம் வரை மூடப்பட்டிருக்கும்



கனடா ஒன்ராறியோ மாகாணத்தில் வேகமாக அதிகரித்துவரும் **B.**1.617.2 வகையான கொரோணா திரிபு தொற்றிலிருந்து மக்களைக் காக்கும் வகையிலும், அதிக-ளவிலான மாணவர்கள், பாடசாலைப் பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பங்கள் ஆகியோர் தமக்குத் தேவையான தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கான கால அவகாசத்தை வழங்கும் பொருட்டும், மாகாணமெங்குமுள்ள சிறுவர் பாடசாலைகள் மற்றும் உயர் கல்லூரிகள் ஆகியன மாணவர்களுக்கு தொடர்ந்தும் இணையவழி ஊடாக வகுப்புகளை எதிர்வரும் 2021 இலையுதிர்காலம் வரை நடத்துவதென்ற முடிவினை ஒன்ராறியோ அரசாங்கம் எடுத்துள்ளது. இம்முடிவானது தடுப்பூசி வழங்குவதை விரைவுபடுத்துவதில் கவனம் செலுத்தவும், கோடைகாலத்தினைப் பாதுகாப்பானதாக வைத்திருக்கவும், வருகின்ற செப்டெம்பரில் ஆரம்பிக்கும் 2021-22 கல்வியாண்டில் மாணவர்கள் வகுப்புகளுக்குத் திரும்பவும் உதவியாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. *(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

# கனடாவில் 'சூரியன்', 'உதயன்' பத்திரிகைகளில் எழுதி வந்த தமிழ்நாடு இலக்கிய கலாநிதி நிர்மலா சுரேஷ் சென்னையில் இயற்கையெய்தினார்



முன்னாள் சென்னை தொலைக்காட்சி செய்தி அறிவிப்பாளரும், பேச்சாளரும், கவிஞருமாகிய கலாநிதி நிர்மலா சுரேஷ் அவர்கள் சென்னையில் இயற்கையெய்தினார் என்ற செய்தியை எமது வாசக அன்பர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம். அவரை கௌரவிக்கும் முகமாக 27 ஆண்டுகளுக்கு முன்னர் 'சூரியன்' வார இதழில் பிரசுரமான அவரது பேட்டியை உள்ளே 17ம் பக்கத்தில் மறு பிரசுரம் செய்துள்ளோம்

*(பிரதம ஆசிரியர்)*

# "ஒன்றாரியோவில் முதற் தடவை அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள், வேறு வகை தடுப்பூசிகளை இரண்டாம் தடவை பெற்றுக்கொள்ளலாம்" – ஒன்றாரியோ தலைமை மருத்துவ அதிகாரி

"ஒன்றாரியோ மாகாணத்தில் முதற் தடவை அஸ்ட்ராஜெனெகாவின் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள், அதனைப் பெற்று 12 வாரங்கள் கடந்திருந்தால், ஃபைசர் அல்லது மாடர்னா தடுப்பூசிகளை இரண்டாவது தடவை பெற்றுக்கொள்ளலாம்" என்று ஒன்றாரியோ தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் டேவிற் வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

மிக விரைவில் பதவி விலகவுள்ள அவர் நேற்று ஒன்றாரியோ பாராளுமன்றமான 'குயின்ஸ்பார்க்' இல் இந்த தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியிலிருந்து அரிதான இரத்தக் கட்டிகளால் ஏற்படும் ஆபத்து அதிகரிப்பதைப் பற்றிய கேள்விகளுக்குப் பின்னணியில், முக்கியமாக முதல் தடுப்பூசிகளுக்குப் பிறகு, பல்வேறு வகையான தடுப்பூசிகளைக் கலந்து பெற்றுக் கொள்ளலாம் என்ற கருத்துக்கள் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டிய அவர் இந்த வார தொடக்கத்தில் நோய்த்தடுப்புக்கான தேசிய ஆலோசனைக் குழு இதனை அங்கீகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

"அஸ்ட்ராசெனெகா தடுப்பூசியை முதல் தடவை பெற்ற அனைவருக்கும் **COVID-19** தடுப்பூசியை இரண்டாவது தடவை பெறுவது மிக முக்கியம்" என்றும் வில்லியம்ஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
* North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

# போர்க் கால அவலங்கள்: திருடன் கையில் சாவி

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

இலங்கையில் போர்க் காலத்தில் காணாமல் போனவர்கள், சரணடைந்த அல்லது உறவுகளால் கையளிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களின் கதி என்னவாயிற்று என்பது இன்னும் தெரியாமல் உற்றார் உறவினர்கள் சொல்லொணா துன்பத்தில் தத்தளிக்கின்றனர்.

இந்நிலையில் போர்க் காலத்தில் இலங்கை பொலிஸ் தலைவராக இருந்த ஒருவரை காணாமல் போனவர்களைக் கண்டறியும் அலுவலகத்தின் (ஓஎம்பி) தலைமைப் பொறுப்புக்கு நியமித்துள்ளது சர்வதேச அளவில் கடும் விமர்சனம் மற்றும் கண்டனங்களை எழுப்பியுள்ளது.

போர்க் குற்றங்களை ஆவணப்படுத்தும் - ஜொஹனஸ்பர்கை தலைமியிடமாகக் கொண்டு இயங்கும் உண்மை மற்றும் சமாதானத்திற்கான செயற்திட்டம் (ஐடிஜேபி), போர்க் காலத்தில் காவல்துறைக்குத் தலைவராக இருந்த ஒருவரை ஓஎம்பி அலுவலகத்திற்கு தலைவராக நியமித்துள்ளது இலங்கையில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இடைக்கால நீதி வழங்கு பொறிமுறைகள் முற்றாக இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளதைக் காட்டுகிறது என்று கூறியுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால நீதி வழங்கும் அந்தப் பொறிமுறை முந்தைய அரசால் ஏற்படுத்தப்பட்டது.

ஓஎம்பி அலுவலகத்தின் தலைவராக முன்னாள் பொலிஸ் மா அதிபர்



ஜயந்த குமார விக்ரமரட்ண நியமிக்கப்பட்டுள்ளது காணாமல் போனவர்களின் குடும்பத்தாருக்கு உண்மை தெரியவும் நீதி கிடைக்கவும் இருந்த வழிமுறையை முற்றாக இல்லாமல் செய்துவிட்டது என்று இடைக்கால நீதி வழங்கல் பொறிமுறையில் முன்னணி சர்வதேச வல்லுநர்களில் ஒருவரும் ஐடிஜேபி அமைப்பின் செயல் இயக்குநருமான யாஸ்மின் சூக்கா விமர்சித்துள்ளார்.

"இது ஏற்புடையது அல்ல - இலங்கையில் போர் முடிவடைந்த நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதில் தொடர்புடைய மூன்று பொலிஸ் பிரிவுகளுக்குத் தலைமையேற்றிருந்தார் என்று ஐ நா விசாரணைகளில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவர் தற்போது காணாமல் போனவர்கள் குறித்து விசாரணைகளை நடத்துகிறார். பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் திட்டமிட்ட சித்திரவதைகளில் ஈடுபட்ட பொலிஸ் பிரிவுகளுக்குப் பொறுப்பு வகித்தவர் என்கிற முறையில் - வெளிநாடுகளுக்கு பயணித்தால் சர்வதேசளவில் வழக்குகளை எதிர்கொள்ள நேரிடும் ஆபத்திலுள்ள ஒரு உயரதிகாரி ஓஎம்பி தலைமைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்" என்று ஐடி ஜே பியின் செயல் இயக்குநர் யாஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்களுக்கான அந்த ஓஎம்பி அலுவலகம் போர்க் காலத்தில் காணாமல் போன பல்லாயிரக்கணக்கானவர்களின் கதி என்னவாயிற்று என்பதைக் கண்டுபிடித்துக் கூற வேண்டிய கடப்பாடு கொண்டதாகும்.


அந்த ஓஎம்பி அலுவலகம் கடந்த 2016ஆம் ஆண்டு நாடாளுமன்ற சட்டமொன்றின் மூலம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இன்று வரை அந்த அலுவலகத்தால் ஒருவர் கூட கண்டுபிடிக்கப்படவில்லை என்பதோடு மட்டுமின்றி, 12 ஆண்டுகளாகக் கதறி அலையும் உறவுகளுக்கு காணாமல் போனவர்கள் குறித்து எவ்விதமான ஆக்கபூர்வ தகவல்களும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டுப் போரின் போது கடத்தப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் குறித்த முறைப்பாடுகளை விசாரிக்க முன்னாள் நீதிபதி மேக்ஸ்வெல் பரணகம தலையில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவொன்று சுமார் 20,000 பேர் "காணாமல் போனது உறுதி" என்று கண்டறிந்தது. ஆனால் ஐ நா உட்பட சர்வதேச அமைப்புகள் இந்த எண்ணிக்கை இரட்டிப்புக்கு மேலாக இருக்கும் என்று கூறியுள்ளன.

குறிப்பாக "வெள்ளைக் கொடி கொலைகள்" குறித்து தனியானதொரு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.

மிகவும் சர்ச்சைக்குரிய ஓஎம்பி அலுவலகத்திற்கு சர்வதேச நன்கொடையாளர்கள் அளிக்கும் நிதியுதவியை நிறுத்தக் கோரி அவர்களுக்கு எழுதப்போவதாக யாஸ்மின் சூக்கா அம்மையார் கூறியுள்ளார்.

"இலங்கைக்குள்ளும் வெளியேயும் இருக்கும் பாதிக்கப்பட்ட சமூகங்களை ஐ நா உட்பட சர்வதேச கொடையாளர்களுக்கு எழுதும்படி நாம் வலியுறுத்துவோம். தத்தமது நாடுகளில் வரி செலுத்துவோர் மூலம் கிடைக்கும் நிதி, இலங்கையில் நடைபெற்ற குற்றச் செயல்களை மூடி மறைத்து தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் இருக்கும் கலாச்சாரத்தை ஆதரிப்பவர்களுக்கும் செல்லாமல் இருப்பதைத் தடுக்க நாங்கள் கோருவோம்".




அது மட்டுமின்றி தமது அமைப்பு ஐ நா உட்பட உறுப்பு நாடுகள் அனைத்திற்கும் இலங்கையில் சர்ச்சைக்குரிய வகையில் இடம்பெற்றுள்ள நியமனங்கள் தொடர்பில் இரகசிய ஆவணங்களை தமது அமைப்பு அளிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தொடரும் அவமானங்கள்

ஏற்கனவே ஓஎம்பி அலுவலகத்தின் தலைவராக நீதிபதி உபாலி அபேரட்னே நியமிக்கப்பட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அவரது நியமனம் "ஒரு அவமானம் மற்றும் ஒரு வன்முறைச் செயல்" என்று




இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் கடுமையாக விமர்சித்திருந்தன.

அரசியல் பழிவாங்கல் குறித்த குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரிப்பதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவான் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் தலைவராக இருந்தவர். மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலான பல வழக்குகளில் "தலையிட்டு சட்ட நடவடிக்கைகளில் குறுக்கீடு செய்தவர்" அவர், மேலும் சட்ட வழிமுறைகள் மீறலில் ஒரு "குறியீடாக" இருந்தவர் என்று ஐ நா மனித உரிமைகள் ஆணையர் மிஷேல் பஷேலா அம்மையார் கூறியுள்ளார்.

காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் அலுவலகத்திற்கு அவரைத் தலைவராக நியமித்தது அந்த அலுவலகத்தின் சுயாதீனம் மற்றும் நம்பகத்தன்மையைப் பெரியளவில் சீர்குலைத்து அது எந்தளவுக்கு திறமையாகச் செயல்பட முடியும் என்பது குறித்த கேள்விகளை எழுப்புகிறது என்று ஐ நா கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடைக்கால நீதி வழங்க அமைக்கப்பட்ட இரண்டு அமைப்புகளில் ஓஎம்பி ஒன்று மற்றொன்று பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கும் அலுவலகம். மிகவும் உணர்வுபூர்வமான இந்த இரண்டு அமைப்புகளின் தலைமைப் பதவிகளுக்கு "சீருடை அதிகாரிகளை" நியமித்துள்ளதையும் ஐடிஜேபி கடுமையாகச் சாடியுள்ளது.

அவ்வகையில் இழப்பீடு வழங்குவதற்கு அமைக்கப்பட்டுள்ள அலுவலகமும் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரலும் ஜனாதிபதியின் நெருங்கிய கூட்டாளியுமான வடுக பாலித பியசிறி பெர்ணாண்டோவின் நியமனத்தின் மூலம் இப்போது இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது.

## நீக்கமும் புனர்வாழ்வும்

கடந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவொன்று ஆயுதக் கொள்வனவு மோசடி ஒன்றில் சுமார் 62 மில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உழல் செய்ததான குற்றச்சாட்டில் மேஜர் ஜெனரல் பெர்ணாண்டோ மற்றும் கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் மீது வழக்குத் தொடுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்தது.

அதுமட்டுமின்றி எதிர்காலத்தில் பெர்ணாண்டோ எவ்விதமான அரச பதவிக்கும் நியமிக்கப்படக் கூடாது என்றும் கூறியிருந்தது. ஆனால் ஆட்சி மாறியதும் காட்சிகள் மாறின. கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட மற்றொரு ஜனாதிபதி ஆணைக் குழு மேஜர் ஜெனரல் பெர்ணாண்டோவை அந்தக் குற்றச்சாட்டிலிருந்து முற்றாக விடுவித்தது. இதையடுத்து மூத்த சிவில் நிர்வாக பொறுப்பு ஒன்றுக்கு இராணுவத்தைச் சேர்ந்த அவர் நியமிக்கப்பட்டார். "போரில் இலங்கை இராணுவத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான இழப்பீடு பெருந்தொகையைக் கொண்டதாக இருக்கும். அப்படியான சூழலில் இடைக்கால நீதியை வழங்கும் வழிமுறை இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி இழப்பீடுகளை வழங்கும் அமைப்பிலுள்ள ஒருவர் முன்னர் பொலிசாரின் தீவிர விசாரணைக்கு ஆளானவர். அந்த வழிமுறைக்கு முன்னர் நம்பகத்தகுந்த




வாய்ந்ததாகக் கருதப்பட்டு சர்வதேச சமூகத்தின் ஆதரவும் இருந்தது. எனினும் ஊழல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட அவர் முறையான வகையில் இன்னும் நீதிமன்றத்தின் முன்னர் நிறுத்தப்படவில்லை" என்கிறார் யாஸ்மின் சூக்கா.

தொடரும் சர்ச்சைக்குரிய நியமனங்களில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவில் செய்யப்பட்ட நியமனங்கள் ஒன்றையும் ஐடிஜேபி சுட்டிக்காட்டுகிறது. நாட்டின் முன்னாள் பொலிஸ் மா அதிபரும் தற்போது ஓஎம்பி அலுவலத்தின் தலைவராகவும் உள்ள ஜயந்த விக்ரமரட்னவின் முன்னாள் சகாவான சந்திர நிமால் வக்சித ஊழல் தடுப்பு ஆணைக் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2009 - 10 ஆம் ஆண்டு காலப்பகுதியில் - தொடர்ச்சியாக சித்திரவதைகளுக்கு பொறுப்பான - பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஒன்றுக்கு வக்சித தலைவராக இருந்தார் என்று ஐ நா கூறுகிறது.

சாட்சிகளுக்கான பாதுகாப்பு குறித்தும் தனது கவலையை ஐடிஜேபியின் செயல் இயக்குநர் யாஸ்கின் சூக்கா வெளியிட்டுள்ளார்.

"இலங்கையில் காணாமல் போனோரின் குடும்பங்கள் பாதுகாப்பாக இடைக்கால நீதியை வழங்கும் வழிமுறைகளுடன் ஈடுபட முடியாது. அதில் வன்முறைகள் மற்றும் குற்றங்கள் இடம்பெற்ற காலத்தில் பாதுகாப்பு அதிகாரிகளாக இருந்தவர்கள் இப்போது அந்த வழிமுறைகளில் அங்கம் வகிக்கின்றனர். அடிப்படையில் இந்த வி'யமே சாட்சிகளுக்குப் பேராபத்தையும் அவர்களுக்கான பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கி அவர்களை அபாயத்தை நோக்கித் தள்ளுகிறது".

இந்த அண்டு மார்ச் மாதம் இலங்கை தொடர்பாக ஐ நா மனித உரிமைகள் பேரவையில் நடைபெற்ற விவாதங்களில் சாட்சிகளுக்குப் பாதுகாப்பு ஒரு முக்கிய பேசுபொருளாக இருந்தது என்பதும் பல்வேறு நாடுகளில் உள்ளவர்கள் சாட்சியங்களைச் சேகரித்து அதை ஆவணப்படுத்த வேண்டும் என்பது ஐ நா ஆணையரால் சுட்டிக்காட்டப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது. இதனிடையே சர்ச்சைக்குரிய இந்த நியமனங்கள் குறித்து தாங்கள் புதன்கிழமை (2 ஜூன்) ஐ நா மனித உரிமை ஆணையாளருக்கு அதிகாரபூர்வமாக எழுதியுள்ளதாக ஐடிஜேபி டிவிட்டரில் தெரிவித்துள்ளது.

உதயன் கதிரோட்டம்

# இந்துத்துவத்தை முன்னிலை வைப்பதை மறைமுகமாக காட்டியபடி இந்தியா பாதளத்தை நோக்கி நகர்கின்றது

மதம் என்பது ஒரு அபினைப் போன்றது என்று எழுதி வைத்தாரகள் சமூகவியலாளர்கள். அதைவிட மதம் என்னும் ஒரு ஊடகம் அல்லது ஒரு மார்க்கம் அரசியலின் அடிப்படையாக அமையக் கூடாது என்று பலர் அறிஞர்கள் எழுதிவைத்துவிட்டுச் சென்றுள்ளார்கள். இன்னும் சொல்லப் போனால், ஒரு மதத்திற்கு முன்னுரிமை கொடுத்து ஆட்சியை நடத்திய அத்தனை நாடுகளும் பொருளாதார வீழ்ச்சியைச் சந்திக்கும், அத்துடன் அங்கு சமூகநீதியும் சமத்துவமும் சிறிது சிறிதாக அழிந்து செல்லும் என்பதும் நாம் கடந்து வந்த உலக வரலாறுதான்.

மதம் என்பது மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும், மதம்வேறு, அரசியல் வேறு என்பதை உலகின் ஒரு பகுதியினராவது அறிந்து கொண்டதன் காரணமாகவே இன்னும் உலகம் ஐக்கிய நாடுகள் சபை என்னும் ஒரே அமைப்பின் கீழ் இயங்கி வருகின்றன.

மதம் மனிதனின் பண்பாட்டு எண்ணங்களின் ஒரு தொகுதி, அவனுடைய ஆன்மிகத்தேடல்களின் களம் அது. ஆனால் சமூகம் என்ற நோக்கில் பார்த்தால் உலகியல் அல்லது மானுடவியல் என்ற பரப்பிற்குள் மதத்திற்கு இடம் குறைவாகவே இருக்கவேண்டும் என்பதில் பலருக்கு ஒத்த கருத்துக்கள் உண்டு மதத்தின் பால் ஆழந்த நம்பிக்கை கொண்டு, வேற்று மதத்தினரை மதியாக தன்மை கொண்டவர்கள் மதத்தை அரசியலுக்குள் புகுத்தி அதன் மூலம் அதிகாரத்தை மதசார்ந்ததாக கையில் எடுத்துக் கொள்ளும் நாளுக்காகக் காத்திருப்பார்கள்

இவ்வாறான நிலை அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் தான் இலங்கை மற்றும் இந்தியா என்ற நாடுகளுக்குள் இடம்பெற்று வருகின்றன என்பது கண்கூடாகவே தெரியும் காட்சிகளாகும்

இந்தியாவில் மொழி ஹிந்தி மதம் இந்து, இலங்கையில் மொழி சிங்களம், மதம் பௌத்தம். இந்த அடிப்படையில் அங்கு அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் காணப்படுகின்றன.

இலங்கையில் கிறிஸ்த்தவப் பெரியோர்கள் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக விமர்சனங்களை முன் வைக்கத் தொடங்கியுள்ளார்கள். உதாரணமாக தென்பகுதி கரையோரக் கிராமங்களில் உள்ள கிறிஸ்த்தவர்களான மீனவர்கள், அண்மையில் கடலில் தீப்பிடித்து முற்றாகஎரிந்த கப்பலின் இரசாயனக் கழிவுகளால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு உயிராபத்துக்களோடு காணப்படுகின்றார்கள் என்று கொழும்பு ஆயர் தெரிவித்துள்ளார்.

இதைப் போன்று "இந்தியாவில் கிறிஸ்தவர்கள் தமிழர் கலாசாரத்தை அழிக்கின்ற முயற்சியில் ஈடுபடுகின்றனர்" என இந்துக் கட்சியின் தலைவர் அர்ஜீன் சம்பத் குற்றம்சாட்டியுள்ளார்.

அத்துடன் அவர் இலங்கை விவகாரத்திலும் கருத்துச் சொல்லும் அளவிற்கு வந்து இந்தியா ஆதரவுடன் இந்து தமிழீழம் மலர்ந்திட இந்து மக்களின் கட்சி தனது பணிகளை முன்னெடுக்கும் என்று அண்மையில் தெரிவித்துள்ளார். ஈழத் தமிழ் மக்களுக்காக தமிழீழம் அமைக்கும் நோக்கத்துடன் இயங்கிய விடுதலைப் புலிகள் அமைப்பையும் அதன் போராளிகளையும் பொதுமக்களை கொன்றழித்த நாடுகளில் இந்தியா முக்கிய பங்கு வகித்தது என்பது எமது மக்கள் அறிந்த முக்கியமான தகவலாகும். அர்ஜீன் சம்பத் போன்று இன்னும் பலர் இந்த வகையான கோசத்தோடு இனிமேல் இலங்கைக்கும் செல்வார்கள். இவ்வாறான மதம் சார்ந்த விடயங்களை முன்னிலைப்படுத்துவர்களால் அடிமட்ட மக்களுக்குத் தான் பாதிப்பு. உதாரணமாக இந்தியாவில் மதம் சார்ந்த பிரிவினை வாதத்தை தூண்டும் வகையில் ஆட்சி நடத்தும் மோடி அவர்களால் நாடு எதிர்காலத்தில் துண்டாடப்பட்டும், பொருளாதார வீழ்ச்சி கண்டும் வாடி நிற்கும் போதும், அவர் முகத்தில் சிரிப்போ அன்றி அழுகையோ இருக்காது. ஆனால் சாதாரண மக்கள் தான் அழுது கொண்டிருப்பார்கள். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

# ஈழத் தமிழினத்தின் பெருமையினை பரப்பும் நரம்பியல் நிபுணர் பாவலன் ராஜேந்திரன்!



"வந்தாரை வரவேற்று வாழ வைக்கும் வையா புரி கனடா" என்பதனை நிருபித்துள்ளார் மதி நுட்பம் மிகுந்த ஈழத் தமிழ் இளைஞரான திரு.பாவலன் ராஜேந்திரன். சிறந்த மதி நுட்ப மும், கல்வியில் கண்ணும் கருத்தும் மிக்கவரான இவர் திரு. திருமதி ராஜேந்திரன்-வனிதா தம்பதியின் செல்வப் புதல்வராவார். பாவலன் அவர்கள் தற்போது ஒரு நரம்பியல் நிபுணர். பல்கலைக் கழகம் சென்று வைத்தியத் துறையில் கற்று விசேடமாக நரம்பியல் நிபுணராக சித்தியடைந்து பட்டம் பெற்றுள்ளமை அவரது குடம்பத்தினருக்கு மாத்திரமல்ல ஈழத் தமிழினத்துக்கே பெருமை சேர்க்கும் விடயமாகும்.

எமது தாயகத்தில் இனவாத அரசின் அடக்கு முறைகள் காரணமாக அங்கிருந்து வெளியேறிய இலட்சக் கணக்கான தமிழ் மக்களில் ஒரு தம்பதியாக அதுவும் அகதிகளாக கனடாவுக்கு வந்து அடைக்கலம் தேடிக்கொண்ட ஈழத் தமிழ் பெற்றோரான திரு.திருமதி ராஜேந்திரம்-வனிதா குடும்பமும் ஒன்றாகும். அவர்களது மகனான திரு. பாவலன் இன்று பார் போற்றும் வைத்திய நிபுணராக படித்து பட்டம் பெற்றுள்ளமை நம் ஈழத் தமிழினத்துக்கே பெருமையாகும். அது மாத்திரமன்றி நமது ஏனைய தமிழ் இளைஞர்களுக்கும் உற்சாகத்தினை ஏற்படுத்தும் ஒரு உதாரண புருசராகவும் திகழ்கிறார், பாவலன் அவர்கள். இவரைப் போன்று ஏனைய தமிழ் இளைஞர்களும் கல்வியில் அக்கறை செலுத்தி பல்துறை அறிஞர்களாக உலகெங்கும் வலம் வர வேண்டும் என வாழ்த்துவோம்.

*- (வீரகேசரி மூர்த்தி)*


பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com



**யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பெற்ற "அம்மா" மிளகாய்த்தூள்**

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பெற்ற "அம்மா" தரமான மிளகாய்த்தூள் தற்போது கனடாவில் கிடைக்கின்றது. பைகளில் பொதி செய்யப்பட்டு விற்பனையாகும் "அம்மா" மிளகாய்த்தூளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோருக்கு வீடுகளில் விநியோகிக்கப்படும்.

விபரங்களுக்கு:
கௌரி: (416) 832-6345

**BASEMENT FOR RENT**

Brimley/ Ellesmere சந்திப்பிற்கு அருகில் உள்ள வீடொன்றில் இரண்டு அறை கொண்ட BASEMENT உடனடியாக வாடகைக்கு உண்டு. SEPARATE ENTRANCE உள்ளது. ஒரு குளியல் அறை, இரண்டு வாகனங்கள் தரிப்பிடம், சலவை இயந்திரம், மற்றும் சில தளபாடங்களும் வழங்கப்படும். 401, SCARBOROUGH TOWN CENTRE, பாடசாலைகள் ஆகியன அருகில். செல்லப்பிராணிகள் மற்றும் புகைத்தல் தவிர்க்கப்பட்டுள்ளது.

விபரங்களுக்கு:
ராஜ்: (647) 456-3144

**தையல் வேலை வாய்ப்பு**

ஸ்காபுறோவில் Markham-Finch சந்திப்பிற்கு அருகில் உள்ள தொழிற்சாலையொன்றில் தையல் மெசினில் வேலை செய்வதற்கு உடனடியாக வேலையாட்கள் தேவை. மணித்தியாலத்திற்கு 20 டாலர்கள் வழங்கப்படும். தங்களுக்கு வசதியான நேரங்களிலும் வேலை செய்யலாம்.

தொடர்புகளுக்கு காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை அழைக்கவும்.
647-986-7797

**Help Wanted**

Full-time / Part-time sprayer & sander needed for a furniture finishing shop.

Call:
(416) 636-3655

**LOYAL PEST CONTROL**

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RANJAN: (416) 464-2415

**COMPUTER REPAIR**

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

**RENOVATION WORK**

Call us for all your renovation needs:
- Basement
- Painting
- Bathroom Reno
- Kitchen Reno
- Permits, and Construction

416-706-8160

**இந்தியன் விசா**

- AIR TICKETS
- OCI - NEW APPLICATION/RENEWAL
- ENTRY VISA
- BUSINESS VISA 3 MONTHS/6 MONTHS/ 1 YEAR (Single / Double / Multy)

இலங்கை நாட்டுக்குள் உள் நுழைய, வெளிச்செல்ல தேவையான அரசாங்க ஆலோசனை வழங்கப்படும்.

YARA GLOBAL (PVT) LTD
No. 35, 1/4, Sagara Road, Colombo 4, Sri Lanka.
தொடர்பு: +94 7777 728707
E-mai: info@yaraglobal.lk

**RBS BUSINESS CONSULTANCY**

24 JEFFTON CRES, TORONTO, ON, M1G2R5

SERVICES WE PROVIDE:
BUSINESS CONSULTING
BUSINESS PLAN WRITING
BUSINESS NAME REGISTRATION
OPEN CORPORATION
HST/ BIN/ PAYROLL NUMBER REGISTRATION
MASTER BUSINESS LICENSE
CORPORATE PROFILE REPORT
CORPORATION REVIVAL
CHANGE CORPORATION INFO
IMPORT/EXPORT BUSINESS REGISTRATION
NUANS SEARCH
PERSONAL TAX
FORM FILL-UP OF ANY KIND INCLUDING IMMIGRATION
ORDER CHEQUES

CALL:
RAMNEET SAMDHYAN
(437) 771-5294
FOR ANY QUESTIONS

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையின் சூழலிற்கும் மண்ணிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்கள் இறக்குமதியை அனுமதிக்க முடியாது என்கிறார் விஜித ஹேரத் எம்.பி



எங்கள் நாட்டின் சூழலிற்கும் மண்ணிற்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பொருட்களை இறக்குமதி செய்வதை யாருமே அனுமதிக்க முடியாது. தற்போது சீனாவின் நகர கழிவுகளை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என ஜேவிபி குற்றம்சாட்டியுள்ளது. ஜேவிபியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இதனை தெரிவித்துள்ளார். இதன் மூலம் இரசாயன உரங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை விட மிக மோசமான சூழல் பாதிப்புகள் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போது கார்போனிக் உரங்களை இறக்குமதி செய்வதை நாங்கள் எதிர்க்கின்றோம் என தெரிவித்துள்ள அவர் கார்போனிக் உரங்களை விவசாயிகள் பெறுவதற்கான உரிய பொறிமுறைகளை அறிமுகப்படுத்திய பின்னர் இரசாயன உரங்களையும் எப்போதோ தடை செய்திருக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கார்போனிக் உரங்களை இறக்குமதி செய்கின்றோம் என்ற போர்வையில் தனது வர்த்தகர்கள் மூலம் யூரியாவை தெளிப்பதன் மூலம் இந்த நகரக்கழிவுகளை கார்போனிக் உரம் என தெரிவித்து சீனா பல நாடுகளிற்கு அவற்றை விற்பனை செய்கின்றது என விஜிதஹேரத் தெரிவித்துள்ளார்.ஆனால் தற்போது அவ்வாறான பொறிமுறையில்லை. தேயிலை தொழிற்துறை பெரும் நெருக்கடியில் உள்ளது. சிங்கப்பூரிற்கு தங்கள் உற்பத்திகளை ஏற்றுமதி செய்த காய்கறி விவசாயிகள் தங்கள் சந்தைகளை இழக்கும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளில் தடுப்பூசிக்கு வரவேற்பு குறைவாகக் காணப்படுகின்றதா?

"கொரொனாவிலிருந்து நாம் மீண்டு வர தடுப்பூசி ஒரு முக்கிய காரணியாக உள்ளது. இதை விட வேறு ஒரு மருத்துவ கண்டுபிடிப்பு எமக்கு ஒரு போதும் கிடையாது. இவ்வாறான நிலையில், யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளில் தடுப்பூசிக்கு வரவேற்பு குறைவாக காணப்படுகின்றது. எனவே மக்கள் கோவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து விடுபட அனைவரும் அச்சமின்றி தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் மேலும் மக்கள் அனைவரும் அச்சமின்றி தமக்கென அறிவிக்கப்பட்ட நாட்களில் உரிய இடத்திற்குச் சென்று தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கோவிட்-19 தொற்றுநோய்க்கொதிரான தடுப்பூசியைக் பெற்றுக்கொள்வது உங்களையும் உங்களுக்குப் பிரியமானவர்களையும் இக் கோவிட்-19 தொற்றுநோயிலிருந்து பாதுகாப்பதுடன் எமது சமூகத்தையும் பாதுகாப்பதாக அமையும் என்றுள்ளது." என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கோவிட்-19 உலகளாவிய தொற்றின் மூன்றாவது அலை இன்று இலங்கையில் வெகு தீவிரமாகப் பரவி வருவதுடன் இவ்வேளையில் இறப்பு வீதமும் மிக அதிகமாக உள்ளது.

இந்நிலையில் எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எமக்கு முன்னால் உள்ள தெரிவுகள் மிகச்சிலவே.

அவையாவன;
மக்கள் பொதுச் சுகாதார நடைமுறைகளான முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல், சரியான முறையில் கைகளைக் கழுவுதல் என்பவற்றைக் கடைப்பிடித்தல்.
தொற்றுக்குரிய நடமாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் நடமாட்டத் தடை.
தடுப்பூசியை அதிகளவு மக்களுக்கு பெற்றுக் கொடுத்தல்.

இவ்வகையில் மக்கள் பொதுச் சுகாதார நடைமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிப்பது போதாமையால் இன்று வரை கோவிட்-19 தொற்றைக் கட்டுப்படுத்த முடியாது உள்ளது. அதேவேளை நடமாட்டத் தடைகள் மக்களை பொருளாதார அடிப்படையில் கடுமையாகப் பாதிப்படையச் செய்கின்றன.

நோய்ப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை நடமாட்டத் தடையைப் பேணுவது என்பது பல குடும்பங்களின் வாழ்வாதாரங்களை மீள முடியா அழிவுக்கு இட்டுச் சென்றுவிடலாம்.

இந்நிலையில் எமக்கு மீதமாக உள்ள ஒரே ஒரு உபாயம் தடுப்பூசிகளை அதி களவு மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதுவே.

அரசு அனைத்து மக்களுக்கும் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொடுக்க தன்னாலான முயற்சிகளைச் செய்து வருகின்றது. அவ்வகையில் இலங்கையில் தொற்று அதிகம் எனத் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் யாழ்ப்பாணமும் உள்ளடங்குவதால், சினோபார்ம் தடுப்பூசிகள் முன்னிலை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக எமக்குக் கிடைத்த 50,000 தடுப்பூசிகள் 30.05.2021 ஞாயிற்றுக்கிழமை முதல் யாழ்ப்பாண மாவட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால் வருந்தத்தக்க வகையில் யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளில் தடுப்பூசிக்கு வரவேற்பு குறைவாகக் காணப்படுகின்றது.

சினோபார்ம் தடுப்பூசியானது நோய் ஏற்படுத்த முடியாத செயலிழக்கச் செய்யப்பட்ட கோவிட்-19 வைரசைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அத்தடுப்பூசியானது எமது உடலில் செலுத்தப்பட்டவுடன் கோவிட்-19 வைரசுக்கெதிரான பிறபொருள் எதிரிகளை எமது உடலின் நிர்ப்பீடனத்தொகுதி உற்பத்தி செய்வதற்குரிய பொறிமுறையை உருவாக்கும். இவ்வாறு பழக்கப்பட்ட எமது நிர்ப்பீடனத் தொகுதியானது செயற்றிறன் உள்ள நோயை உருவாக்கும் வைரஸ் தொற்றும் போது அதற்கெதிராகச் செயற்படும். பிறபொருளெதிரிகளை உருவாக்கி உடனடியாக அவ் வைரசை அழிக்கும்.

இதன் மூலம் எமக்கு நோய் ஏற்படுவது அல்லது நோயினால் ஏற்படும் பாதிப்புகள் அற்றுப்போகின்றன.

இதுவரை உலகம் முழுவதும் 180 கோடி மக்கள் இக் கோவிட்-19 நோய்க்கெதிராக ஏதாவது ஒரு வகை தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

சினோபார்ம் தடுப்பூசியானது சீனாவின் சனத்தொகையில் 67 கோடி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இத் தடுப்பூசியானது இலங்கையுடன் சேர்த்து இதுவரை 69 நாடுகளைச் சேர்ந்த 10 கோடி பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையிலும் 15 இலட்சம் மக்கள் கோவிட்-19 க்கு எதிரான தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர். அதில் 6 இலட்சம் பேருக்கு சினோபார்ம் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை எமது நாட்டின் ஏனைய பாகங்களிலும், கடந்த இரண்டு நாள்களாக யாழ்ப்பாணத்திலும் வழங்கப்பட்ட தடுப்பூசிகளினால் எந்தவொரு பாதகமான விளைவும் ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை.

மேலும், பாலூட்டும் தாய்மார் மிகவும் பாதுகாப்பாக இத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள இயலும் என உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைக்கின்றது. தடுப்பூசிக்குப் பிறகு தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்துமாறு உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைக்கவில்லை.

இத் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர் சிலருக்கு கோவிட்-19 நோய்தொற்று ஏற்பட்ட போதிலும் மிக மெல்லிய நோய் அறிகுறிகளே ஏற்பட்டுள்ளன.

பெரும்பாலான வேளைகளில் அறிகுறிகள் ஏதும் இன்றியே இந்நோய் குணமடைந்து விடுகின்றது. எனவே தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களில் கோவிட்-19 நோய் தொற்றினால் இறப்பு ஏற்படுவது இல்லை.

மேலும் சீனாவின் சினோபார்ம் தடுப்பூசிகளால் ஏற்படும் பாதகமான விளைவுகளின் வீதம் மிகக் குறைவாகும். இத்தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதால் ஏற்படும் நன்மைகள், நோய் ஏற்பட்டால் வரும் ஆபத்துகளை விட மிக அதிகம் என்று சீன நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

சினோபார்ம் தடுப்பூசிகளினால் ஏற்படக்கூடிய பொதுவான பக்க விளைவுகளாக காய்ச்சல், உடற்சோர்வு மற்றும் தடுப்பூசி வழங்கப்பட்ட இடத்தில் வீக்கம் ஏற்படலாம். ஆனால் இவை மிக மிக அரிதாகவே ஏற்படும்.

மக்கள் தொகையில் குறைந்தது 70 வீதமானோர் தடுப்பூசிகளைப் போட்டால் மட்டுமே நாட்டில் கோவிட்-19 நோய்த் தொற்றை இல்லாதொழிக்க முடியும். அதன் மூலமே தடுப்பூசி போடுவதற்கு விருப்பமிருந்தும் உடல் நோய் நிலைமைகளால் போடாதவர்களைப் பாதுகாக்க முடியும்.

கர்ப்பிணிப் பெண்கள், குருதியுறைதல் தொடர்பான நோய் உடையவர்கள் மற்றும் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய ஒவ்வாமை ஏற்பட்டு தீவிர சிகிச்சை பெற்றவர்கள் மட்டுமே இக் கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியாது.

சிலவகை மருந்துகள், ஊசி மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு அவசர சிகிச்சைப் பிரிவுகள் உள்ள வைத்தியசாலைகளில் தடுப்பூசி பெற்றுக்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. என்றும் அவர் தெரிவித்தார்.



# மன்னாரில் பசியோடு அலைந்த கட்டாக்காலி நாய்களுக்கு உணவு வழங்கிய பொலிஸார்

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக விதிக்கப்பட்டுள்ள பயணக்கட்டு காரணமாக மக்கள் மாத்திரம் இன்றி மிருகங்களும் உணவு இன்றி பாதீக்கப்பட்டுள்ளது.

- மன்னார் மாவட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாடு காரணமாக மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதோடு,மக்களின் நடமாட்டம் இன்றி மன்னார் நகரம் காணப்படுகின்றது.
- இதனால் மாவட்டத்தில் உள்ள கட்டாக்காலி நாய்கள் உணவு இன்றி உள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல்ல வீரசிங்க அவர்களின் எண்ணக்கருவிற்கு அமைவாக மன்னார் மாவட்ட போக்கு வரத்து பொலிஸ் பிரிவினர் இணைந்து மன்னார் மாவட்டத்தின் தற்போதைய பயண கட்டுப்பாடு மற்றும் கடை அடைப்பினால் கட்டாக்காலி நாய்கள் உணவு இன்றி தவிர்த்து வருகின்ற நிலையில் இன்று வியாழக்கிழமை (3) காலை போக்குவரத்து பிரிவு பொலிஸார் உணவு சமைத்து நகருக்குள் இருக்கும் கட்டாக்காலி நாய்களுக்கு உணவு வழங்கி முன்னுதாரனமாக செயல்பட்டனர்.

**- மன்னார் நிருபர் (03-06-2021)**





கனடிய செய்திகள்
Canadian News

# ஸ்காபுறோவில் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு $ 270,000 இற்கான காசோலை வழங்கிய கனடா சரவணா பவன் உணவக உரிமையாளர்




கனடாவில் உலகப் பகழ்பெற்ற சரவணா பவன் உணவகத்திற்கு மூன்று கிளைகள் உள்ளன. ஒன்றாரியோவின் ஸ்காபுறோ, மிசிசாகா மற்றும் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் ஒன்று என இந்த கிளைகள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. இந்த மூன்று கிளைகளையும் உரிமையாளராக விளங்கி அதனை நிர்வகித்து வருகின்றவர் திரு. கணேசன் சுகுமார் ஆவார்.

அவரது சிந்தனையின் விளைவாக தமது நிறுவனத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை இங்குள்ள வைத்தியசாலைகளுக்கு வழங்க வேண்டும் என்று எண்ணி மொத்த தொகையாக இந்த வருடத்திற்குள் மூன்றரை இலட்சம் டாலர்களை Scarborough Health Network Foundation என்னும் ஸ்காபுறோ நகரில் இயங்கும் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு வழங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த நற்காரியத்திற்கு மேற்படி மூன்று கிளைகளிலும் பணியாற்றும் அனைவரும் தங்கள் ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

இவ்வாறான நிலையில், கொரோனா தொற்றின் தாக்கம் அதிகரித்து மக்களுக்கும் நோய்த் தொற்று ஒரு சவாலாக இருந்த வேளையில், வைத்தியசாலைகளும் தங்கள் சேவைகளை அதிகரிக்க வேண்டி வந்தது. இதனால் நிதி நெருக்கடியை வைத்தியசாலைகள் சந்தித்தன.



எனவே கனடா சரவணா பவன் உணவகக் குழுமத்தின் உரிமையாளர் திரு. கணேசன் சுகுமார், வைத்தியசாலைகளின் இந்த நெருக்கடியான நோய்க் கால சேவைக்காகவும் அங்கு பணியாற்றும் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் அர்ப்பணிப்பான சேவைக்காகவும் உடனடியாக நிதி அன்பளிப்பு செய்ய விரும்பினார்.

இந்த நோய்த் தொற்றுக் காலத்தில் சரவணா பவன் உணவகத்தின் மூன்று கிளைகளிலும் வழைமை போன்று வியாபாரம் நடைபெறாவிட்டாலும், எதிர்பார்த்த வருமானம் கிடைக்காவிட்டாலும், அவர் சோர்ந்து விடிவிடவில்லை.

தங்கள் நோக்கமாக இருந்த தொகையின் ஒரு பெரும் பகுதியாக இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் கனடிய டாலர்களை Scarborough Health Network Foundation நிர்வாகத்திடம் வழங்க வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். இதற்காக வைத்தியசாலையின் பிரதிநிதியாக Rayan Baillie (Vice President of Scarborough Health Network Foundation) அவர்களை அழைத்து இதற்கான காசோலையை வழங்குவதென முடிவடுக்கப்பட்டது.

அண்மையில் சரவணா பவன் உணவகத்தின் ஸ்காபுறோ கிளையில் நடைபெற்ற ஒரு சந்திப்பின் போது, வைத்தியசாலையின் பிரதிநிதியான Rayan Baillie அவர்களிடம் $ 270,000.00 க்கான காசோலை கையளிக்கப்பெற்றது.

மூன்று கிளைகளின் உரிமையாளரான திரு. கணேசன் சுகுமார், ஒன்றாரியோ கிளைகளின் முகாமையாளர் முஜாஹிட் மற்றும் கிளையில் பணியாற்றும் ஊழியர் ஆகியோர் சகிதம் காசோலையைப் பெற்றுக்கொண்ட Rayan Baillie (Vice President of Scarborough Health Network Foundation) ஆகியோர் இங்கு காணப்படும் படங்களில் உள்ளனர்.

இந்த அர்ப்பணிப்பு மிக்க உயர்ந்த சேவைக்கான கனடாவில் இயங்கும் ரொரன்ரோ மனித நேயக் குரல் அமைப்பு தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் கணேசன் சுகுமார் அவர்களுக்கு தெரிவிக்கின்றது.

# கனடா ஒன்ராறியோ மாகாணப் பாடசாலைகள் 2021 இலையுதிர் காலம் வரை மூடப்பட்டிருக்கும்



கனடா ஒன்றாறியோ மாகாணத்தில் வேகமாகப் அதிகரித்துவரும் B.1.617.2 வகையான கொரோணா திரிபு தொற்றிலிருந்து மக்களைக் காக்கும் வகையிலும், அதிகளவிலான மாணவர்கள், பாடசாலைப் பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பங்கள் ஆகியோர் தமக்குத் தேவையான தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கான கால அவகாசத்தை வழங்கும் பொருட்டும், மாகாணமெங்குமுள்ள சிறுவர் பாடசாலைகள் மற்றும் உயர் கல்லூரிகள் ஆகியன மாணவர்களுக்கு தொடர்ந்தும் இணையவழி ஊடாக வகுப்புகளை எதிர்வரும் 2021 இலையுதிர்காலம் வரை நடத்துவதென்ற முடிவினை ஒன்றாறியோ அரசாங்கம் எடுத்துள்ளது. இம்முடிவானது தடுப்பூசி வழங்குவதை விரைவுபடுத்துவதில் கவனம் செலுத்தவும், கோடைகாலத்தினைப் பாதுகாப்பானதாக வைத்திருக்கவும், வருகின்ற செப்டெம்பரில் ஆரம்பிக்கும் 2021-22 கல்வியாண்டில் மாணவர்கள் வகுப்புகளுக்குத் திரும்பவும் உதவியாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

உளநலம் சார்ந்த சவால்களை எதிர்கொள்ளும் அல்லது அவற்றுக்கான சாத்தியக்கூறுகளையுடைய மாணவர்களுக்கு பாதுகாப்பான திட்டங்களை கல்விச்சபைகள் தொடர்ந்தும் வழங்கும். இத்திட்டமானது இணையவழி ஊடாக அல்லது நேரடியான சேவைகளையுள்ளடக்கிய பாடசாலை, சிறுவர் மற்றும் இளையோர் உளநல சமுக சேவைகளை வழங்குவோர் அல்லது பிரதேச சுகாதார சேவை வழங்குனர்கள் ஊடாக தொடர்ந்தும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். மெய்நிகர் வகுப்புகளில் கற்க முடியாத விசேட தேவைகள் உள்ள மாணவர்களுக்கென ஜூன் இறுதிவரை பாடசாலைகள் திறந்திருக்கும். மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் குடும்பங்கள் தமக்கான உளநல சேவைளை மாநிலத்தில் ஒவ்வொரு நாளும் 24 மணிநேர ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் போன்ற சேவைகளை வழங்கக்கூடிய கல்விச்சபைகள், சிறுவர்களுக்கான உதவி தொலைபேசி சேவை மற்றும் பிற சேவை வழங்குநர்கள் மூலமாகவும் பெற்றுக்கொள்ளக்கூடியதுடன், ஒன்ராறியோ பாடசாலை உளநல சேவை மற்றும் மாநில சிறுவர் மற்றும் இளையோர் உளநல சேவை முகவர்களினூடாக கிடைக்கும் சேவைகளையும் தொடர்ந்து பெற்றுக்கொள்ளலாம்.

இதேவேளை, ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் இந்த தீர்மானம் தொடர்பாக தனது கருத்தை வெளியிடும் போது பின்வருமாறு தெரிவித்தார் "சிறப்பு உளவள சிகிச்சை சேவைகளுக்கென மக்கள் அணுகும் துறைகளை மேம்படுத்துவதற்கு ஒன்றாறியோ அரசாங்கம் 31 மில்லியனுக்கும் அதிகமான தொகையை வழங்குகிறது. இது, மேற்படி சேவைகளுக்கென காத்திருக்கும் காலத்தினை குறைப்பதுடன் கோவிட்-19 நோய்த்தொற்றுக் காலத்தில் சிறுவர் மற்றும் இளையோர் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவும். இந்நிதியானது மக்களின் ஆரோக்கியத்துக்கெனவும், சில பழங்கங்களுக்கு அடிமையான ஒன்றாறியோவிலுள்ள அனைத்து வயதினருக்குமான விரிவான ஒன்றிணைந்த உளநல திட்டத்துக்கெனவும் அரசாங்கத்தினால் எதிர்வரும் 10 ஆண்டுகளுக்கு உறுதியளித்த 3.8 பில்லியன் நிதியுதவியின் ஒரு பகுதியாகும்".

**இந்த தகவல், மாநில சட்டமன்ற உறுப்பினர், (ஸ்காபரோ - றூஜ் பார்க்).விஜய் தணிகாசலம் அவர்களது அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்றதாகும்.**

இந்தியா செய்திகள்
India News

# வேல்ஸ் கல்வி நிறுவனம் சார்பில் கொரோனா நிவாரண பணிக்கு ஒரு கோடி வழங்கிய ஐசரி கணேஷ்



தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை இன்று தலைமைச் செயலகத்தில், வேல்ஸ் கல்வி நிறுவனங்களின் தலைவர் மற்றும் வேல்ஸ் பல்கலைக்கழக நிறுவனர் மற்றும் வேந்தர் டாக்டர் ஐசரி கே. கணேஷ் அவர்கள் தனது மனைவி திருமதி. ஆர்த்தி கணேஷ் மற்றும் மகள் செல்வி. பிரீத்தா கணேஷ் ஆகியோர் உடன் சந்தித்து, கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ஒரு கோடியே ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

மக்கள் தொடர்பு: டி.ஒன்.




# ஆதரவற்ற விலங்குகளுக்கு உணவளித்த நடிகை வரலட்சுமி சரத்குமார்

Save Shakti Foundation நிறுவனர் வரலக்ஷ்மி சரத்குமார் அவர்களும் இணை நிறுவனர் சாயா தேவி அவர்களும் திருவல்லிகேணி சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து Save Shakti Foundation, Sankalp Beautiful, World-Pedigree India சார்பில் ஊரடங்கில் ஆதரவற்ற விலங்குகளுக்கு 2 டன் உணவு வழங்கப்பட்டு வருவதன் விவரங்களை அளித்தனர்.

மேலும் Save Shakti Foundation - International Human Rights Organisation - Sankalp Beautiful World - Islamic Foundation Trust - EK foundation சார்பாக கொரோனாவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவ அர்ப்பணிக்கப்பட்ட ஹெல்ப்லைன் பற்றிய விவரங்கள் அளிக்கப்பட்டன.

ஹெல்ப்லைன் மூலம் அளிக்கப்படும் உதவிகள்:

மருத்துவமனை / ஆம்புலன்ஸ் இரத்த வங்கி / ஆக்ஸிஜன் சிலிண்டர் மற்றும் செறிவு மருந்துகள் மருத்துவர்கள் மற்றும் செவிலியர் ஆதரவு ஆலோசனைகள் வீட்டு பராமரிப்பு மற்றும் உணவு தடுப்பூசி உதவி இறுதி சடங்கு உதவி.

# எரிக்கப்பட்ட நூலகமும் எரிக்கப்பட முடியாத அறிவும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



கடந்த 31ஆம் திகதி யாழ் நூலகம் எரிக்கப்பட்டதன் நாற்பதாவது நினைவு நாளை தமிழ் மக்கள் அனுஷ்டித்தார்கள். நூலக எரிப்புக்கு எதிராக கடந்த 40 ஆண்டுகளில் ஒரு பலமான கருத்துருவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்திற்கு எதிரான கருத்துருவாக்கத்தில் அது மிகவும் முக்கியமான ஒரு பகுதி. கடந்த 40 ஆண்டுகளையும் தொகுத்துப் பார்க்கும் பொழுது ஒரு தமிழனாக ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது. எரிக்கப்பட்ட நூலகத்தை தமிழ் மக்கள் எப்படி நினைவுகூர வேண்டும்?

முதலாவதாக அதை எரித்த சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தை உலக அளவில் அம்பலப்படுத்த வேண்டும். அது அதன் தர்க்க பூர்வமாக விளைவாக தமிழ் மக்களுடைய நீதிக்கான போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும். கடந்த 40 ஆண்டுகளாக சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தை அம்பல படுத்துவதற்கான மிக வாய்ப்பான ஒரு சந்தர்ப்பமாக அதை தமிழ் தரப்பு பயன்படுத்தி வருகிறது. நூலக எரிப்பு எனப்படுவது உலகில் மிக அரிதாகவே நிகழ்ந்திருக்கிறது. அது ஒரு பண்பாட்டு இனப்படுகொலை. ஒரு மக்கள் கூட்டத்தின் பிரதான பலம் கல்வி என்று கருதி அந்தக் கல்வியை அழிப்பதாக கற்பனை செய்து கொண்டு எரிக்கப்பட்டதே யாழ் நூலகம் ஆகும். இது காரணமாக நூலக எரிப்புக்கு எதிராக உலகம் முழுவதிலும் ஒரு பலமான கருத்துருவாக்கம் கடந்த 40 ஆண்டுகளில் நிகழ்ந்திருக்கிறது. எனவே இது விடயத்தில் தமிழ் மக்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தை அம்பலப்படுத்தியிருக்கிறார்கள். இது முதலாவது.

இரண்டாவது, எரிக்கப்பட்ட நூலகத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் எரிக்கப்பட முடியாத ஒரு நூலகத்தை தமிழர்கள் கட்டி எழுப்பி இருக்கிறார்கள். அதுதான் நூலகம் பவுண்டேஷன் என்று அழைக்கப்படும் ஒரு டிஜிட்டல் நூலகம் ஆகும். அந்த மெய்நிகர் நூலகத்தை யாருமே எரிக்க முடியாது. இக்கட்டுரை எழுதப்படும் காலத்தில் நூலகம் மெய்நிகர் சேமிப்பகத்தில் ஒரு லட்சத்து ஓராயிரத்து 700க்கும் அதிகமான நூல்களும் ஆவணங்களும் சேமிக்கப்பட்டிருக்கின்றன. ஈழத்தமிழர்கள் மத்தியில் இதுவரையிலும் வெளிவந்த பெரும்பாலான ஆவணங்களை நூலகம் சேமித்து வருகிறது. இது ஒரு மகத்தான சாதனை. எரிக்கப்பட முடியாத ஒரு நூலகத்தை ஈழத்தமிழர்கள் உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் எதை எரித்தாலும் அழித்தாலும் இடித்தாலும் அதன் சாம்பலிலிருந்து பீனிக்ஸ் பறவை போல ஈழத்தமிழர்கள் மீண்டு எழுவார்கள் என்பதற்கான ஒரு மெய்நிகர் குறியீடு நூலகம் பவுண்டேஷன் எனலாம். இந்த ஏரிக்கப்பட முடியாத மெய்நிகர் நூலகம்தான் மெய்யான பொருளில் எரிக்கப்பட்ட நூலகத்திற்கான மிகச் சரியான நினைவு கூர்தல் ஆகும்.

எனினும், இதற்கும் அப்பால் ஈழத்தமிழர்கள் போக வேண்டும் என்பதே இக்கட்டுரையின் பேராசை ஆகும். ஆம், அதை பேராசை என்று தான் கூற வேண்டும். ஏனெனில் கடந்த 40 ஆண்டுகளில் குறிப்பாக கடந்த சில தசாப்தங்களில் தாயகத்தில் இருக்கக்கூடிய நூலகங்களில் வாசிப்பவர்களின் எண்ணிக்கை அவர்கள் எதை வாசிக்கிறார்கள் எதற்காக வாசிக்கிறார்கள் போன்றவற்றைத் தொகுத்துப் பார்த்தால் ஒரு பரிதாபகரமான சித்திரம் நமக்குக் கிடைக்கும். அது என்னவெனில் வாசிப்புப் பழக்கம் தமிழ் மக்கள் மத்தியில் குறைந்து வருகிறது என்பதுதான்.

வளர்ந்தோருக்கான ஒரு கல்வி நிறுவனத்தில் ஆண்டுதோறும் இருபது பேர்களை எடுத்து நடத்தப்படும் ஒரு கணக்கெடுப்பின்படி அந்த இருபதுபேரில் நான்கு பேர்கள்தான் வாசிப்பில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்த நான்கு பேர்களும் பொதுவாக அன்றாட பத்திரிகைகளை வாசிக்கிறார்கள். அதிலும் இருவர்தான் பாடப் புத்தகங்களுக்கு வெளியே அறிவைத் தேடி அல்லது குறைந்தபட்சம் வாசிப்பதால் கிடைக்கும் இன்பத்திற்காகவாவது வாசிக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இந்த நான்கு பேர்களும் யார் என்று பார்த்தால் ஏற்கனவே அரசியலில் அல்லது சமூக செயற்பாடுகளில் ஈடுபட்ட குடும்பங்களில் இருந்து வந்தவர்களாக இருப்பார்கள். அல்லது சில ஆசிரியர்களால் அல்லது அரசியல் சமூக செயற்பாட்டாளர்களால் தூண்டப்பட்ட வர்களாக இருப்பார்கள். இதைத் தவிர ஏனைய 16 பேரும் பாடப் புத்தகங்களுக்கு வெளியே வாசிப்பதே இல்லை என்பதுதான் பயங்கரமான ஒரு உண்மையாகும்.

எரிக்கப்பட்ட பின் இப்பொழுது மீளக்கட்டி வெள்ளையடிக்கப்பட்ட யாழ் நூலகத்துக்கு போய்ப் பார்த்தால் தெரியும். அங்கேயும் சாதாரண நாட்களில் வாசிப்பு பகுதியில் அமைந்திருக்கும் பலரும் பரீட்சையை மையமாகக்கொண்டு படிக்கும் மாணவர்களே. அமைதியான சூழலில் படிப்பதற்காக அவர்கள் நூலகத்தை நாடி வருகிறார்கள். அல்லது தனியார் கல்வி நிறுவனங்களில் இடைவேளையின்போது நேரத்தை வீணடிக்காமல் படிக்க கூடியதை படிக்கலாம் என்று கருதி பாடப் புத்தகங்களோடு நூலகத்திற்கு வருகிறார்கள். இது எரிக்கப்பட்டு பின்னர் மீளக் கட்டி எழுப்பப்பட்ட யாழ் நூலகத்தின் நிலை.

வெளியே பார்த்தால் எல்லா ஊர்களிலும் சனசமூக நிலையங்கள் உண்டு. ஆனால் இந்த சனசமூக நிலையங்கள் பலவற்றில் இப்பொழுது அன்றாட பத்திரிகைகள் மட்டுமே வருகின்றன. சஞ்சிகைகள் நூல்களின் வரத்துக்குறைவு. ஏனென்றால் வாசிப்பவர்கள் குறைவு. சில சனசமுக நிலையங்களில் சிலவேளைகளில் ஆடுகளும் மாடுகளும் இளைப்பாற காணலாம். பெரும்பாலான சனசமுக நிலையங்களில் இளையோரை விட நடுத்தர வயதைக் கடந்தவர்கள்தான் பத்திரிகைகளை வாசிப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது.

அப்படியென்றால் இளையோர் வாசிப்பதில்லையா? இல்லை. வாசிக்கிறார்கள். பெரும்பாலும் இணையத்தில் வாசிக்கிறார்கள். முகநூலில் வாசிக்கிறார்கள். வாட்ஸப்பில் போன்ற கைபேசிச் செயலிகளில் வாசிக்கிறார்கள். கண்ணுக்கும் மனதுக்கும் வேதனையில்லாமல் மேலோட்டமாக நுனிப்புல் மேய்ந்து கடந்து போய்விட விரும்புகிறார்கள். ஆழமாக வாசிக்க விரும்புவோரின் தொகை மிகக் குறைவு. தொகுத்துப் பார்த்தால் தமிழ்ப்பரப்பில் வாசிப்பவர்களின் தொகை குறைந்து வருகிறதா?. ஒருபுறம் சில தன்னார்வ நிறுவனங்கள் ஊர்கள் தோறும் நூலங்களை நிறுவ முயற்சிக்கின்றன. தாயகத்திலிருந்து நூல்களை வெளியிடும் முயற்சிகளும் ஆங்காங்கே முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் பொதுவான கவலை என்னவெனில் ஆழமாக வாசிப்போரின் தொகை அருகிவருகிறதா? என்பதுதான்.

எல்லாவற்றையுமே “ஸ்குரோல்” பண்ணி கடந்துவிட முடியாது. ஆழமாக தியானம் போல தொடர்ச்சியாக வாசித்தால்தான் தொகுத்து ஆராய்ச்சி செய்யலாம்சமூகத்திற்கு புதியனவற்றை கூறலாம்.

நமது கல்விமுறை பாடப் புத்தகங்களுக்கு வெளியே வாசிப்பதை ஊக்குவிக்கவில்லை. இன்னொரு விதமாக சொன்னால் அவ்வாறு வாசிப்பதற்கு நேரமும் இல்லை. பரீட்சைமையக் கல்வியானது பாடப் புத்தகங்களுக்கு வெளியே வாசிப்பதற்கான தேவையை கொன்றுவிட்டது. அது மட்டுமல்ல அது பாடப் புத்தகங்களை வாசிப்பதை விடவும் பாஸ் பேப்பர்களைப் பயில்வது அதிகம் பிரயோசனமானது என்ற நம்பிக்கையை பலப்படுத்துகிறது. ஒருபுறம் மாணவர்கள் பாஸ் பேப்பர்களில் கவனத்தைக் குவிக்கிறார்கள். ஆசிரியர்களோ மாக்கிங் ஸ்கீமின்படி அதாவது புள்ளியிடும் திட்டத்தின்படி படிப்பிக்கிறார்கள். அதன்மூலம் பரீட்சைகளில் அதிகரித்த அடைவு மட்டத்தை காட்டலாம் என்று நம்புகிறார்கள் என்று சுட்டிக்காட்டினார் கிழக்கு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த புலமையாளரான ஒரு நண்பர். இதுதான் நாட்டில் கற்றல் கற்பித்தலின் நிலை.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் வாசிப்பை எப்படி ஊக்குவிப்பது? நாட்டில் எல்லா வீடுகளிலும் கைபேசிகள் உண்டு. குறிப்பாக ஸ்மார்ட்போன்கள் உண்டு. இன்டர்நெட் இணைப்பு உண்டு. ரப்கள் உண்டு. மடிக்கணினிகள் உண்டு. எல்லாவற்றையும் விட முக்கியமாக தட்டையான தொலைக்காட்சிகள் உண்டு. அவற்றுக்கு கேபிள் இணைப்புகள் உண்டு. ஆனால் எத்தனை வீடுகளில் நூலகங்கள் உண்டு? எல்லா தமிழ் வீடுகளிலும் எவர்சில்வர் சாமான்களையும் பொம்மைகளையும் காட்சிக்கு வைக்கும் ஷோகேஸ்கள் உண்டு. ஆனால் எத்தனை வீடுகளில் பாடப் புத்தகங்களுக்கு வெளியே வாசிக்கப்படும் புத்தகங்களுக்கான அலமாரிகள் உண்டு?

இது ஒரு பாரதூரமான கேள்வி. எரிக்கப்பட்ட நூலகத்தை ஆண்டுதோறும் நினைவுகூரும் தமிழர்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி. எரிக்கப்பட முடியாத ஒரு மெய்நிகர் நூலகத்தை கட்டியெழுப்பிய பெருமைக்குரிய மக்கள் அதன் அடுத்த கட்டத்துக்கு போக வேண்டாமா? எல்லா வீடுகளையும் சிறு நூலகங்களாக மாற்ற வேண்டாமா? மாணவர்களை நடமாடும் நூலகங்களாக மாற்ற வேண்டாமா? இதை யார் பொறுப்பேற்பது?

வாசிப்பில் ஆர்வத்தை தூண்டும் வாசிப்பு வட்டங்களை உருவாக்க வேண்டும். பாடப் புத்தகங்களுக்கு வெளியே வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தவேண்டும். நல்லநாள் பெரிய நாட்களுக்கோ அல்லது சாதனைகளுக்கோ வழங்கப்படும் பரிசுகள் புத்தகங்களாக அமையட்டும். எல்லாவற்றையும் விட முக்கியமாக பெற்றோர் நூல்களின் பெருமையை உணர வேண்டும். வாசிப்பின் பெருமையை உணர வேண்டும். பெற்றோர் முன்னுதாரணமாக வாசிக்கத் தொடங்கினால் வீடுகளில் பிள்ளைகள் அதை பின்பற்றுவார்கள். இது உலகம் முழுவதிலும் பின்பற்றப்படும் ஒரு நடைமுறை. பெற்றோர் நூல்களை ஆராதிக்க வேண்டும். அதுதான் எரிக்கப்பட்ட நூலகத்திற்கான நினைவு கூர்தலின் அடுத்தகட்ட வளர்ச்சியாகும்.

ஒருபுறம் 40 ஆண்டுகளாக எரிக்கப்பட்ட நூலகத்தை நினைவுகூரும் ஒரு மக்கள்கூட்டம் இன்னொரு பக்கம் மெய்யாகவே நூல்களை ஆதரிக்கின்றதா என்ற கேள்விக்கு விடைகாண வேண்டும். அவ்வாறு நூல்களை நேசிக்காமல் வாசிப்பை பெருக்காமல் வீடுகளில் சிறு நூலகங்களை கட்டி எழுப்பாமல் நூலகத்தை நினைவு கூர்வது என்பது ஒரு அகமுரண். தமிழ் மக்களின் அடிப்படைப்பலம் அறிவு என்று நம்பி நூலகத்தை எரித்தவர்களுக்கு சரியானதும் பொருத்தமானதுமான பதிலடி என்ன தெரியுமா? தமிழ் மக்கள் தங்களுடைய வாழ்வின் எல்லா தளங்ககளுக்கும் அறிவினால் ஒளி பாய்ச்சுவதுதான். அறிவுக்கும் செயலுக்கும் இடையே இருக்கக்கூடிய இடைவெளியை ஆகக் கூடிய பட்சம் குறைப்பதுதான்.தமிழ் அறிவியலுக்கும் தமிழ் அரசியலுக்கும் இடையில் இருக்கக்கூடிய இடைவெளியை ஆகக் கூடிய பட்சம் குறைப்பதுதான். எரிக்கப்பட்ட நூலகத்தை நினைவு கூர்வது என்பது இங்குதான் முழுமை அடைகிறது. அறிவே பலம்: அறிவே ஆயுதம்: அறிவே சக்தி என்று நம்பும் ஒரு தலைமுறையை கட்டியெழுப்ப வேண்டும்.

**வீணாவின் கவிக்கணை**

மனிதா  
உன் வாழ்வில் நீ  
உன்னை மட்டும் நம்பு,  
அடுத்தவனையல்ல,  
உதவி செய், அன்பு காட்டு,  
ஆனால் பலனை ஒருபோதும்  
எதிர்பார்க்காதே,  
ஏமாந்திடுவாய்,  
உன் வாழ்க்கை,  
உனக்கு அழகான தருணம்  
ஆனால் அடுத்தவன்  
பார்வையில் அது சம்பவம்,  
உன்னைத்தவிர யார்  
உன்னை முழுதாக புரிந்து  
கொள்ளப்போகிறார்கள்,  
உன்மேல் நம்பிக்கை  
வைத்து, உன் கண்களால்  
இவ்வுலகைப்பார்,  
மிகவும் அழகாக இருக்கும்,  
அதிசயங்களும் தெரியும்!

# Help Document the Burning of the Jaffna Public Library as we mark its 40th Anniversary

# யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்ட நாற்பதாவது ஆண்டு நினைவு நாள் யூன் 1, 2021 ஆகும்

யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்ட நாற்பதாவது ஆண்டு நினைவு நாள் யூன் 1, 2021 ஆகும். இந்த நூலகம், எரிக்கப்பட்ட காலகட்டத்தில் தெற்காசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாகும். இந்த எரித்தழிப்பில், ஏறக்குறைய 97,000 விலைமதிப்பற்ற புத்தகங்கள் மற்றும் ஓலைச்சுவடிகள் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன.

2021 யூன் 5 ஆம் தேதி சனிக்கிழமையன்று, கனடியத் தமிழர் பேரவை யாழ்ப்பாண பொது நூலக எரிப்பை ஆவணப்படுத்தும் நோக்குடன் இந்த நினைவு நாளைக் குறிக்கும் வகையில், ஒரு இணையத்தளமொன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நூலக எரிப்புடனான அனுபவங்களைக் கொண்டவர்களும் மற்றும் நூலக எரிப்புக் குறித்த தகவல்களைத் தெரிந்தவர்களும் (416) 240-0078, (647) 300-1973 என்ற தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொள்வதன் மூலமாகவோ அல்லது info@canadiantamilcongress.ca என்ற மின்னஞ்சல் முகவரிக்கூடாகத் தொடர்பு கொண்டு உதவுமாறு, கனடியத் தமிழர் பேரவை வேண்டுகோள் விடுக்கிறது.


-----------------------------------------------


40th Anniversary of the Jaffna Library Burning

The fortieth remembrance anniversary of the burning of the Jaffna Public Library falls on June 1st 2021. At the time of burning, it was one of the largest libraries in South Asia and around 97,000 priceless books and manuscripts were burnt down to ashes.

On Saturday June 5th 2021, the Canadian Tamil Congress (CTC) will launch a website to mark this occasion with the aim of documenting the burning of the Jaffna Public Library.

CTC is making an appeal to those who may have information and own experiences on the library and the incident to please help preserve it by contacting us at (416) 240-0078, (647) 300-1973, info@canadiantamilcongress.ca




TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss


முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9



Toronto சிட்டி கவுன்சிலர்

PAUL AINSLIE

WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE

வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood @Ainslie_Ward24
@cllrainslie Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

# ஹற்றன் வெளி ஓயா தோட்டப்பகுதியில் மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கனடா பாஸ்கரன் சின்னத்துரையின் உதவிகள் சென்றடைந்தன



இலங்கையின் மலையகப் பகுதிகளில் மண்சரிவு மற்றும் மழை காற்று ஆகியவற்றால் தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் பல பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பாதிப்புக்கள் இடம் பெற்ற ஹற்றன் வெளி ஓயா கீழ் டிவிசன் தோட்டப்பகுதியில் மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உ உதவிகள் வழங்குமாறு கனடா மனித நேயக் குரல் அமைப்பினருக்கு கிடைத்து வேண்டுகோளின் பிரகாரம், கனடா வர்த்தகப் பிரமுகர் பாஸ்கரன் சின்னத்துரை அவர்களை நாடியபோது அவர் நிதி அன்பளிப்பை வழங்கினார்.

அவர் வழங்கிய நிதி அன்பளிப்பு பாதிக்கப்பட்ட ஹற்றன் வெளி ஓயா கீழ் டிவிசன் தோட்டப்பகுதியில் மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பணமாக வழங்கப்பெற்றன.


இதற்கான ஏற்பாடுகளை ஹற்றன் பிரதேசத்தில் இயங்கும் "இருபது இருபது இளைஞர் கழகம்" செய்திருந்தது. மேற்படி கழகத்தின் அங்கத்தவர்கள் ஒவ்வொரு குடும்பத்தினரையும் அவர்கள் வாசல் வரை சென்று சந்தித்து அவசர தேவைகளைக் சமாளிக்க பணம் வழங்கப்பட்டது.

கொரோனா கட்டுப்பாடுகளால் வர்த்தக நிறுவனங்களில் தொகையான உலர் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்ய இயலாத காரணத்தாலேயே இவ்வாறு பணம் வழங்கப்பட்டது என்று மேற்படி "இருபது இருபது இளைஞர் கழகம்" கனடா - ரொரன்ரோ மனித நேயக்குரல்" அமைப்பினருக்கு அறியத்தந்துள்ளனர்.

**செய்தி: சத்தியன்**







# கனடா தொழிலதிபர் சங்கர் நல்லதம்பி நிதி உதவியோடு திருகோணமலை கிராம மக்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பெற்றன



இலங்கையில் உள்ள தற்போதைய கொரோணாவினால் மக்கள் வெளியில் செல்லமுடியாத நிலையி விதவைகள் அங்கவீனர்கள் கூலிக்கு வேலை செய்பவர்களின் நிலையை கருத்தில் கொண்டு கனடா தொழிலதிபர் சங்கர் நல்லதம்பி அவர்களின் நிதி உதவியோடு திருகோணமலை ஈச்சிலம்பற்று உடப்புக்கேணி ஆகிய கிராம மக்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பெற்றன.

திருகோணமலை மாவட்டத்தில், ஈச்சிலம்பற்று உடப்புக்கேணி ஆகிய கிராம மக்களுக்கு உலர் உணவு பொதி வழங்க உதவிய ரொரரோவின் மனித நேயக் குரல் - கனடா அமைப்பினருக்கும் நிதி உதவி நல்கிய வர்த்தக பிரமுகர்சங்கர் நல்லதம்பி அவர்களுக்கும், மேற்படி கிராம மக்கள் சார்பாக நன்றிகளை கூறிக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைவதாக ஈச்சிலம்பற்று கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியரும் கவிஞருமான திரு. த.ரூபன் தெரிவித்துள்ளார்.

இந்த வாழ்வாதார உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்ட நிகழ்விறகு திருகோணமலை ஈச்சிலம்பற்றில் இயங்கிவரும் "சிகரம்" கல்வி நிலையத்தினர் பக்கபலமாக விளங்கினார்கள்.







கனடாவிலிருந்து இதற்கான நிதியை வழங்கிய தொழிலதிபர் சங்கர் நல்லதம்பி அவர்களுக்கு ரொரன்ரோ மனித நேய குரல் - கனடா அமைப்பின் இயக்குனர் சபை தனது நன்றியைத் தெரிவிக்கின்றது.

**செய்தி: சத்தியன்**

# கனடா – ஓம் சரவணபவ சேவா அறக்கட்டளையினரின் நிதி உதவி மூலம் சண்டிலிப்பாயில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பெற்றன



ஓம் சரவணபவ சேவா கனடா அறக்கட்டளையினர் வழங்கிய ரூபா 1,27,500 நிதி அன்பளிப்பின் மூலம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நாவலி கிழக்கு மற்றும் நாவலி தெற்கு ஆகிய இரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் கல்லுண்டாய் புதிய குடியிருப்பைச் சேர்ந்த 85 குடும்பங்கள் தற்போதைய Covid-19 காரணமாக தமது வாழ்வாதாரத்தினை இழந்து பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்களின் அவசர உணவுத் தேவையினை பூர்த்தி செய்து கொள்வதற்காக உலர் உணவு பொருட்களை தந்துதவுமாறு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் நாவலி கிழக்கு சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரினால் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இன்றைய தினம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக நாவலி கிழக்கு கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலாளர் பங்குபற்றுதலுடன் தலா ரூபா 1500 பெறுமதியில் 85 குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் (5kg அரிசி, 3kg கோதுமை மா, 1 1/2kg சீனி, 400g 01 அங்கர் பால் மா) அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி அன்பளிப்பினை வழங்கிய ஓம் சரவணபவ சேவா கனடா அறக்கட்டளையினருக்கு பயனாளிகள் சார்பிலும் மற்றும் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் சார்பிலும் மனமார்ந்த நன்றிகளை கூறிக்கொள்கின்றோம்.





# கரோனா நிதிக்காக முதல்வர் ஓவியம் ஏலம்: 15 வயது படைப்பாளியின் புது முயற்சி

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஓவியத்தைத் தத்ரூபமாக வரைந்துள்ள 15 வயதுச் சிறுவன் வம்ஷிக், அதை ஏலத்தில் விட்டு அதன்மூலம் கிடைக்கும் பணம் முழுவதையும், முதலமைச்சர் கரோனா நிவாரண நிதிக்கு அளிக்கத் திட்டமிட்டுள்ளார்.ஓசூரைச் சேர்ந்த சிவா என்பவரின் 15 வயது மகன் வம்ஷிக். அருகில் உள்ள தனியார் பள்ளியில் பத்தாம் வகுப்புப் படித்து வருகிறார். சிறு வயதிலிருந்தே வரைவதில் ஆர்வம் கொண்ட சிறுவன் வம்ஷிக், ஏராளமான ஓவியங்களைத் தொடர்ந்து வரைந்து வருகிறார்.

அண்மையில் அவர் வரைந்த 'மாஸ்டர்' விஜய் விஜய்சேதுபதி ஓவியம், 'கர்ணன்' தனுஷ் ஓவியம், 'கைதி' கார்த்தி ஓவியம் உள்ளிட்டவை பெருத்த வரவேற்பைப் பெற்றதோடு சம்பந்தப்பட்டவர்களின் பாராட்டுகளையும் பெற்றன.நீர் வண்ணத்தைக் (வாட்டர் கலர்) கொண்டு ஓவியம் வரையும் இவர், புது முயற்சியாக தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்று, தலைமைச் செயலகத்தில் முதல்வராக அவர் கையெழுத்திட்ட (முதல்வரின் முதல் கையெழுத்து) புகைப்படத்தை ஓவியமாக வரைந்துள்ளார். இந்த ஓவியத்தை இணையத்திலேயே ஏலத்தில் விட்டு அதில் கிடைக்கும் தொகையை முதலமைச்சரின் கரோனா நிவாரணத்துக்கே அனுப்ப முடிவெடுத்துள்ளார்.

ஓவியத்தின் ஆரம்ப கட்ட விலையாக ரூ.33 ஆயிரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த நாளான இன்று (ஜூன் 3) தொடங்கும் ஏலம், ஜூன் 6ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து இந்து தமிழ் இணையதளத்திடம் வம்ஷிக் கூறும்போது, ''அப்பா சிவா அடிப்படையில் ஒரு பொறியாளர். ஆனாலும்



சிறு வயதிலிருந்தே ஓவியத்தில் ஆர்வம் கொண்டு, வரைந்து வந்தார். தற்போது பைரவி டிசைன் அண்ட் ஸ்கில் அகாடமி என்ற ஓவியப் பள்ளியை நடத்தி வருகிறார்.


சிறு வயதில் இருந்தே அங்கு சென்று பயிற்சி வகுப்புகளை கவனிப்பேன். அப்பா அவராக எதையும் கற்றுக்கொள்ள வலியுறுத்தியது இல்லை என்றாலும் எனக்கே ஓவியத்தில் ஆர்வம் வந்து மெதுவாகக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன்.எனக்கு நீர் வண்ண (வாட்டர் கலர்) ஓவிய முறையில் ஆர்வம் அதிகம் இருப்பதைக் கண்டறிந்த அப்பா, அதில் ஓவியங்கள் வரையக் கற்றுக் கொடுத்தார். குறிப்பாக கரோனா ஊரடங்கு காலம் இன்னும் கூடுதலான சிறப்புப் பயிற்சிகளை பெற உதவியாக இருந்தது'' என்கிறார் வம்ஷிக்.

ஓவியங்கள் வரைவதில் அக்ரிலிக், ஆயில் பெயிண்டிங், பென்சில் ட்ராயிங், வாட்டர் கலர் எனப் பல முறைமைகள் பின்பற்றப்படுகின்றன. இந்த ஓவிய முறைகளில் நீர் வண்ணத்தைக் கொண்டே ஆயில் பெயிண்டிங் ஃபினிஷிங் முறையில் வம்ஷிக் வரைகிறார்.அது கடினமானதாக இருந்தாலும் அதில்தான் அவருக்கு அதிக ஆர்வம் இருந்தது. ஆரம்பத்தில் தமிழக கிராமங்கள், அவற்றில் வாழும் மக்கள், இயற்கை எனப் பொதுவாக வரைந்து கொண்டிருந்த வம்ஷிக், மெல்ல மெல்ல மனித முகங்களை வரைய ஆரம்பித்தார்.

சமூக வலைத்தளங்களில் அதற்கான வீச்சு அதிகமாக இருந்தது. அதையடுத்து சினிமா பிரபலங்களின் ஓவியங்களையும் வரைய ஆரம்பித்தார் சிறுவன் வம்ஷிக். தனுஷ், கார்த்தி உள்ளிட்ட திரை நாயகர்களின் ஓவியங்களையும் வரைந்துள்ளார். இயக்குனர் பா.ரஞ்சித்துக்கு புத்தர் ஓவியத்தை வரைந்து பரிசாக அளித்துள்ளார். 'காலா', 'கபாலி' உள்ளிட்ட படங்களின் கலை இயக்குனர் ராமலிங்கத்தின் புகைப்படத்தையும் வரைந்து அவருக்குப் பரிசாக அளித்துள்ளார். இந்நிலையில் தற்போது முதல்வர் ஸ்டாலினின் முதல் நாள் கையெழுத்தை ஓவியமாக வரைந்துள்ளார்.இதுகுறித்து மேலும் பேசும் வம்ஷிக், ''ஆர்ட் ஆஃப் எஜுகேஷன் என்ற பெயரில் ஒரு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.

அதில் நான் வரையும் ஓவியங்களை விற்று, அதில் கிடைக்கும் தொகையை ஏழை மாணவர்களுக்கு பயன்படுத்தத் திட்டமிட்டு உள்ளேன். சிறுவன் வம்ஷிக் வரைந்த ஓவியங்கள்பெருந்தொற்றுக் காலத்தில் கரோனாவை ஒழிக்கத் தமிழக அரசின் முயற்சிகளுக்கும் ஓவியம் வழியாக உறுதுணையாக இருக்க ஆசைப்பட்டேன். தமிழக முதல்வரின் புகைப்படத்தை ஓவியமாக வரைந்து அந்த ஓவியத்தை ஏலத்தில் விட்டு, அதில் கிடைக்கும் தொகையை முதலமைச்சரின் கரோனா நிவாரண நிதிக்கு கொடுக்க முடிவு செய்தேன். அந்த வகையில்தான் இந்த ஓவியம் ஏலத்தில் விடப்பட்டு உள்ளது'' என்று வம்ஷிக் தெரிவித்தார்.

# தமிழகத்துக்கு ஜூன் மாதம் 1 கோடி தடுப்பூசிகள் வழங்க வேண்டும்: குறைவாக வழங்குவது நியாயமற்ற செயல்: ராமதாஸ் விமர்சனம்




இந்தியா முழுவதும் நேற்று வரை 21.67 கோடி தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன, அவற்றில் தமிழ்நாட்டில் போடப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை 93.41 லட்சம் மட்டும் தான். இது ஒட்டுமொத்த இந்தியாவில் போடப் பட்ட தடுப்பூசிகளில் 4.31% மட்டும் தான், இது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத எண்ணிக்கை ஆகும், தமிழகத்திற்கு போதிய எண்ணிக்கையில் தடுப்பூசிகள் வழங்கப்படாதது தான் இதற்கு காரணம் என ராமதாஸ் விமர்சித்துள்ளார்.இதுகுறித்து பாமக நிறுவனர் ராமதாஸ் இன்று வெளியிட்ட அறிக்கை:

“தமிழ்நாட்டில் போதிய அளவு தடுப்பூசிகள் இல்லாததால் இன்று முதல் தடுப்பூசி போடும் பணிகள் நிறுத்தப்படவிருந்த நிலையில், புதிதாக 4.95 லட்சம் தடுப்பூசிகளை மத்திய அரசு அனுப்பி வைத்திருப்பதால் 45 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடும் பணி தொடர்ந்து நடைபெறும் என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது. ஆனால், 1844 வயது பிரிவினருக்கு தடுப்பூசி போடுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.கரோனா பரவலைத் தடுப்பதற்காக தடுப்பூசி போடுவதில் தமிழ்நாடு மிகவும் பின்தங்கியிருக்கிறது. இந்தியா முழுவதும் நேற்று வரை 21.67 கோடி தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

அவற்றில் தமிழ்நாட்டில் போடப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை 93.41 லட்சம் மட்டும் தான். இது ஒட்டுமொத்த இந்தியாவில் போடப் பட்ட தடுப்பூசிகளில் 4.31% மட்டும் தான். இது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத எண்ணிக்கை ஆகும். தமிழகத்திற்கு போதிய எண்ணிக்கையில் தடுப்பூசிகள் வழங்கப்படாதது தான் இதற்கு காரணம்.கரோனா வைரஸ் மூன்றாவது அலை பரவலைத் தடுக்க வேண்டும் என்றால் வரும் திசம்பர் மாதத்திற்குள் பெரும்பான்மையினருக்கு தடுப்பூசி போடப்பட வேண்டியது அவசியமாகும். அந்த இலக்கை அடைய வேண்டுமானால், இனி வரும் நாட்களிலாவது தமிழகத்திற்கு அதிக எண்ணிக்கையில் தடுப்பூசிகள் வழங்கப்பட வேண்டும்; அவை வீணடிக்கப்படாமல் அனைத்து வயதுப் பிரிவினருக்கும் செலுத்தப்பட வேண்டும். ஆனால், தமிழகத்திற்கான ஜூன் மாத தடுப்பூசி ஒதுக்கீடு மிகவும் குறைவாக உள்ளது.ஜூன் மாதத்தில் தமிழகத்திற்கு மத்திய அரசிடமிருந்து 25.50 லட்சம் தடுப்பூசிகள், தடுப்பூசி உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து நேரடியாக 16.75 லட்சம் தடுப்பூசிகள் என மொத்தம் 42.25 லட்சம் தடுப்பூசிகள் மட்டுமே கிடைக்கும் என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

ஜூன் மாதத்தில் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படவுள்ள தடுப்பூசிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது இந்த எண்ணிக்கை மிகக் குறைவு. மராட்டிய மாநிலம் புனே நகரில் உள்ள சீரம் தடுப்பூசி நிறுவனம் ஜூன் மாதத்தில் மட்டும் 10 கோடி தடுப்பூசிகளை உற்பத்தி செய்யவுள்ளது. பாரத் பயோடெக் நிறுவனம் உற்பத்தி செய்யும் கோவாக்சின் உள்ளிட்ட பிற ஆதாரங்களில் இருந்து 2 கோடி தடுப்பூசிகள் உற்பத்தி செய்யப்படவுள்ளன. அவற்றில் 6.09 கோடி தடுப்பூசிகள் மத்திய அரசின் மூலம் மாநில அரசுகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

மீதமுள்ள 5.86 கோடி தடுப்பூசிகள் மாநில அரசுகளுக்கு தடுப்பூசி நிறுவனங்களால் நேரடியாக விற்பனை செய்யப்படும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் அறிவித்திருக்கிறது. இவற்றில் தமிழகத்திற்கு ஒரு கோடிக்கும் கூடுதலான தடுப்பூசிகளை வழங்குவது மட்டுமே நியாயமான ஒதுக்கீடாக இருக்கும்.202021 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்தி மதிப்பு ரூ.140 லட்சம் கோடி ஆகும். அதில் தமிழகத்தின் பங்கு ரூ. 20 லட்சம் கோடி ஆகும். அதாவது இந்தியாவின் பொருளாதாரத்தில் 14.28% தமிழகத்தைச் சேர்ந்ததாகும்.

இதையே அளவுகோலாக கொண்டு பார்த்தால் தமிழகத்திற்கு ஜூன் மாதத்தில் ஒரு கோடியே 71 லட்சம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதில் நான்கில் ஒரு பங்குக்கும் குறைவாக 42.25 லட்சம் தடுப்பூசிகள் வழங்கப்படுவது நியாயமற்ற செயலாகும்.தடுப்பூசிகளை ஒதுக்கீடு செய்வதில் சில அளவீடுகளை பின்பற்றுவதாகவும், அதன்படி தான் தடுப்பூசி வழங்கப்படுவதாகவும் மத்திய அரசு கூறுகிறது. அதன்படி பார்த்தால் கூட இந்தியாவிலேயே தினசரி கரோனா பாதிப்பு மிகவும் அதிகமாக உள்ள மாநிலம், மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட தடுப்பூசிகளை முழுமையாக பயன்படுத்திய மாநிலம் என்ற அடிப்படையில் தமிழகத்திற்கு கூடுதலாக தடுப்பூசி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், எந்த அடிப்படையிலும் இல்லாமல் தமிழகத்திற்கான தடுப்பூசிகளைக் குறைத்து, பிற மாநிலங்களுக்கு அதிக எண்ணிக்கையில் தடுப்பூசிகளை வழங்குவதை ஏற்க முடியாது.தமிழ்நாட்டில் இது வரை இரு டோஸ் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 72.79 லட்சம் ஆகும்.

இது தமிழக மக்கள்தொகையில் 10 விழுக்காட்டுக்கும் குறைவாகும். பிற மாநிலங்களில் கூடுதலாக தடுப்பூசிகள் போடப்பட்டுள்ள நிலையில், தமிழகத்திற்கு கூடுதலாக தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், தொடர்ந்து மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.தமிழகத்தின் தடுப்பூசித் தேவையை கருத்தில் கொண்டு ஜூன் மாதத்தில் மத்திய அரசு நேரடி ஒதுக்கீட்டின் மூலமாகவும், தடுப்பூசி உற்பத்தி நிறுவனங்களின் விற்பனை மூலமாகவும் தமிழகத்திற்கு குறைந்தபட்சம் ஒரு கோடி தடுப்பூசிகள் ஒதுக்கப்படுவதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும்.

இதற்காக தமிழக அரசும் மத்திய அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''. இவ்வாறு ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

# தமிழினப் படுகொலை தொடர்பான சட்ட மூலத்தின் மூன்றாவது வாசிப்பின் போது, கனடா ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் ஆற்றிய உரை

தமிழினப் படுகொலை தொடர்பான சட்ட மூலத்தின் (Bill 104) மூன்றாவது வாசிப்பின் போது. கனடா ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் ஆற்றிய உரை. மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் பாபிகியன் அவர்கள் ஆர்மேனியன் நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கனடாவில் தமிழ் மக்களுக்காக என்றும் குரல் கொடுப்பவர் என்பதும், அவர் அரசியலுக்குள் நுழைவதற்கு முன்னர் கனடாவின் மத்திய அரசின் கீழ் உள்ள குடியுரிமை அமைச்சின் அகதிகள் விசாரணை நீதி மன்றத்தின் முக்கிய நீதிபதியாக பணியாற்றி பல ஈழத்தமிழ் மக்களின் அகதிக்கோரிக்கையை நியாயமான முறையில் அணுகி அவற்றை ஏற்றுக் கொள்ளும் வகையில் சிபார்சு செய்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

Legislative Assembly of Ontario



**42nd Parliament, 1st Session**
**Official Report of Debates (Hansard)**
**No. 259**
**May 6, 2021**

Mr. Aris Babikian: My colleagues described the entire Tamil genocide in very graphic details. I'm going to focus on why it is important that this House recognizes the genocide and what is the relevancy of Bill 104 for this House, for the people of Ontario and for the people of Canada.

Madam Speaker, it is my honour to stand up in this august House to speak on an important issue dear to my heart. First of all, I would like to congratulate my colleague Vijay Thanigasalam on this important milestone in his family and in the lives of those in the Tamil community.

I'm so proud that this House is acknowledging the trauma and the persecution the Tamil community in Sri Lanka faced in 2009 and onwards. It is essential to call a spade a spade. What happened to the Tamil people was a genocide. It is also essential to stand up for the truth and bring justice to the victims, their families and the survivors.

Madam Speaker, we stand up here today to acknowledge the past, not to cast blame. It is important to address the Tamil genocide issue for two reasons. First, to bring closure and healing to the wounds of the past: Without healing and closure to the victims, individually and collectively, there can be no reconciliation. Furthermore, the systematic denial policy is the final stage of genocide, as renowned genocide scholar Gregory Stanton stated. In addition to the victim, the denial policy traumatizes and victimizes the future of generations of the victim nation.

As the grandson of a survivor and third generation of the Armenian genocide survivors, I live the trauma every time the perpetrator questions or denies my grandfather's inhumane treatment, his survival story and the loss of entire generations of our family. Therefore, it is critical for us to send a message to the denialists that we will not bow down to their revisionist history and disgraceful spin.

The second reason, Madam Speaker, why we need to address this thorny issue head-on is because we owe it to humanity to learn from the mistakes of the past so that we will not repeat these atrocities again.

The 20th century is called the century of tears because over 60 million people were killed due to heinous acts of genocide. Regrettably, no society is immune from the scourge of genocide and crimes against humanity. You just need one firebrand individual to mobilize a society and turn one against each other, us versus them.

We have seen how Talaat Pasha masterminded the genocide of Armenians, Greeks, Pontians, Assyrians and Chaldeans in the Ottoman Empire. We have seen how Stalin caused the Ukrainian Holodomor. We have seen how Hitler initiated the Holocaust. We have seen how Pol Pot instigated the Cambodian genocide. We have seen how Paul Kagame triggered the Rwandan genocide. And so on, Madam Speaker. I can go on for the rest of the day.

1400

Therefore, it is imperative to sensitize the future generations and educate them of the importance of peaceful coexistence and respect for our diverse makeup and to protect the vulnerable in our society. By doing so, we will be able to make the 21st century a better century and a more human century than the 20th century.

"Never again" should mean never again and be our compass to leave a better world for future generations. This should be our generation's legacy.

Madam Speaker, I stand up here in solidarity with the Tamil people and for the importance of adopting this bill.

Hansard Transcript 2021-May-06 | Legislative Assembly of Ontario (ola.org)

Legislative Assembly of Ontario

**42வது ஒன்றாரியோ பாராளுமன்றம், 1வது அமர்வு**
**விவாதங்களின் உத்தியோகபூர்வமான அறிக்கை (ஹன்சார்ட்)**
**எண். 259**
**மே 6, 2021**

கௌரவ சபாநாயகர் அவர்களே!, எனது சகாக்கள் முழு தமிழ் இனப்படுகொலையையும் மிகவும் தெளிவாக படங்களுடன் இங்கு விபரித்தனர். ஒன்றாறியோ மக்களுக்கும் கனடா மக்களுக்கும் இந்த மன்றம் இனப்படுகொலையை அங்கீகரிப்பது ஏன் முக்கியம் என்பதையும், இந்த மன்றத்திற்கு மசோதா 104 தொடர்பிலான அம்சங்கள் என்ன என்பதையும் நான் விபரிக் விரும்புகிறேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!, இந்த சபையில் எனது மனதிற்கு பிடித்தமான ஒரு முக்கியமான விடயமாகப் பேச எழுந்து நிற்பது எனது பெருமை அளிக்கின்றது. முதலாவதாக, எனது பாராளுமன்ற சகாவான விஜய் தணிகாசலம், அவரது குடும்பம் மற்றும், தமிழ்ச் சமூகத்தில் உள்ளவர்களின் வாழ்க்கையிலும் மைல் கல்லாக விளங்கும் இந்த முக்கியமான விடயத்திற்காக அவரை வாழ்த்துகிறேன்.

2009 ஆம் ஆண்டிலும் அதற்குப் பிறகும் இலங்கையில் தமிழ் சமூகம் சந்தித்த அதிர்ச்சியையும் துன்புறுத்தலையும் இந்த மன்றம் ஏற்றுக் கொண்டிருப்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். ஒரு மண்வெட்டியை ஒரு மண்வெட்டி என்று அழைப்பது மிகவும் அவசியம். தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது என்றால் அது ஒரு இனப்படுகொலையே ஆகும். சத்தியத்திற்காக எழுந்து நின்று பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் தப்பிப்பிழைத்தவர்களுக்கும் நீதி வழங்கக் கோருவதும் மிகவும் அவசியமானதாகும்.

கௌரவ சபாநாயகர அவர்களே!, கடந்த காலத்தை ஒப்புக்கொள்வதற்காகவே நாங்கள் இன்று இங்கே எழுந்து நிற்கிறோம் தவிர குற்றஞ்சாட்டுவதற்காக அல்ல. இரண்டு காரணங்களுக்காக தமிழ் இனப்படுகொலை என்னும் பிரச்சினைக்கு தீர்வு காண்பது முக்கியம். முதலாவதாக, கடந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட காயங்களை மூடுவது மற்றும் குணப்படுத்துவது: பாதிக்கப்பட்டவர்களுக்கு குணப்படுத்துதல் மற்றும் காயங்களை மூடுவது என்பது, தனித்தனியாகவும் கூட்டாகவும், நல்லிணக்கத்தை அடைய முடியாது. மேலும், புகழ்பெற்ற இனப்படுகொலை தொடர்பானஅறிஞர் கிரிகோரி ஸ்டாண்டன் அவர்கள் கூறியது போல, முறையான மறுப்புக் கொள்கையே, இனப்படுகொலையின் இறுதி கட்டமாகும். பாதிக்கப்பட்டவருக்கு கூடுதலாக, மறுப்பு கொள்கை பாதிக்கப்பட்ட தேசத்தின் அல்லது இனத்தின் தலைமுறைகளின் எதிர்காலத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கவும் பாதிக்கவும் செய்கிறது.

ஆர்மீனிய இனப்படுகொலையில் தப்பிப் பிழைத்த ஒருவரின் மூன்றாவது தலைமுறையின் பேரன் என்ற வகையில் குற்றவாளி என் தாத்தாவிற்கு நிகழ்ந்த மனிதாபிமானமற்ற சிகிச்சை, அவரது உயிர்வாழும் கதை மற்றும் எங்கள் குடும்பத்தின் முழு தலைமுறையினரின் இழப்பையும் கேள்விப்படுகின்றபோது அல்லது மறுக்கும்போது நான் அதிர்ச்சியை அனுபவிக்கிறேன். எனவே, மறுப்புவாதிகளுக்கு அவர்களின் திருத்தல்வாத வரலாறு மற்றும் அவமானகரமான சுழற்சிக்கு நாங்கள் தலைவணங்க மாட்டோம் என்று ஒரு செய்தியை அனுப்புவது மிகவும் முக்கியமானது.

இரண்டாவது காரணம், கௌரவ சபாநாயகர் அவர்களே!, இந்த முட்களைப் போன்ற பிரச்சினையை நாம் ஏன் நேருக்கு நேர் கவனிக்க வேண்டும் என்றால், கடந்த கால தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ள மனிதகுலத்திற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம், அத்துடன் இந்த கொடுமைகளை மீண்டும் மீண்டும் நாம் செய்யமலிருக்க வேண்டும்.

20 ஆம் நூற்றாண்டு கண்ணீரால் கரைந்த நூற்றாண்டு என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் 60 மில்லியன் மக்கள் இனப்படுகொலை மற்றும் கொடூரமான செயல்களால் கொல்லப்பட்டனர். துரதிர்ஷ்டவசமாக, எந்தவொரு சமூகமும் இனப்படுகொலை மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களிலிருந்து விடுபட்டிருக்கவில்லை. ஒரு சமுதாயத்தை அணிதிரட்டுவதற்கும் ஒருவருக்கொருவர் எதிராகத் திரும்புவதற்கும் உங்களுக்கு ஒரு மோசமான நெருப்பைப் போன்ற தனிநபர் இருப்பார், நாங்கள் அவர்களுக்கு எதிராக செயற்பட வேண்டும்.

ஒட்டோமான் பேரரசில் ஆர்மீனியர்கள், கிரேக்கர்கள், போண்டியர்கள், அசீரியர்கள் மற்றும் கல்தேயர்கள் ஆகியோரின் இனப்படுகொலையை தலாத் பாசா எவ்வாறு சூத்திரதாரி செய்தார் என்பதை நாங்கள் பார்த்தோம். ஸ்டாலின் உக்ரேனிய ஹோலோடோமரை எவ்வாறு ஏற்படுத்தினார் என்பதை நாங்கள் பார்த்தோம். ஹிட்லர் ஹோலோகாஸ்டை எவ்வாறு தொடங்கினார் என்பதை நாங்கள் பார்த்தோம். கம்போடிய இனப்படுகொலையை போல் பாட் எவ்வாறு தூண்டினார் என்பதை நாங்கள் பார்த்தோம். பால் ககாமே ருவாண்டாவின் இனப்படுகொலையை எவ்வாறு தூண்டினார் என்பதை நாங்கள் பார்த்தோம். மற்றும் பல, கௌரவ சபாநயாகர் அவர்களே, நான் இந்த தகவல்களை இன்றைய நாள் முழுவதும் சொல்ல முடியும்.

எனவே, வருங்கால சந்ததியினரை உணர்ந்து, அமைதியான சகவாழ்வு மற்றும் நமது மாறுபட்ட ஒப்பனைக்கு மரியாதை செலுத்துவதன் முக்கியத்துவத்தைப் பற்றியும், நமது சமூகத்தில் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாப்பதும் அவர்களுக்கு அவசியம். அவ்வாறு செய்வதன் மூலம், 21 ஆம் நூற்றாண்டை 20 ஆம் நூற்றாண்டை விட சிறந்த நூற்றாண்டாகவும், மனித நூற்றாண்டாகவும் மாற்ற முடியும்.

"மீண்டும் ஒருபோதும்" என்பது மீண்டும் ஒருபோதும் என்ற அர்த்தத்தையே உடையது, எனவே, எதிர்கால தலைமுறையினருக்கு ஒரு சிறந்த உலகத்தை விட்டு வெளியேற எங்கள் திசைகாட்டி உதவிட வேண்டும். இது எங்கள் தலைமுறையின் மரபாகவும் இருக்க வேண்டும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!, தமிழ் மக்களோடு ஒற்றுமையுடனும் செயற்படவும் இந்த மசோதாவை ஏற்றுக்கொள்வதற்கான முக்கியத்துவத்துக்காகவுமே நான் இங்கு நிற்கிறேன்.

அரிஸ் பாபிகியன் - மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் - ஒன்றாரியோ

Hansard Transcript 2021-May-06 | Legislative Assembly of Ontario (ola.org)

# கணவன்–மனைவி இணைந்து வைத்திருந்த கடன் அட்டை கொடுப்பனவிற்கு திருமண முறிவிற்குப் பின்னர் யார் பொறுப்பாளி?

**வி**வாகரத்து என்பது ஒரு நீண்டதும், கடினமானதுமான ஒரு செயல்முறையாக இருக்கலாம். இந்த விடயத்தில் சாதாரணமான விவரங்கள் முதல் அதிக கட்டணம் வசூலிக்கப்படும் விடயங்கள் வரை நீங்கள் முடிவு-களை எடுக்க வேண்டும். இது உங்கள் மனைவியுடன் இணைந்த நீங்கள் பெற்ற கடனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. உங்கள் விவாகரத்து நிலை நீங்கள் எதிர்பார்க்கும் வழிமுறைகளுக்கு நிதியுதவிகளைப் பிரிக்கும் என்று வெறுமனே கருத வேண்டாம். முாறாக, எதிர்கால நிதி சிக்கல்கள் மற்றும் உங்களக்கு ஏற்படும் பதட்டத்திலிருந்து உங்களை நீங்களே பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது மிக முக்கியம்.




### விவாகரத்து ஏற்பாடு மற்றும் நிதி ஏற்பாடு

முதலில், விவாகரத்து நடைமுறை முழுவதும் நீங்கள் ஒப்புக் கொள்ளும் அனைத்தையும் உங்களுக்கு கடன் வழங்கிய நிறுவனங்கள் ஒப்புக் கொள்ள மாட்டா என்பதை அறிந்து கொள்ளுங்கள். விவாகரத்துக்குப் பிறகு நிதிப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஒரு உங்களில் ஒருவர் பொறுப்பேற்கக்கூடும், எனினும் உங்கள் இருவருக்கும் கடன் போன்ற கூட்டு நிதி தொடர்பான ஒரு பொறுப்பும் ஆகும். ஆனால் உங்களில் ஒருவர் நிதிக் கடனைப் கவனித்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அத்துடன், உங்களில் ஒருவர் பணம் செலுத்தும் அவசியத்தை பின்பற்றுவார் என்பதையும் எதிர்பார்க்க முடியாது.

நிதி ஏற்பாட்டை அங்கீகரித்தவர் யார்? நிதியுதவி குறித்து உங்கள் பெயர் விரிவாக இருந்தால், வாடிக்கையாளர் அல்லது இணை கையொப்பமிட்டவர் என்ற வகையில், கடன் வழங்குநரின் பார்வையில் இந்த நிதிக் கடனுக்கு நீங்கள் 100 வீதம் பொறுப்பு. மேலும், நீங்கள் விவாகரத்து செய்திருந்தால், உங்கள் முன்னாள் கணவரோ அன்றி மனைவியோ, கடனை திரும்பச் செலுத்த கொள்ள ஒப்புக் கொண்டு பின்னர் அதை அவர் செய்ய முடியாமல் போனால், உங்கள் கடன் வரிக்கு வரும்போது, எந்தவொரு தாமதமான கட்டணங்கள் மற்றும் வசூல் செய்யும் கட்டணத்திற்கும் நீங்கள் பொறுப்பாவீர்கள்.

உங்கள் கடன் அறிக்கைகள்: நீங்கள் விவாகரத்து செய்தபோது கடன் வழங்குநர்கள் கூட அதை அறியாமல் இருக்கலாம். துரதிர்ஸ்டவசமாக, அவர்கள் உங்களது தனிப்பட்ட பிரச்சனைகளை கருத்தில் கொள்ளாமல் இருக்கலாம். உங்கள் முகவரியை மாற்றுவது, உங்கள் பெயரை மாற்றுவது, அதேபோல் உங்கள் கடன் வழங்குநர்களை உங்கள் விவாகரத்து தொடர்பான ஏற்பாட்டின் தகவல்களுடன் கவனத்திற்கு கொண்டு செல்வது என்பன பெற்ற கடனுக்கான பிணைப்பிலிருந்து உங்களை விலக்கி வைக்காது. கடன் வழங்குநர்கள் நிதி நடவடிக்கைகளை கடன் வரலாற்று பணியகங்களுக்கு தொடர்ந்து தெரிவிப்பார்கள், இது உங்கள் கடன் அறிக்கைகளை பாதிக்கும். எந்தவிதமான தவறவிட்ட மீளப் பணம் செலுத்துதலகள் காரணமாக, உங்கள் கடன் மதிப்பெண்களில் வீழ்ச்சியை உருவாக்கும்.

### உங்கள் கடன் மதிப்பெண்களைக் காப்பாற்றுங்கள்

விவாகரத்துக்குப் பிறகு உங்கள் கடன் மதிப்பெண்களை பிரச்சனைகள் இல்லாமல் வைத்திருக்க இரண்டு முறை-கள் உள்ளன. எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதற்கு முன் இந்த நுட்பங்களை உங்கள் வழக்கறிஞருடன் கலந்துரையாடுங்கள்:

- மீள் நிதியளிப்பதன் மூலம் அல்லது உங்கள் பெயரை நீக்குவதன் மூலம் உங்கள் பெயரை கடனில் இருந்து விலக்குங்கள்.
- கடன் வழங்கிய நிறுவனத்திற்கு முழுமையாக கடனைச் செலுத்த ஏற்பாடு செய்யுங்கள்.

### கடன்களிலிருந்து உங்களை நீக்குதல்

உங்கள் முன்னாள் துணை திருப்பிச் செலுத்த வேண்டிய பொதுவான நிதி கொடுப்பனவிலிருந்து உங்களை பிரிப்பது மிகவும் சிறந்தது. நீங்கள் முன்னாள் துணையை முழுமையாக நம்பியிருந்தாலும், அவர் காலமானால் அல்லது தற்காலிகமாக பலவீனமடைந்தால், செலுத்த வேண்டிய கடன் மீண்டும் உங்கள் தோள்களில் வைக்கப்படும், இருப்பினும் நீங்கள் வைத்திருக்கும் ஆயுள் காப்புறுதியும் உடல் பலவீனமடைந்ததற்கான காப்புறுதியும் அந்த சிக்கலை தீர்க்கக் கூடியவை.

பெரும்பாலான கடன் வழங்குனர்கள் விவாகரத்துக்குப் பிறகு உங்கள் பெயரை கடன் விடயத்திலிருந்து எளிதாக நீக்கிவிடமாட்டார்கள். இது சாத்தியமானதும், கேட்பதற்கு இது ஒருபோதும் தீங்கு விளைவிப்பதும் இல்லை. ஆனாலும் உங்கள் நம்பிக்கையை இழக்க வேண்டாம். உங்கள் இருவரது வருமானங்களில் நம்பிக்கை நம்புவதோடு, உங்கள் இரு கடன் மதிப்பீடுகளையும் பார்த்து, நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டது. இது உங்கள் கடன் அறிக்கையாக இருக்கலாம், இதுதான் நிதி ஒப்புதலை விரைவுபடுத்தியது, இது கடன் வழங்குநர்களும் உங்களை பிடியிலிருந்து அனுமதிக்க குறைந்த விருப்பத்தை ஏற்படுத்தும். கடன் வழங்குனர் இந்த சாத்தியத்தை கருத்தில் கொண்டால், உங்கள் பெயரை நீக்குவதற்கு முன்பு அவர்களுக்கு செலுத்த வேண்டிய கடனாளியின் கடனையும் வருமானத்தையும் மதிப்பீடு செய்ய வேண்டியிருக்கும். கடன்களைப் பற்றி ஏதேனும் கேள்வி இருந்தால், தயவுசெய்து எங்கள் வலைத்தளமான www.gtacredit.com ஐப் பார்வையிடவும் அல்லது எங்களை (416) 650-1100 என்ற எண்ணில் அழைக்கவும்.


MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400





**Scarborough**
201-4433 Sheppard Ave. E
Scarborough, ON, M1S 1V3

**Toronto/Downtown**
800-120 Eglinton Ave. E
Toronto, ON, M4P 1E2

**North York**
306-1280 Finch Ave. W
North York, ON, M3J 3K6

**Mississauga**
110-93 Dundas Street E.
Mississauga, ON, L5A 1W7

**Brampton**
201-7990 Kennedy Rd. South,
Brampton, Ontario, L6W 0B3

Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

# மலேசியாவில் தொழிலாளர்கள் சுரண்டப்படுவது குறித்து கனடா விசாரணை

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



மலேசியாவின் செம் பனை எண்ணெய் மற்றும் கையுறை தயாரிப்பு தொழிற்சாலைகளில் கொத்தடிமை முறை நிலவுகிறது எனும் குற்றச்சாட்டைக் கனடா விசாரிக்க ஆரம்பித்துள்ளது.

மனித உரிமைகளுக்கு அதிக முன்னுரிமை அளித்து வரும் கனடா இது தொடர்பிலான விசாரணையைத் தொடங்கியுள்ளதாக சில தினங்களுக்கு முன்னர் அறிவித்தது.

கனடா ஆண்டு தோறும் ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான பாம் எண்ணெய்யை இறக்குமதி செய்கிறது.

அண்மைக் காலமாக தொழிலாளர்களை மிகவும் மோசமாக நடத்திய குற்றச்சாட்டில் உலகின் முன்னணி பாம் எண்ணெய் மற்றும் ரப்பர் கையுறை தயாரிப்பு நிறுவனங்கள் அதிகரித்த கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. “மலேசியாவில் பாம் எண்ணெய் ரப்பர் கையுறை தயாரிக்கும் நிறுவனங்களில் தொழிலாளர்கள் கொத்தடிமை போல நடத்தப்படுகின்றனர் என்கிற குற்றச்சாட்டை நாங்கள் மிகவும் தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம்” என்று கனடாவின் வேலை வாய்ப்பு மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சு ராய்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு அனுப்பிய மின்னஞ்சலில் கூறியுள்ளது.

அதேவேளை தனிப்பட்ட நிறுவனங்களின் பெயர்களை வெளியிட கனேடிய அரசு மறுத்துவிட்டது. கனடாவின் இந்தக் குற்றச்சாட்டு குறித்து மலேசியாவின் மனிதவள மேம்பாட்டு அமைச்சு இதுவரை கருத்து ஏதும் வெளியிடவில்லை.


எனினும் உதயனிடம் பேசிய பெயர் வெளியிட விரும்பாத மலேசிய பாம் எண்ணெய் வாரியத்தின் உயரதிகாரி ஒருவர் கனடாவின் குற்றச்சாட்டை தாங்கள் மிகவும் தீவிரமான கவனத்தில் எடுத்துள்ளதாகவும் அது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.



“மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதவள சுரண்டல்களை மலேசியா ஒரு போதும் பொறுத்துக் கொள்ளாது” என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுகின்றனர் எனும் குற்றச்சாட்டின் அடிப்படையில் மூன்று மலேசிய நிறுனவங்களிடமிருந்து இறக்குமதியை தடை செய்தது.

பாம் எண்ணெய் பண்ணைகள் மற்றும் மற்றும் ரப்பர் கையுறைகளை உற்பத்தி தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்கள் மிகவும் அதிகப்படியான நேரங்கள் வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுவதும், மோசமான குடியிருப்பு மற்றும் வேலைச் சூழல்கள், கொத்தடிமை நடைமுறை, அச்சுறுத்தல் மற்றும் பாலியல் பலாத்காரம், தேசிய அடையாள அட்டைகளைப் பறித்து வைத்து கொள்வது போன்ற அடாவடி நடவடிக்கைகளில் முதலாளி-மார் மற்றும் தொழிற்சாலை அதிகாரிகள் பின்பற்றுகின்றனர் எனும் குற்றச்சாட்டுகள் நீண்டகாலமாக நிலவுகிறது.




இதன் பின்புலத்திலேயே கனடாவின் இந்த முன்னெடுப்பு செய்யப்பட்டுள்ளது. கனடாவின் விசாரணையை மலேசியாவின் புறந்தள்ள முடியாது, அதன் முடிவு மலேசிய பாம் எண்ணெய் தோட்டங்களில் வேலை செய்யும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களுக்கு வி-டியலைத் தேடித் தரக் கூடும் என்று அங்குள்ள தொழிற்சங்கத் தலைவர் பெருமாள் உதயனிடம் தெரிவித்தார்.

கனடா, அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகள் இது குறித்த விசாரணைகளை முன்னெடுக்கும் போது, மலேசியா அதை மறுக்க முடியாது, அப்படிச் செய்தால் உரிய ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவால் தடை செய்யப்பட்டுள்ள உலகின் முன்னணி ரப்பர் கையுறை தயாரிப்பாளரான Top Glove மற்றும் உலகின் இரண்டு முன்னிலை பாம் எண்ணெய் உற்பத்தியாளர்களான Sime Darby Plantation மற்றும் FGV Holdings ஆகியவை இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறுகின்றனர்.

பாம் எண்ணெய் உணவுப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், இயற்கை எரிபொருள், கால்நடை உணவு, மருந்து தயாரிப்பு, தொழிற்சாலை தேவைகள் போன்று பல்துறைகளில் பெரியளவில் பயன்படுகிறது.

உலக செய்திகள்
World News

# கொரோனாவை முடிவுக்கு கொண்டுவருவதற்கு சர்வதேச கூட்டு நடவடிக்கையே தற்போது தேவை

“கொரோனாப் பெருந்தொற்றை முடிவுக்கு கொண்டுவருவதற்கு சர்வதேச கூட்டு நடவடிக்கையே தற்போது தேவையாக உள்ளது” என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்காக தற்போது, கொரோனா பெருந்தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு தடுப்பு மருந்து விநியோகத்தில் சமநி-லையை கொண்டுவர உலகத் தலைவர்கள் புதிய அர்ப்பணிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று நான்கு பிரதான சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் சில தினங்களுக்கு முன்னர் அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளனர்.

செல்வந்த நாடுகள் மற்றும் வறிய நாடுகளுக்கு இடையே தடுப்பூசி சரிசம-மாக வழங்கப்படாதது குறித்து கவலை அதிகரித்திருக்கும் நிலையிலேயே இந்த கூட்டு அறிவிப்பு வெளியாகியுள்ளது. கொரோனா தொற்றினால் உலகெங்கும் 3.5 மில்லியன் பேர் உயிரிழந்துள்ளனர்.

உலக சுகாதார அமைப்பு, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வர்த்தக அமைப்பு இணைந்து வெளியிட்ட இந்த அறிவிப்பில், தடுப்பூசி வழங்குவதில் உள்ள இடைவெளி புதிய கொரோனா திரிபுகள் தோன்ற காரணமாகியுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்து புதிய கொரோனா திரிபுகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வைரஸ் தொற்று அதிகரிக்கக் காரணமாகியுள்ளது. “சுகாதார நெருக்கடியை முடிவுக்கு கொண்டுவராதபட்சத்தில் கொவிட்-19 பெருந்தொற்றில் இருந்து பரந்த அளவில் மீட்சி பெற முடியாது என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. இதற்கு தடுப்பூசி பெறுவது முக்கியமானதாக உள்ளது” என்று அந்த அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன. தடுப்பு மருந்து சமநி-லையாக பகிரப்படாதது குறித்து உலக சுகாதார அமைப்பு ஏற்கனவே தமது கவலையை வெளியிட்டு வருகிறது. செல்வந்த நாடுகள் குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினருக்கு தடுப்பூசி வழங்குவதை தவிர்த்து அதனை ஏனைய நாடுகளுக்கு அன்பளிப்புச் செய்யும்படி உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் கடந்த மாதம் கோரிக்கை விடுத்திருந்தார்.


# Hollywood Award for Canada's JAYADEVAN NAIR

The Canadian musician / composer and violinist Mr. Jayadevan Nair received the prestigious award for “Best Original Score” from Hollywood North Film Awards. This award was presented to him for the film F.E.A.R (Face Everything And Rise) by Annie Koshey, Directed by Manny Bains & Serge Velbovets.

Hollywood North Film Awards is a very reputed Accademy that promotes Canadian films and storytelling. Jaydevan is the first South Indian to receive this award for music.

The Indian born Canadian Violinist/ Composer Jayadevan hails from a family of artists, his grand father being Abhayadev, a well known name both in Malayalam film and literary worlds. Jayadevan started learning violin at his young age under Kalaksethram Madhu and Nedumangadu Sivanandan. Jayadevan travelled all over the world and has accompanied numerous world renowned artists for music concerts including the legendary singer Dr. M. Balamuralikrishna, Dr.K.J Yesudas, TM Krishna, Aruna Sairam, P Unnikrishnan, Sikkil Gurucharan, Sandeep Narayanan etc. The famous music producers of India Invis records released Jayadevan's several CD's of Carnatic music, Jugalbandhi and fusion. He music directed and composed so many albums, Jingles and songs for various producers. His upcoming album is composed and directed by the famous musician Srivalsan J Menon, in which the violin is given the most predominance. Jayadevan had the rare privilege of being adjudged as a top artist among talented youngsters and got the award from Mahatma Gandhi University in 1991. He founded Toronto Sangeeth Utsav in 2013 to promote Toronto based musicians, which is very popular now. He has his own music school called by Sariga Music, Arts and Creations. Now his students are also performing well and accompanying other eminent artists.

Uthayan Canada and Nanban Awards, jointly congratulate Jeyadevan Master, for his very recent achievement.



# லண்டன் நீதிமன்ற தீர்ப்பும் அகதிகள் கொள்கையில் மாறுதலும்




- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

லண்டன் உயர்நிலை தீர்ப்பாயம் ஒன்று வழங்கியுள்ள மிக முக்கியமான தீர்ப்பொன்றை அடுத்து ஆஸ்திரேலியா தனது அகதிகள் தஞ்சக் கோரிக்கை தொடர்பான கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

இரண்டு இலங்கை தமிழர்கள் தொடர்பாக வழங்கப்பட்ட அந்தத் தீர்ப்பில் "அவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால், அங்கு பரந்துபட்ட அளவில் வியாபித்திருக்கும் சித்திரவதைகளுக்கு ஆளாகும் அபாயம் உள்ளது" என்று கூறப்பட்டுள்ளது.

அந்தத் தீர்ப்பாயமே பிரிட்டனில் குடியுரிமை மற்றும் அகதித் தஞ்சம் குறித்த வழக்குகளை விசாரிக்கும் உயர்மட்ட அமைப்பாகும்.

இலங்கைத் தமிழ் அகதிகளின் புகலிட கோரிக்கையை முடிவு செய்ய ஆஸ்திரேலியா மற்றும் பிரிட்டிஷ் அரசுகள் கையாண்ட விதம் குறித்து நீதிபதிகள் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

அந்த இரு அரசுகளும் இலங்கையிலுள்ள சூழல்கள் பற்றி மதிப்பீடு செய்த ஒரு அறிக்கையை அளவுகோலாகக் கொண்டு அகதித் தஞ்சக் கோரிக்கைகளைக் கையாண்டு அதன் மீதான முடிவுகளை எடுத்தன என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

அந்த அறிக்கை நம்பகத்தன்மை கொண்டது அல்ல அன்று அந்தத் தீர்ப்பாயத்தின் மூன்று நீதிபதிகளும் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளனர். நம்பகத்தன்மை இல்லாத அந்த அறிக்கையின் அடிப்படையில் இலங்கையிலிருந்து தப்பி ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோரியவர்களுக்கு-குறிப்பாகத் தமிழர்களுக்கு பாதுகாப்பு மறுக்கப்பட்டுள்ளது.

இரு நாட்டு அரசுகளும் அமைத்த "உண்மையைக் கண்டறியும் குழுக்கள்" இலங்கை சென்று ஆய்வுகளைச் செய்து அளித்த அறிக்கையை நம்பி அதன் அடிப்படையில் தஞ்சக் கோரிக்கைகளை நிராகரிப்பது பிழையானது என்பதே அந்தத் தீர்ப்பின் மையக் கருத்துமாகவுள்ளது.

இதன் மூலம் இலங்கையிலிருந்து உயிராபத்திலிருந்து தப்பித்து அகதித் தஞ்சம் கோரி விண்ணப்பித்து அது பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியாவால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு ஒரு புதுவாழ்வு கிடைக்கும் என்று எதிர்பாக்கப்படுகிறது.

இது தொடர்பில் ஆஸ்திரேலிய வெளி விவகாரம் மற்றும் வர்த்தக (DFAT), அமைச்சுக்கு எழுதியுள்ள கடிதத்தில், உண்மை மற்றும் சமாதானத்திற்கான செயல் திட்ட அமைப்பும் (ITJP) சர்வதேச நீதிக்கான ஆஸ்திரேலிய மையம் (ACIJ) ஆகியவை இலங்கையில் நிலவும் சூழல் தொடர்பாக ஆஸி அமைச்சு வெளியிட்ட "நாட்டறிக்கையின்" [Country Information Report Sri Lanka 4 November 2019.] துல்லியத்தன்மை, கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகள், நம்பகத்தன்மை மற்றும் முடிவுகள் ஆகியவை குறித்து கவலைகளையும் கேள்விகளையும் எழுப்பியிருந்தன.

தாங்கள் தெரிவித்திருந்த கருத்துக்கள் மற்றும் கவலைகள் இப்போது உண்மையாகியுள்ளன என்று அந்த இரு அமைப்புகளும் இப்போது சுட்டிக்காட்டியுள்ளன.

ஆஸ்திரேலியாவை போலவே பிரிட்டிஷ் அரசின் உள்துறை அமைச்சு தயாரித்து வெளியிட்ட இலங்கை குறித்த "நாட்டறிக்கையும்" கடுமையாக விமர்சிக்கப்பட்டு தீர்ப்பாயத்தால் நிராகரிக்கப்பட்டது. உயர்நிலை தீர்ப்பாயத்தின் தீர்ப்பையடுத்து சர்ச்சைக்குரிய குறிப்பிட்ட பகுதிகளை நீக்கும் நிலைக்கு பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு தள்ளப்பட்டது.

பிரித்தானிய தீர்ப்பாயத்தின் இந்தத் தீர்ப்பை அடுத்து ஆஸ்திரேலிய அரசு அகதித் தஞ்சம் அளிப்பது தொடர்பான தமது கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மனித உரிமை அமைப்புகள் கோரியுள்ளன. அப்படிச் செய்யும் போது, அகதித் தஞ்சம் கோருபவர்கள் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால், அவர்கள் உயிருக்கு ஆபத்துள்ளது என்று பிரித்தானிய தீர்ப்பாயம் கூறியுள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அந்த அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.




"இலங்கை அகதிகள் வலிந்து மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால் அவர்கள் சித்திரவதை செய்யப்படும் அபாயம் உண்மையில் யதார்த்தமாக உள்ளது. நம்பகத்தன்மை இல்லாத அறிக்கைகளின் அடிப்படையில் ஏராளமான இலங்கை அகதிகளின் நிலையை தீர்மானிக்க முடியாது அப்படிச் செய்தால் சர்வதேச கடப்பாடுகளை மீறியதான குற்றச்சாட்டுக்கு ஆளாகும். இவை உயிராபத்துடன் விளையாடும் பாரதூரமான விஷயங்களாகும்" என்று தேசிய நீதி செயல்திட்டத்தின் தலைமை சட்டத்தரணியும் பணிபாளருமான ஜார்ஜ் நியூஹவுஸ் கூறியுள்ளார்.

குடியுரிமை மற்றும் அகதித் தஞ்சம் குறித்த கோரிக்கையைப் பரிசீலிக்கும் உள்துறை அமைச்சு, குடியுரிமை மதிப்பீட்டு அதிகார சபை மற்றும் மேல் நிர்வாக மேல்முறையீட்டு ஆணையம் ஆகியவை ஆஸ்திரேலிய உள்துறை அமைச்சின் "நாட்டறிக்கை" மற்றும் அதிலுள்ள அம்சங்களை பரிசீலித்து கவனத்தில் எடுக்கும்.

ஏசிஜஜே மற்றும் ஐடிஜேபி ஆகியவை ஆஸ்திரேலிய உள்துறை அமைச்சின் 2019ஆம் ஆண்டுக்கான இலங்கை குறித்த அறிக்கை மிகவும் பிழையானது மற்றும் அடிப்படை ஆதாரங்களற்றது என்று கூறியுள்ளன.

நம்பகத்தன்மையற்ற அந்த அறிக்கை புறந்தள்ளப்பட வேண்டுமென்று இந்த இரு அமைப்புகளுடன் இணைந்து பல அமைப்புகள் குரல் கொடுத்துள்ளன. அந்த அறிக்கை மற்றும் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சகத்தின் அறிக்கை ஆகிய இரண்டின் அடிப்படையில் குடிவரவு முடிவுகள் எடுக்கப்படுவது இடைநிறுத்தப்பட வேண்டும் என்றும் அந்த அமைப்புகள் கோருகின்றன. ஆவணங்களிலுள்ள தவறுகள் திருத்தப்படும் வரை அந்த அறிக்கையைச் சார்ந்து முடிவுகள் எடுக்கப்படக் கூடாது என்று அந்த அமைப்புகள் கேட்டுள்ளன.

அதுமட்டுமின்றி அகதித் தஞ்சம் கோரியுள்ள தமிழர்களின் வழக்குகள் அனைத்தும் மீண்டும் பரிசீலிக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் தஞ்சக் கோரிக்கைகள் தொடர்பில் இனியும் ஆஸ்திரேலிய அமைச்சகத்தின் அந்த அறிக்கையை அதிகாரிகள் சார்ந்திருக்கக் கூடாது என்பதற்கு பிரிட்டனின் உயர்நிலை தீர்ப்பாயத்தின் தீர்ப்பு ஒரு எடுத்துக்காட்டு என்கிறார் சர்வதேச நீதிக்கான ஆஸ்திரேலிய மையத்தின் செயல் இயக்குநர் ரவான் ஆரா..ப்.

"இலங்கையில் அரச ஆதரவில் சித்திரவதைகள் நடைபெறுவதில்லை என்று உள்துறை அமைச்சகம் கூறுவது அதிர்ச்சியளிக்கிறது. சுயாதீனமாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் ஆதாரங்கள் அவை தொடருவதாகக் கூறும் போது அரசு அதை அடக்கி வாசிப்பது மிகவும் கவலையாக உள்ளது.




இலங்கையில் பாதுகாப்பு படையினரால் மக்கள் கைது செய்யப்பட்டு சட்ட விரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவது பரந்துபட்ட அளவில் நடைபெறுவதற்கான ஆதாரங்கள் பெருமளவில் உள்ளன".

இதனிடையே ஜெர்மனியிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான பத்து பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு மார்ச் மாதம் சுமார் 30 பேர் வலிந்து ஜெர்மனியிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

# இந்தியாவில் பேரழிவை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரசின் பெயர், 'டெல்டா' உலக சுகாதார நிறுவனம் அறிவிப்பு




இந்தியாவில் உருமாறி, 2வது அலையாகப்பரவி பேரழிவை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரசின் பெயரை "டெல்டா" என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் நோய்த்தொற்று அமெரிக்கா, இந்தியா, பிரேசில் உள்ளிட்ட சில நாடுகளில் மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளது. பல்வேறு நாடுகளில் உருமாறிய கொரோனா வைரஸ்கள் புதிது புதிதாக கிளம்பி பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இந்தியாவில் உருமாறித்தாக்கி வரும் கொரோனா வைரஸ், "பி.1.617" என்ற வகையை சேர்ந்தது என கண்டறியப்பட்டதாக மத்திய அரசு அறிவித்திருந்தது.

இதற்கிடையே, வைரஸ்கள் அல்லது மாறுபாடு அடைந்த வைரஸ்கள் அவை கண்டறியப்பட்ட நாடுகளின் பெயர்களால் அடையாளம் காணப்படக் கூடாது என உலக சுகாதார அமைப்பு ஏற்கனவே தெரிவித்திருந்தது.

இந்நிலையில், இந்தியா உள்பட பல்வேறு நாடுகளிலும் கண்டறியப்பட்ட கொரோனா திரிபு வகைகளுக்கு பெயர்களை உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. அதன்படி, கடந்த ஆண்டு அக்டோபரில் இந்தியாவில் முதலில் கண்டறியப்பட்ட "பி.1.617" வகை கொரோனா வைரசுக்கு "டெல்டா" என பெயரிட்டுள்ளது.

இங்கிலாந்தில் கடந்த ஆண்டு செப்டம்பரில் கண்டறியப்பட்ட கொரோனாவுக்கு "ஆல்பா" என பெயரிடப்பட்டு இருக்கிறது.

தென் ஆப்பிரிக்காவில் கடந்த 2020-ம் ஆண்டு மே மாதம் கண்டறியப்பட்ட கொரோனா "பீட்டா" எனவும், பிரேசிலில் கடந்த ஆண்டு நவம்பரில் கண்டறியப்பட்ட வகை "காமா" எனவும், அமெரிக்காவில் கண்டறியப்பட்ட கொரோனா "எப்சிலான்" எனவும் உலக சுகாதார அமைப்பால் பெயரிடப்பட்டுள்ளன.

கொரோனா எடுக்கும் அவதாரங்களும், உருவங்களும் அவற்றின் பெயர்களும் நாட்டுக்கு நாடு வேறுபடலாம். ஆனால் அது ஏற்படுத்தும் ஒரே பாதிப்பு மனிதகுலப் பேரழிவு என்பது தான் நினைக்கவே நடுக்கமாக இருக்கிறது.

- மணிராஜ், திருநெல்வேலி

SCARBOROUGH HEALTH NETWORK FOUNDATION

# RADIOTHON

# ரேடியோதோன்

## June 9, 2021

## 8AM - 8PM

**Join us for the first-ever Tamil Radiothon in Toronto in support of our Scarborough hospitals!**

**SHNFoundation.ca/TamilRadiothon**

**In partnership with**

east FM 102.7

**In support of**

SHN FOUNDATION

**Presenting Sponsor & Call Centre Sponsor**

CTCC Canadian Tamils' Chamber of Commerce

### Power Hour Sponsors

PDXN Premier Diagnostic Network — T: 888-988-7396 | www.pdxn.ca — Radiology & Cardiology Services

PRISHA LAW Professional Corporation

Life100 Insurance & Investments Inc

JC's Banquet & Convention Centre

Nava Wilson LLP Barristers and Solicitors

Sri Lankan Accountants Association of Canada

the co-operators — A Better Place For You

Formula Honda
Rajah Tharmalingam
Sales & Leasing Consultant

### Community Sponsors

Monsoon Journal — A parfait media publication

Ari A. Ariaran — Chartered Professional Accountant — CPA

SPC Suntharalingam Professional Corporation — Chartered Accountant and Business Advisor

PRISHA LAW Professional Corporation

Murali Sivaguru
Ramachandran Law Professional Corporation
Devadas Law Professional Corporation
Dilani Gunarajah Law Office

Christine Seevaratnam
Sinnadurai Jeyakumar
Darshan Sritharan – IConnect Mortgages

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# கருணாநிதி பிறந்த நாளில் தமிழக மக்களுக்கான 5 முக்கிய திட்டங்கள் முதல்வர் முக ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்



ரேசன் கடைகளில் 14 மளிகை பொருட்கள், கொரோனா இரண்டாம் கட்ட நிதி ரூ2000, அர்ச்சகர்களுக்கு ரூ4000, கொரோனாவால் உயிரிழந்த டாக்டர்கள், நீதிபதிகள், போலீசாரின் குடும்பத்தினருக்கு ரூ.25 லட்சம், பத்திரிகையாளர்கள் குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சம் என 5 முக்கிய திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜூன் 3-ல் தொடங்கி வைக்கிறார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்து. முதல்வராக ஆட்சிப் பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலின் தொடர்ந்து அதிரடியாக மக்கள் நலத்திட்டங்களை அமல்படுத்தி வருகிறார். கொரோனா சூழலை கருத்தில் கொண்டு தனது முதல் கையெழுத்தாக தேர்தல் வாக்குறுதிகளில் குறிப்பிட்ட 5 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கி கையெழுத்திட்டார்.

அதன்படி, தமிழக அரசின் கொரோனா நிவாரண நிதியாக ரூ.4000 அறிவிக்கப்பட்டது. அதன் முதல் தவணையாக, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ. 2000 வழங்கப்பட்டது.

இந்நிலையில், தமிழகத்தில் இரண்டாவது முறையாக ஒரு வாரத்திற்கு தளர்வுகளற்ற முழு ஊரடங்கு நீட்டிக்கப்பட்டிருப்பதால் பொது மக்கள் யாரும் பசி, பட்டினியில் வாடாமல் இருக்க தமிழக அரசு அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் 14 வகை மளிகைப் பொருள்கள் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. அதன்படி, கோதுமை மாவு 1 கிலோ, உப்பு 1 கிலோ, ரவை 1 கிலோ, சர்க்கரை 500 கிராம், உளுந்தம் பருப்பு 500 கிராம், புளி 250 கிராம், கடலைப்பருப்பு 250 கிராம், கடுகு 100 கிராம், சீரகம் 100 கிராம், மஞ்சள் தூள் 100 கிராம், மிளகாய்த் தூள் 100 கிராம், டீத்தூள், குளியல் சோப்பு (25 கிராம்) 1, துணி துவைக்கும் சோப்பு (250 கிராம்) 1 ஆகியவை ரேஷன் கடைகள் மூலமாக விநியோகிக்கப்பட உள்ளன.

இந்த திட்டத்தை மறைந்த திமுக தலைவர் கருணாநிதி பிறந்தநாளை முன்னிட்டு ஜூன் 3-ந் தேதி (நாளை) காலை 10.30 மணிக்கு தலைமை செயலகத்தில் நடக்கும் நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

மேலும், கொரோனா நிவாரண நிதி 2வது தவணையாக ரூ2 ஆயிரம், கோவில்களில் பணிபுரியும் மாதச்சம்பளம் பெறாத அர்ச்சகர்கள், ஊழியர்கள் உள்ளிட்டோருக்கு ரூ.4000 நிவாரண நிதி மற்றும் 10 கிலோ அரிசி, 14 வகையான மளிகை பொருட்கள் வழங்கும் திட்டம் ஆகியவற்றையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

கொரோனாவால் உயிரிழந்த டாக்டர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், போலீசார் உள்ளிட்டோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ25 லட்சம், பத்திரிகையாளர்களை இழந்த குடும்பத்தினருக்கு ரூ10 லட்சம் நிவாரண நிதி வழங்கும் திட்டத்தையும் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

மளிகை பொருட்கள் ரேஷனில் மக்களுக்கு விநியோகிக்கும் பணி 5ம் தேதி முதல் தொடங்கப்படுகிறது. இதற்காக, கடந்த சில நாட்களாக மளிகை பொருட்களை பேக்கிங் செய்து ரேசன் கடைகளுக்கு அனுப்பி வைக்கும் பணி தற்போது வேகமாக நடைபெற்று வருகிறது. மளிகைப் பொருள்கள் அடங்கிய தொகுப்பு மற்றும் கொரோனா நிவாரண நிதியின் இரண்டாம் தவணை ரூ2000 ஆகியவற்றை பெற்றுக் கொள்வதற்கான டோக்கன்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. இந்த டோக்கன் 4-ந் தேதி வரை விநியோகிக்கப்படுகிறது.

இதையடுத்து 5ம் தேதி முதல் நிவாரணப் பொருள்களை பொது மக்கள் ரே'ன் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரங்களில் தவறாது அவற்றை பெற்றுக் கொள்ளவும் தமிழக அரசு சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வெந்தய கீரையின் மருத்துவ குணங்களைப் பற்றி தெரிந்து கொள்வோம்



சாதாரணமாகச் சமையலில் பயன்படுத்தப்படும் வெந்தயத்தின் தழைதான் வெந்தயக்கீரை எனப்படுகிறது. இது சத்து நிறைந்த கீரை. வெந்தயம் விதைகளின் மூலம் பயிரடப்படுகிறது.

வெந்தயக்கீரையில் ஏ வைட்டமின் சத்தியும், சுண்ணாம்புச்சத்தும் இருப்பதால் இதைப் சாப்பிடும் போது மாரடைப்பு, கண்பார்வை குறை, வாதம், சொறி சிரங்கு, இரத்தசோகை ஆகியவை குணமடையவும், பசியைப்போக்கவும் பயன்படுகிறது. குடல் புண்களும் குணமாகின்றன.

வெந்தயக் கீரையில் வைட்டமின்களும், தாது உப்புகளும் அதிக அளவில் இருக்கின்றன. சொறி, சிரங்கை நீக்குகிறது. பார்வைக்கோளாறுகளைச் சரி செய்கின்றது. வெந்தயக் கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டால் காசநோயும் குணமாவதாகக் கூறுகின்றனர். இந்தக் கீரை வயிற்று நோய்களையும் குணப்படுத்துகின்றது.

வெந்தயக் கீரையை வேக வைத்து அதனுடன் தேன் கலந்து கடைந்து உண்டால் மலம் சுத்தமாகும். உடல் சுத்தமாகும். குடல் புண்களும் குணமாகின்றன. மலம் கழிக்கும்போது ஏற்படும் உளைச்சலையும் எரிச்சலையும் வெந்தயக்கீரை குணப்படுத்துகின்றது.

மூலநோய், குடல் புண் போன்ற நோய்களுக்கும் இந்தக் கீரை சிறந்த மருந்தாகத் திகழ்கிறது. வெந்தயக் கீரையை அரைத்துச் சூடு செய்து வீக்கங்கள் மீது பூசினால் வீக்கம் குறையும். இவ்வாறு செய்வதால் தீப்புண்களும் குணமாகும்.

இந்தக் கீரையைத் தொடர்ந்து 40 நாட்களுக்குச் சாப்பிட்டு வந்தால் நீரிழிவு கட்டுப்படும். எனவே, நீரிழிவு உள்ளவர்கள் வெந்தயக் கீரையைத் தொடர்ந்து சாப்பிடுவது நல்லது. வெந்தயக் கீரை ஜீரண சக்தியை அதிகரித்து, பசியைத் தூண்டுகிறது. சிறுநீர் உறுப்புகளை சுத்தம் செய்கிறது. மூளை நரம்புகளைப் பலப்படுத்துகிறது. வயிற்றுக் கட்டி, உடல் வீக்கம், சீதபேதி, குத்திருமல், வயிற்று வலி ஆகியவற்றைக் குணப்படுத்துகிறது.

வெள்ளைப் பூசணிக்காய் சாம்பாரில் வெந்தயக் கீரையைச் சேர்த்துச் சாப்பிட்டால் பெருத்த உடல் இளைக்கும். வயதுக்கு வரும் பெண்கள் இதைச்சாப்பிட்டால் இரத்த விருத்தியுண்டாகும்.




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments


உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com



# தமிழகத்தைச் சேர்ந்த இலக்கியக் கலாநிதி நிர்மலா சுரேஷ் சென்னையில் இயற்கையெய்தினார்

அண்மையில் சென்னையில் இயற்கை மரணத்தை எய்திய இலக்கியக் கலாநிதி நிர்மலா சுரேஷ் அவர்களுக்கு எமது அஞ்சலிகளும் அவரது அன்புப் பிள்ளைகளுக்கு எமது அனுதாபங்களும் உரித்தாகுக. கவிஞரும், எழுத்தாளரும் 1989ம் ஆண்டு தமிழக சட்டசபைத் தேர்தலில் மயிலாப்பூர் தொகுதியின் திமுக வேட்பாளராகப் போட்டியிட்டவருமான டாக்டா. நிர்மலா சுரேஷ் அவர்கள் 1994ம் ஆண்டளவில் கனடாவிற்கு வந்திருந்தார். தனது கணவரோடும் குழந்தைகளோடும் நிரந்தர குடியுரிமை பெற்று இங்கு வந்திருந்த அவர், அவ்வேளை நான் பிரதம ஆசிரியராக பணியாற்றிய "சூரியன்" வார இதழோது நெருங்கிய தொடர்பைக் கொண்டு நட்போடு பழகி வந்தார்.

அப்போது இங்கு நடைபெறுகின்ற அனைத்து இலக்கியக் கூட்டங்களுக்கும் அழைக்கப்படுகின்ற ஒரு பேச்சாளராகத் திகழ்ந்த அவர், அந்த நாட்களில் கனடாவிற்கு வருகை தந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் வி. பி. சிங் அவர்களின் சிறப்பு நிகழ்ச்சியொன்றுக்கு விசேட அழைப்பிதழ் பெற்று என்னையும் அழைத்துக் சென்றார். அங்கு மேடையில் வி. பி. சிங் அவர்களை கௌரவிக்கின்ற நேரம் நெருங்கியபோது, என்னையும் தன்னோடு மேடைக்கு அழைத்துச் சென்று அவரை கௌரவிக்கின்ற பணியை என்னிடமே ஒப்படைத்த ஒரு எளிமையான ஒரு பெண்மணி நிர்மலா சுரேஷ் ஆவார்.

அவரது இலக்கியத் திறனைக் கண்டு மொன்றியால் நகரத்திலிருந்தும் அவருக்கு அழைப்புக்கள் வரத் தொடங்கின. அவ்வேளையில் மொன்றியால் நகர் வாழ் அன்பரும் "சூரியன்" மற்றும் "உதயன்" ஆகியவற்றின் தொடர் எழுத்தாளருமான வீணைமைந்தன் கே. ரி. சண்முகராஜா அவர்கள் கலாநிதி நிர்மலா சுரேஷ் அவர்களை ஒரு நேர்காணல் செய்தார். அந்த நேர்காணல் இன்றிலிருந்து சுமார் 27 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான போது, ஆயிரக்கணக்கான வாசகர்கள் அதனை வாசித்து இன்புற்றனர் என்பது இன்றும் எமது ஞாபகத்தில் உள்ளது.

அக்காலத்தில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு வலது கரமாக விளங்கியவரும் திருச்சி புனித ஜோசப் கல்லூரியின் பொருளாதாரத் துறை பேராசிரியராகப் பணியாற்றியவருமான யு. இருதயராஜ் அவர்களின் அருந்தவப் புதல்வியான நிர்மலா சுரேஷ் அவர்களின் துணைவரும் ஒரு பொருளாதாரத் துறை நிபுணராகப் பணியாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி நேர்காணலை மறைந்த இலக்கியக் கலாநிதி நிர்மலா சுரேஷ் அவர்களின் ஞாபகார்த்தமாக இவ்வார உதயன் இதழில் பிரசுரம் செய்கின்றோம்.

**இங்ஙனம்:**
**ஆர். என். லோகேந்திரலிங்கம்**
**பிரதம ஆசிரியர் - உதயன்**

**"சூரியனுக்காக" நேர்காணலைத் தொகுத்தெழுதியவர், திரு. கே.ரி. சண்முகராஜா**

"உங்கள் பத்திரிகைக்கு ஏன் "சூரியன்" என்று பெயர் வைத்துள்ளீர்கள்?"

"பிரபஞ்சத்தில் சூரியனுடைய இயக்கம் இல்லாமல் எதுவுமே இயங்காது. உலகில் வாழும் ஜீவராசிகளுக்கும், இயற்கை நிகழ்வுகளுக்கும் எப்படிச் சூரிய ஒளி இன்றியமையாததோ, அவ்விதமே இங்கு (கனடாவில்) தமிழ்ப் பத்திரிகையின் முன்னோடியாக, தரமான எழுத்துக்களை, படைப்புக்களைத் தரக்கூடிய அறிவொளி வீசும் பத்திரிகையாக விளங்கவேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்துடன் சூட்டப்பட்டதே, "சூரியன்' நாமம்.

"ஏன் இந்தப் பெயர் பிடிக்கவில்லையா, உங்களுக்கு?"

(சிரிப்புடன்) "எப்படிப் பிடிக்காமல் போகும்! எங்கள் கழகத்தின் சின்னம் உதய சூரியன். அதை நினைவூட்டும் வகையில் உங்கள் பத்திரிகை பெயர் கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தந்துள்ளது. அதனாற்தான், நானாகவே தொலைபேசி மூலம் என் வாழ்த்துக்களைத் தெரிவித்தேன்."

தொலைக்காட்சிச் சேவையிலும், கவிதைத் துறையிலும் பிரபலமாகியிருந்த நீங்கள் எப்படி அரசியலுக்குள் பிரவேசித்தீர்கள்?"

"அரசியலுக்குள் வரவேண்டும் என்று அந்தரங்கத்தில் பல நினைவுகளோடு பவனி வந்தவள் அல்ல நான். நான் கலந்துகொண்ட கவியரங்க மேடைகள் சில, என்னை அரசியல்வாதியாக்கிவிட்டது. காங்கிரஸ்காரர்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும் என்ற எனது எண்ணத்தைச் செயலாக்கும் அளவிற்கு என்னை விமர்சித்தவர்கள்,காங்கிரஸ்காரர்கள்".

"ஆரம்ப காலத்தில், உங்கள் தந்தையார் அறிஞர் அண்ணாவுடன் கொண்டிருந்த அரசியல் நட்பும் ஒரு காரணமாக இருக்கலாமல்லவா?."

"நான் தி.மு.க.வில் அங்கத்துவம் பெற்றபின்புதான், பெரும்பாலானோர் எனது தந்தையார் பற்றி அறிந்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். தலைவருக்கும், பேராசிரியர் (அன்பழகன்) போன்ற மூத்த உறுப்பினர்களுக்கும், 1989 இல்தான் என் பூர்வீகம் தெரியும். ஆனாலுங்கூட, விண்ணப்பத்தை அனுப்பிவிட்டு, நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தவேளை அறிவாலயத்துக்குள் போயிருந்தவள் நான்! நேர்முகப் பரீட்சையிற் சமூகமளிக்காமலேயே மயிலாப்பூர்த் தொகுதிக்கு சீட் கிடைத்ததற்கு என் இலக்கிய நேர்மையே காரணம். என்னைத் தெரிவு செய்தமை நியாயமானதே என்று எமது கழகத் தோழர்களும், வாக்காளர்களும் நிருபித்திருப்பார்கள். ஆனால், அந்த அசம்பாவிதம் (ராஜீவ் கொலை) எதிர்பாராமல் நடந்தபடியால், "ராஜீவ் அலை" வெற்றித் திசையை இடம்மாற்றி விட்டது. நடந்து முடிந்த தேர்தலில், சென்னையில் நான்காவது அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற தி.மு.க. அபேட்சகர் நான் என்று கழகத் தோழர்கள் பெருமையுடன் சொல்வார்கள்".

"கலைஞரைப் பற்றிச் சொல்லுங்கள்....!"



நாடறிந்த கலைஞர். எங்களுக்குத் தலைவர், என்றும் அவரே தலைவர், இன்று நேற்றல்ல, கடந்த ஐம்பது ஆண்டுகளாக, அரசியலில் ஒரே கட்சியில் நிலையாக நிற்பவர் இவரே தான்! பதினான்கு வயதில் ஆரம்பித்த பயணம் தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. பதவியில் இருந்தாற்தான் ஒரு சிலரால் ஜொலிக்க முடியும். பதவியில் இல்லாதபோதும், உயர் தலைவன் அதிகாலையில் எழுந்ததுமே சகல செய்தித்தாள்களையும் படித்தறிந்த பத்திரிகை அரசியலைப் புரிந்துகொள்வார். பலதரப்பட்டவர்களிடமிருந்தும் தேவையான தகவல்களைப் பெற்று, அப்படியே விரல் நுனியில் சரியான விபரங்களுடன் அன்றைய பொழுதிற்குத் தயாராகிவிடுவார். பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்தல், முக்கிய தலைவர்களுடன் உரையாடுதல், முரசொலிக்குக் கடிதம் எழுதுதல், பொதுக் கூட்டத்தில் பேசுதல், பிறந்த நாள், மணவிழா என்று தலைமையேற்றல் என்று, அன்று தொட்டு இன்றுவரை ராஜ்ய பரிபாலனம்செய்து வரும் தலைவர் உலகில் இவர் ஒருவரேதான்".

"உங்களது அரசியல் வாழ்விலும் சரி, இலக்கியப் பணியிலும் சரி, மறக்க முடியாத நிகழ்வொன்றை நினைவுபடுத்துங்கள்.......!"

"கவிஞருடைய மனம் எதையுமே மறப்பதில்லை. என் சிறுவயதிலேயே தந்தையை இழந்த துயரமும், நானே எதிர்பாராத வண்ணம் என் சிறு வயதிலேயே தந்தையை இழந்த துயரமும், நானே எதிர்பாராத வண்ணம் என் இலக்கியத் திறன் மக்களைக் கவர்ந்ததும், 1980இல் "ஆனந்த விகடன்" பொன்விழாக் கவியரங்கில் டாக்டர் கலைஞர் தலைமையிற் பங்கேற்றதும், 1984இல் சென்னை வானொலிச் செய்தி வாசிப்பாளரானதும், பின் வெளியேற்றப்பட்டதும், 1990இல் "பாரதிதாசன் விருது" பெற்றதும், 1991இல் தி.மு.க. வேட்பாளராய் அறிவிக்கப்பட்டதும், ராஜீவ் கொலையைத் தொடர்ந்து அதிர்ச்சியுற்ற நாங்கள் அடைந்த துன்பங்களும், இப்போது கனடா நாட்டில் வந்து உங்களைச் சந்தித்ததையும் உட்பட, எதையுமே என்னால் மறக்க இயலாது."

இவ்வருடன் மயிலாப்பூரில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலுக்குப் போட்டியிடுவதற்குக் கழகம் உங்களைத் தான் நிறுத்துவதாகப் பேச்சு அடிபடுகிறது! அந்த நேரத்தில் நீங்கள் கனடாவிற்குக் குடி வந்துள்ளீர்களே!"

என்னை அரசியல்வாதியாகப் பார்ப்பதிலும் பார்க்க, பொறுப்புள்ள குடும்பத் தலைவியாகத் தலைவர் என்னை மதிக்கிறார். "சென்று வாருங்கள்" என்று வாழ்த்தி அனுப்பிவைத்தனர். இங்கு நான் வாழ்ந்தாலும், என் நினைவலைகள் அங்கு சிறகடித்துப் பறக்கத்தான் செய்கிறது! தாயகம் அல்லவா!"

"எங்களது பிரச்சினையை, அதாவது ஈழத் தமிழர் பிரச்சினையைத் தமிழக அரசியல்வாதிகளும், மக்களும் எப்படி நோக்குகிறார்கள்?"

"உங்கள் பிரச்சினை தமிழக அரசியலுக்கு அவசியமில்லாத தொன்றாகிவிட்டது. ஆரம்பத்திலிருந்து பார்த்தால், அதாவது 83களில் எங்களுடைய இனம் பக்கத்தில் துன்பப்படுகிறார்களே! பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமுடியுமா? என்று துடித்தார்கள்.

அப்புறம் யார் கூடுதலாக இலங்கைத் தமிழர்களுக்காகத் துடிக்கிறார்கள் என்பதில் ஒரு போட்டி.

ஒருவருக்கொருவர் போட்டிபோட்டு, உங்களை யார் விரைவில் மறப்பது என்பதில் இன்றைய அரசியல் நிலைப்பாடு உள்ளது. இன உணர்வுகள், இனப் படுகொலைகள் எல்லாம் இன்றைய இடைத்தேர்தல் இலவசங்களுக்கு முன்னால் இல்லாமல் பண்ணிவிட்டார்கள். மக்களுடைய உணர்வுகளை, உணர்ச்சிகளைத் திசை மாற்ற "ராஜீவ் கொலை" ஒரு காரணமாக அமைந்துவிட்டது.

பக்கத்து நாட்டில் வாழும் சகோதர இனம், அதுவும் ஒரே மொழி பேசும் தமிழினத்தின் அடிப்படை உரிமைகள், அராஜகத்தினால் அழிக்கப்படுகிறதே என்று சிந்திக்கக்கூடிய ஆட்சியாளர்களையா மக்கள் தெரிவு செய்துள்ளார்கள்! ஒரு நாட்டை யார் ஆளவேண்டும்!

எப்படிப்பட்டவர்களை ஆட்சியில் அமர்த்த வேண்டும்! அவர்கள் படித்தவர்களா இல்லாவிட்டாலும், பண்புள்ளவர்களாக, பகுத்தறிவு படைத்தவர்களாக, பாசம் மிக்கவராக, மனித நேயம் மிகுந்தோராக இருக்கவேண்டும் என்று சிந்தனை செய்யாத மக்களிடம் அடுத்த நாட்டின் தமிழினத்தின் துன்பம் எப்படியய்யா எடுபடும்! படித்தவர்கள், பண்பாளர்கள் துடிக்கத்தான் செய்கிறார்கள்! பலன் இல்லை. பணமூட்டையும், சாராய சாம்ராஜ்யமும் பாமர மக்களை விலைக்கு வாங்கிவிடுகிறது. "காதுக்குக் கம்மலும்", மூக்குத்தியும் கொடுத்தால் கோடிகளின் சொந்தக்காரர்களையல்லவா கோலோச்ச வருகிறார்கள்!

ஆனால், இவர்களுக்கு மத்தியில் இன்னும் ஒரு குரல் உங்களுக்காக ஒலிக்கிறது என்றால், இது தலைவரின் குரல்தான். அவருடைய ஆத்மாவை, அந்தரங்கத்தைச் சரியாகப் புரியாதவர்களினாற்தான் அவரைக் குறைகூட முடியும். தலைவர்கள் அவர்களைப் புரியாதவர்கள் அல்லது புரிந்தும் புரியாததுபோல் மறுப்பவர்கள். தமிழகத்தில் மாத்திரமல்ல,ஈழத்திலும் இருக்கிறார்கள், இங்கும் இருக்கிறார்கள். இங்குள்ள பத்திரிகைகள் சில, கலைஞர் அவர்களுக்கெதிரான பிரச்சாரத்தைச் செய்து வருகிறார்கள்! இது ஒரு தவறான பிரச்சாரமாகும்!"

"விடுதலைப் புலிகளுக்குத் தலைவர் ஆதரவு என்கிறீர்களா?"

"தம்பி பிரபாகரன் எங்கிருந்தாலும் வாழ்க!" என்று சொல்வதை அரசியல் அவதானிகள் எப்படி எடுத்துக் கொள்வார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களோ, அதுதான் நிஜம்".

"உங்களுக்கு நினைவிருக்கிறதா, வாழப்பாடியார் சொன்னது! வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது டெல்லிக்கு ஆணையிடுவது சென்னைக் கோட்டையிருந்தா என்று கேட்டது!"

"இந்திய இராணுவத்தைத் திருப்பி அழையுங்கள்,ஈழத்தமிழர்கள் பிரச்சினை மேலும் சிக்கலாகாமல் இருக்கும்" என்று குரல் அப்போது ஒலித்தது.

"டாக்டர் கலைஞர் செய்வதைச் சொல்வார், சொன்னதைச் செய்வார்.
இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வருகிறது. மாநில முதலமைச்சர் என்ற ரீதியில் இந்திய இராணுவத்தை வரவேற்கத் தலைவர் போயிருக்கலாம். இன உணர்வு கொண்ட தலைவர் இன உணர்வையே காட்டிக் கொண்டார்".

"வை.கோ. பிரச்சினை கழக்கதைப் பலவீனப்படுத்தியுள்ளது. கழகத்தின் தலைமை சரியாகவே செயற்படுகிறது. தலைமை சரியாக இல்லாவிடில், எதுவுமே செயலற்றதாகிவிடும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காக்க முயாதவர்களால் ஒரு கட்சியை உருவாக்குவதோ, அதை வழி நடத்துவதோ இயலாத காரியம்".

"வை.கோ.நடாத்திய பேரணி, கழகத்திற்கு அதிர்ச்சியைத் தரவில்லையா?"

"தமிழ்நாட்டில் யாரும் பேரணி நடத்தலாம். கூட்டம் வரத்தான் செய்யும். தி.மு.க.வின் அங்கத்தவர்கள் சுமார் ஐம்பது இலட்சத்திற்கும் அதிகம். இதில் வை.கோ. ஆதரவாளர்கள், மிகவும் குறைவானவர்களே!

தேர்தல், போட்டி என்று வந்தால் தொகுதிகளில் வெறும் மைனாரிட்டி வாக்குகளையே இவர்கள் பெறுவார்கள்"

(தொடர்ச்சி 20 பக்கம்)

# ‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்’

**கலைஞர் கருணாநிதி 97 வது பிறந்தநாள் சிறப்புக் கட்டுரை**

“கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு,
.....வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரமென்றோர் - மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு - கூடவே,
கோழை எனக் கூனிக் குறுகாமல்
ஆளப்பிறந்தவர்கள் தமிழர்கள் - எனப்
பகைவர் தோலுரித்துக் காட்டிய பெரியார், அண்ணா, கலைஞர் வழி பல சமூக நீதி போராளிகள் பிறந்து வலம் வந்த தமிழ்நாடு, என்றும் நாம் மெய்சிலிர்த்துப் பாரதியை துணைக்கழைத்து முழங்க வேண்டிய நாளில் ஒன்றே ஜூன் 3ஆம் நாள்!”

ஆம், இன்றைய நாள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் முத்துவேல் கருணாநிதி அவர்களின் அகவை 97 ஆவது நினைவு நாளாகும்! “கலைஞர் 100”, எனும் நூற்றாண்டு நினைவு நாளில் வெளியிடப் போகும் கட்டுரைகளின் தொகுப்பிலிருந்து சில பகுதிகளை இப்பொன்னான நாளில் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கலைஞர் ஐயா உயிருடன் வாழ்ந்த காலத்தில் (இப்போது தமிழ் உள்ளங்களில் வாழ்கிறார்). அவரது அகவை எழுபது நாளில் 14 7 1993 திகதியிட்ட “முரசொலி”யில் பிரசுரமான செய்திகளையும் இங்கு இணைத்துள்ளேன்!

முதலில் கற்றுணர்ந்த சான்றோர் கலைஞரை எவ்வாறு வியந்தார்கள் என்று பார்ப்போம்.

“தமிழிடம் அதன் முகவரி கேட்டேன்
மேற்பார்வை மு கருணாநிதி என்றது!” என்பார் கவிஞர் அப்துல் ரகுமான்.

”தமிழின் பெருமையை - தமிழர் பெருமையை சங்ககாலம் - சோழர் காலத்திற்குப் பின் உலகம் போற்ற வேண்டும் என்ற கனவை நனவாக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு வரும் உலகத் தமிழினத் தலைவர் கலைஞர் ஒருவர் தான். அவரும் தமிழ்ப் புலவர் - தமிழ்க் கலைஞர் - இலக்கியப் படைப்பாளர் - கதை கட்டுரை வசனம் பேச்சு, கவிதை, சமூக நாவல், சரித்திர நாவல், கடிதம், உரைச்சித்திரம், நாடகம் ஆகிய இலக்கிய வடிவங்களில் உலா வந்த தமிழ் நிலவு” என்று எழுதிச் சென்றார் டாக்டர் மு வரதராஜன்.

”இலக்கிய படைப்பாளி மட்டுமல்ல, பத்திரிக்கை ஆசிரியர், அரசியல் தலைவர், பகுத்தறிவாளர், சமூக சீர்திருத்தவாதியுமாவார். அவரது ஒவ்வொரு பக்கமும் ஒளிவிடும் தரத்தது தகுதியுடையது”, என்பார் தமிழறிஞர். டாக்டர் வா. செ குழந்தைசாமி.

”தமிழால் கலைஞர் பெருமை பெற்றார். தமிழோ கலைஞரால் பெருமை பெற்றது என்கின்ற வரியில்லாத இலக்கிய வரலாறு இங்கே கிடையாது”, என்று பாடுவார் அரசு மணிமேகலை அம்மையார்.

இறைவன் பத்து அவதாரங்களை எடுத்தவர் என்று சொல்வார்கள். ஆனால் அவர் பத்து அவதாரங்களை எடுப்பதற்குப் பத்துப் பிறவிகளை எடுக்க வேண்டியிருந்தது. கலைஞர் அவர்கள் ஒரு பிறவியிலேயே பல அவதாரங்கள் எடுத்தவர். அந்த ஒவ்வொரு அவதாரத்திலும் அதன் உச்சியில் நிற்பவர். அவர் எடுத்த அவதாரங்களுள் ஒன்று தான் இலக்கியப் படைப்பாளர் என்பது.

அரசியல் தலைவர் கலைஞர் வேண்டுமானால், அவரவர் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப ஒரு கட்சிக்குச் சொந்தக்காரராக இருக்கலாம். ஆனால் இலக்கியப் படைப்பாளர் கலைஞர் தமிழினத்திற்கே சொந்தமானவர். இந்த ஒரு அறிவுபூர்வமான அணுகுமுறை தமிழ் மக்களிடையேயும் மிகுந்து இருப்பதனால்தான் “அகவை 97 நினைவு நாளில் எங்கள் எழுச்சிமிகு தமிழ் தந்தைக்கு, ”எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் கலைஞர் தமிழ் என்று சங்கே முழங்கு” என வாழ்த்தி வணங்கி நெஞ்சம் பூரித்து நிற்கிறோம்!



சேக்கிழார், பெரிய புராணம் எழுதினார். 12ஆம் நூற்றாண்டில் அநபாய சோழன் அவையில் அவர் முதலமைச்சராக இருந்தார். பெரியபுராணம் (பாடிய) எழுதிய சேக்கிழார் அமைச்சராகவும் இருந்தார், என்று சொல்லப்படுகிறதே தவிர காப்பிய கர்த்தா சேக்கிழார் அமைச்சராக இருந்தார் என்று எழுதப்படுகிறதே தவிர, அமைச்சர் பதவி அறிமுகம் செய்யவில்லை.

இளவரசனாகவிருந்த இளங்கோவனை “சிலப்பதிகாரம்“, காப்பிய நூல் அறிமுகம் செய்து வைத்ததேயொழிய, அவன் இளவரசன் என்பதற்காக அறிமுகமாகவில்லை. அதேபோன்று இலக்கியப் படைப்பாளர் கலைஞர் மூத்த அரசியல் தலைவராகவும் இருந்தார் என்றுதான் வரலாற்றில் பதியப்படும். 21ம் நூற்றாண்டில் எழுதப்படும் தமிழ், தமிழர் வரலாறு கலைஞருக்கு முன் - கலைஞருக்குப் பின் என்று காலம் குறித்து எழுதப்படும் என்பதில் ஐயமே இல்லை!

இனி என்னால் எழுதப் பெற்று - கலைஞரால் வாசித்து ரசிக்க பெற்று - “முரசொலியில்“ வெளியான சில பகுதிகளை உங்கள் ரசனைக்கு தருகிறேன்.

”திமுக என்ற மூன்றெழுத்தால் தன்னை முழு மனிதனாக கொண்டவர் திருக்குவளையூர் முத்துவேலர் கருணாநிதி. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த வாரிசு! தமிழை அறிந்தவர்! தமிழ் தாயின் மடியில் தவழ்ந்தவர்! தமிழை கசடறக் கற்றவர்! கற்றதைக் கற்கண்டாய் கதைப்பவர்!கனல் தெறிக்கும் வசனம் வரும்! புனல் போன்று கவிதை ஊறும்! மணங்கமழும் மலரை விட மனம் மகிழும்! காதல் சொல்லும் காவியத்து நாயகிகள் கலைஞரின் கலையாத ஓவியங்கள்! தமிழைப் பாடினார்! பரப்பினார்! தமிழ்க் காதலை காதலித்தார்! கற்பனையில் தீட்டிவிட்ட காவிய நாயகர்களை விடச் சிறந்த ரசிகனாக, காவிய சிற்பியாக, சிந்தனைச் செல்வராக சீர்திருத்தச் செம்மலாக - தமிழில் வாழ்கிறார்.

அகநானூறு - புறநானூறு - பத்துப்பாட்டு - எட்டுத்தொகை - பதினெண் கீழ்க்கணக்கு - கலித்தொகை, முத்தொள்ளாயிரம் எனச் சங்க காலத்து சிக்கலான தமிழ் பாடல் வரிகளை சேரியில் வாழும் அரிய குடிமகனும் குதூகலித்துப் படித்துச் சுவைக்கும் வண்ணம் - சங்கத் தமிழைச் சிங்கார நடையில் அலங்காரம் செய்பவர்! ஆஹா! அந்த அழகுத் தமிழ் அவருக்கு கைவந்த கலை. ஏகலைவன் நான், அவர் பாணியில் தீட்டிய வரிகள்.. இதோ..

இதோ.. புறநானூறு! போர்முரசு! புழுதி எல்லாம் குருதி வெள்ளம்! பழுதுபார்க்கும் பட்டறைகள் முழுவதிலும் பட்டாளத்துச் சிப்பாய்கள்! பவனிவரும் பேரிரைச்சல்! பள்ளியறை மறந்து பாசறையை நோக்கி வரும் வீர மிகு தோள்கள்! செவ்வான பூச்சைப் போல் சிவந்துவிட்ட விழுப்புண்கள்! ஐவ்வாதும், மல்லிகையும் மணக்கின்ற மணமகளின் அணைப்பினிலே திளைப்பதற்கு இனி எனக்கு நேரமில்லை! அழைக்கிறது போர்முரசு! அன்பே விடைகொடு! வீரத்திலகமிடு! விழி நீரைத் துடைத்து நில்! விரைவில் திரும்பிடுவேன்! வேல் விழியே கலங்காதே! காதலும் வீரமும் கையசைத்து விடை கொடுக்க காற்றையும் சாடிச் செல்லும் வீரர்கள் ஒருபுறம்!

தூங்காத கண்களுடன் பாக்கியரைத் துணைக்கழைத்து, துணைவனவன் வரவு நோக்கி ஏங்குகின்ற தலைவிகள்! ஏனம்மா தயங்குகிறாய்? வேலங்கே? வில்லெங்கே? விளையாடி வருகிறேன் எதிரியின் கோட்டையிலே! கொடுவாளை முத்தமிட்டு கொன்றுவிடுவேன் எதிரிகளை! பால் குடிக்கும் பாலகனை பாசறைக்குப் பயணம் செய்ய விடை கொடுக்கும் வீரத்தாய்கள்! வீரமணங்கமலும் புறநானூற்றுப் சோலையிலே பூத்து மணம் பரப்பும் காதலையும் - வீரத்தையும் கலைஞரின் கைவண்ணத்தில் கடைசி தமிழ் மகனும் கேட்டு காதலித்து வீரம் என்றால் என்ன? மானம் என்றால் என்ன? என்று வீறு கொண்டெழச் செய்யும் காவிய நடையைக் - கள்ளை விட மயக்கம் தரும் கலைஞரின் தமிழைப் போற்றாத தமிழர், தமிழர் அல்லர்!

”எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு” புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

**- வீணை மைந்தன்**




30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
SUMMER SPECIAL கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள்,
மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers,
Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti,
Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள்
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம்.
மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

*(17 பக்கம் தொடர்ச்சி)*



"வை.கோ. விற்குத் துணையாகக் கழகத்திலிருந்து பிரிந்து போன மற்றைய உறுப்பினர்கள் பற்றி.....?"

"எம்.ஜி.ஆர். மறைவிற்குப் பின்பு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற கலைஞர், ஊழல் அற்ற நிர்வாகம் நடைபெற வேண்டுமென்று விரும்பினார். அந்த விருப்பத்திற்கு விரோதமானவர்கள் இன்று வை.கோ.விற்குத் தோழர்களாக மாறியுள்ளார்கள்".

"வை.கோ.வின் விரக்திக்குக் காரணமென்ன?"

"கட்சியின் கட்டுப்பாடு சீர்குலையக்கூடாது, கண்ணியம் காக்கப்படவேண்டும் என்ற கடமையுணர்வுடன் எவ்வளவோ பிரச்சினைகளெல்லாம் கண்டுங் காணததுபோல் வை.கோ.வுக்குக் குறையேதும் வைக்காமல் (கட்சிக்குள் சிலரது அதிருப்தியைச் சம்பாதித்துங்கூட) சிவகாசியிற் தோற்றதற்கப்புறமும், இலங்கைக்கு இரகசியப் பயணம் மேற்கொண்டதற்குப் பிறகும் மூணாவது தடவையா நாமினேஷன் எம்.பி.யா டேல்கிக்கு அனுப்பிவைச்சாரே, நமது தலைவர், அதனால் விரக்தியேற்பட்டு இருக்கலாம்.....!

ஒரு ஜனநாயக நாட்டில் உள்ள அரசியற் கட்சியின் தலைவருக்கு அவரது உயிருக்கு ஆபத்து என்று மத்திய அரசும், மாநில அரசும் உளவத்துறை மூலம் அனுப்பிவைத்த தகவலை, ஜனநாயகப் பண்பாட்டைக் காத்துவரும் தலைவர், மக்களுக்குத் தெரியப்படுத்தியது வை.கோ. விற்கு விரக்தியைத் தந்திருக்கலாம்!

பிரதமர் நரசிம்மராவ்கூட நிமிர்ந்து போக முடியாத போயஸ் காடனுக்கு "நான் நிமிர்ந்து சென்றேன்" (சிரிப்பு) என்று அறிக்கை விட்ட ஒரு தோழர் சொன்ன வார்த்தையை நம்பி ஏமாந்து போனதால் விரக்தியேற்பட்டிருக்கலாம். இப்படிப் பல காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்"

"சரி! ஆட்சியில் உள்ளவர்கள் அதிகாரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு தங்கள் இஷ்டம்போல் நடப்பத்தைக் தடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சி செய்யாவில்லையா?"

"ஏன் இல்லை! மெஜாரிட்டில்லாவிடினும், எங்கள் கழகம் ஆட்சியில் தில்லுமுல்லுகளை அம்பலப்படுத்திக் கொண்டேயிருக்கிறது. சென்னையைச் சூழ்ந்துள்ள, படித்தவர்கள் மலிந்துள்ள சட்டசபை தொகுதி மக்கள், தாங்கள் விட்ட தவறை உணர்ந்துவிட்டார்கள். இன்னொரு தேர்தலைச் சந்திக்க நேர்ந்தால், மக்கள், ஆட்சியாளர்களுக்குப் பாடம் படிப்பிப்பது உறுதி."

"இந்தியாவிலேயே, திறமை மிகுந்த அதிகாரிகளும், கல்விமான்களும், நிர்வாகிகளும் மலிந்திருந்த தமிழக அரசியல், இப்படித் திசை மாறிப்போவதற்கு என்ன காரணம்?"

"உண்மைதான்! மற்றைய மாநிலங்களுக்கு முன்மாதிரியாக இருந்து செயற்பட்ட அதிகாரிகளும், நிர்வாகிகளும், அரசியல் தெரிந்தவர்களும் ஓரங்கட்டப்பட்டுவிட்டார்கள்."

டெல்லிக்குப் போனால், "நான் தமிழகத்தின் பிரதிநிதி" என்று தலைநிமிர்ந்து சொல்லமுடியாமல் வெட்கமாகத்தானிருகிக்றது. "உங்க மாநில மக்களின் உணர்வுகள் சினிமாத்தனத்திற்கு அடிமையாகியுள்ளது. ரௌடித்தனத்திற்குத் துணை போகிற அளவிற்குத் தரக்குறைவாகப் போய்விட்டதே" என்று பரிகாசம் செய்கிறார்கள்."

"இதற்கெல்லாம் பொறுப்பான மாநில முதல்வருக்கு மக்களின் செல்வாக்கு தொடர்ந்தும் இருப்பதாகத்தானே பத்திரிகைகள் பிரசாரம் செய்கின்றன....!"

"பத்திரிகைகளைள விடுங்க சார்! உங்களுக்கு ஒன்று தெரியுமா! சில பத்திரிகைகள் அன்று தொடக்கம் இன்றுவரை எங்கள் கழகத்திற்கு எதிராகவே எழுதி வருகின்றன! எவ்வளவுதான் நாங்கள் நிஜத்தை எடுத்துச் சொன்னாலும், பாமர மக்கள் தங்களது வாழ்க்கைத் தேவைக்குரிய ஒரு பொருளைக் கொடுத்தால் அப்படியே மௌனமாகிவிடுகிறார்கள்.

இப்படிப்பட்ட அப்பாவி மக்களை ஏமாற்றி, அரசியல் நடத்தறதுதான் வேலை! இந்த வேலையைச் செய்யக் குத்துக்கரணம் போடும் அடியாட்கள். இதற்குக் காலம் பதில் சொல்லும்".

"ஈழப் போராட்டத்திற்குத் தமிழக எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கியவாதிகள் குரல் கொடுத்து வருகிறார்களா?"

"அடிப்படையில் கவிஞர்கள், எழுத்தாளர்கள் சுதந்திர உணர்வு மிகுந்தவர்கள். அரசியல் இல்லாமல் இலக்கியம் இல்லை. நவீன எழுத்துக்கள் மக்கள் பிரச்சினையை முன்னிறுத்தியே எழுதப்படுகின்றன. அதைச் சரியாகவே காட்டிக்கொள்வார்கள்.

தமிழகத்தில், எந்த மேடையிலும் சரி, எழுத்தினாலும் சரி, குரல் கொடுக்கவேண்டிய நேரத்தில் கொடுக்காமல் (வேறு காரியங்களைச் செய்துவிட்டு) வெளிநாடுகளுக்கு வருகை தரும்போது ஈழத்தமிழர்கள் மத்தியில், "முகமூடியை" முகங்களாகக் காட்டுவதைத்தான் என்னால் ஜீரணிக்க முடியாமல் உள்ளது. ஏனெனில், நான் அவர்களின் முகங்களைத் தெரிந்தவள், அறிந்தவள், புரிந்தவள்".

"விளக்கமாகச் சொல்லுங்கள்....!"

"ஈழத்தமிழர்களே! தமிழகத்தின் முகமூடிகளை முகங்களாகவும், முகங்களை முகமூடிகளாகவும் எண்ணுகிறார்!"

ஒரு கம்யூட்டர் எழுத்தாளருக்குத் திடீரென்று ஞானோதய பிறந்து "போராட்டம்" என்னும் சொல்லை முழுமையாய் உணர்ந்தவன், இலங்கைத் தமிழன் என்கிறார். அது, தன் எழுத்து உங்களிடையே விலை போகவேண்டுமென்பதற்கா! மற்றப்படி, எந்நிலையிலும் ஈழத்தமிழர்க்கு ஆதரவான எந்தப் போராட்டத்திலும் நுனி நாக்கையோ அல்லது சுண்டு விரலையோ அசைக்காதவர்கள்தான் இன்றைய So called பிரபலங்கள்!"

"காங்கிரசுக்கு வாக்களியுங்கள்" என்று Inland letter மூலம் வேண்டுகோள் விடுத்த இன்னொரு பத்திரிகையாளர் ஈழத்துப் பிரச்சினையில் அரசியல் செய்யத் தவறியதை, இலக்கியம் செய்ய முடியும், செய்யவேண்டும் என்று இங்கு வேண்டுகோள் விடுக்கிறார். ஏன், இதே வேண்டுகோளை இவர்கள் சென்னையில் விடுக்கக்கூடாதா?"

"இந்த எழுத்தாளரேகூட, தன் பத்திரிகை மூலம் இந்த நல்ல காரியத்தைச் செய்திருக்கலாம். ஆனால், அவரால் அங்கு எழுதவோ, சொல்லவோ முடியாது! அங்கு ஒரு முகம்! இங்கு முகமூடி முகம்!

கனேடிய ஈழவர்களே! வெளுத்ததெல்லாம் பால் அல்ல! தமிழர்களெல்லாம் தமிழர்களுமல்லர்"

"இப்பொழுது நடைபெறப்போகும் மைலாப்பூர் சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுகிறீர்களா?"

"கட்சியின் தலைமை தீர்மானிக்கும் விடயம் அது. அவர்களுடைய முடிவிற்குப் பின் எனது முடிவைத் தெரிவிப்பேன்."

"சூரியன் மூலம் வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?"

"சொந்த நாட்டில் எல்லா சுகங்களையும் பறிகொடுத்து, துக்கங்களையும், துயரங்களையும் சுமந்து வந்து, வந்த இடத்தில் இவ்வளவு சாதனைகளைப் படைத்து. என்னைப் பிரமிப்புள்ளாக்கியுள்ள உங்கள் திறமைகளை எண்ணி வியப்படைகிறேன், பாராட்டுகிறேன். இலவசமாகக் கட்சி பத்திரிகைகள் கொடுப்பார்கள். நீங்கள் செய்திப் பத்திரிகையே இலவசமாகக் கொடுக்கிறீர்கள். தமிழ்நாட்டில் சரி, வேறு எந்த நாட்டிலும் சரி, இப்படிப் பிரமிக்க மிக்க செயலை எவரும் செய்ததாக நான் அறியவில்லை. நிச்சயம் தமிழ்ப் பத்திரிகை உலகம் உங்களைப் பாராட்டியே ஆகவேண்டும். எங்கு வாழ்ந்தாலும் தமிழனாக வாழுங்கள்! மொழியுணர்வுடனும், இன உணர்வுடனும் ஒற்றுமையாக வாழுங்கள்! பண்பாடு காத்து வாழுங்கள்!

நெல்சன் மண்டேலாவின் கனவு நனவாகியது போன்று, தமிழனுக்கு ஒரு ஈழம், அந்த நாளை நினைத்து உங்கள் காரியங்களை ஆற்றுங்கள். அதற்கு உறுதுணையாக எனது ஆதரவும், எங்கள் தலைவரினதும், கழகத்தினதும் ஆதரவும் என்றென்றும் உங்களுக்குண்டு"

"சூரியன்" சார்பிலும், கனேடியத் தமிழ் வாசகர்கள் சார்பிலும் எங்கள் நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு கவிஞரிடமிருந்து விடைபெற்றேன்.

---

**"சூரியன்" இதழில் பிரசுரமாகிய திகதி: 03-05-1994**



# ஈழத்துத் திருக்கோவில்கள் 949



## ஆரையம்பதி கந்தசுவாமி கோயில் ~ மட்டக்களப்பு

**திருமதி.வசந்தா நடராசன் B.A.,**
**(416) 332-0269**
**vasantha@rogers.com**

**"உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்**
**பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்**
**கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்**
**வேலப்பா செந்திவாழ் வே"**

ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலின் காலமும், ஆரம்பமும் தெரியாதநிலையிலும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பழமைவாய்ந்த ஆலயங்களுள் ஒன்றாக, ஆரையம்பதி கந்தசுவாமி கோயில் காணப்படுகின்றது. இக்கோயிலின் கருவறையில் வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இக்கோயில் உள்ளடக்கிய பிரதேசத்தினை மண்முனைப்பற்று என அழைப்பர்.

மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள அனேகமான கோயில்களின் வரலாற்றோடு, வேடர்களின் பெயர்கள் தொடர்புபட்டுக் காணப்படும். இக்கோயிலின் ஆரம்பமும் காத்தான் என்னும் வேடர் தலைவனோடு தொடர்புபட்டதாகவே காணப்படுகின்றது. காத்தான் என்னும் வேடர் தலைவனொருவன், காத்தான்குடியிருப்பு என்னுமிடத்திலே வசித்து வந்தான். வேட்டையாடுதலையும், மீன்பிடித்தலையும் தொழிலாகக் கொண்டு காத்தான் வாழ்ந்து வந்தான். ஒருநாள் வாவியில் மின்பிடிக்கச் சென்றபொழுது, வாவிக்கருகிலிருந்த பற்றை ஒன்றினுள் ஒரு கல் விக்கிரகத்தைக் கண்டெடுத்தான். அந்த விக்கிரகத்தைப் பயபக்தியோடு எடுத்துச் சென்று, விக்ரகம் கிடந்த இடத்திற்கு அருகிலுள்ள ஆலமரத்தின் கீழ் வைத்து வணங்கி வந்தான். இதுவே காலகதியில் ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலாக மாறியது.

ஆரையம்பதி கந்தசுவாமி கோயில்பற்றியும், வேடர்தலைவன் காத்தான்பற்றியும் ஐதீகங்கள் பல, வழக்கிலே காணப்படுகின்றன. காத்தான் என்பவன் ஒரு பெரிய கோயிலைக்கட்டி, அதனுள் தங்க வேலாயுதம் ஒன்றினை வைத்துப் பூசை செய்து வந்தான் என்றும், அக்கோயில் இருந்த இடம் கோயில்குளம் என அழைக்கப்பட்டதெனவும் கூறுவர். கோயில் குளம் என்னும்பகுதி, பெரிய ஊராக இருந்திருக்க வேண்டும் என்பதற்குச் சான்றாக, இப்பகுதியில் இடிபாடுகளுடனாக கட்டிடங்களின் எச்சங்கள் காணப்படுகின்றன. இவற்றைக் கருத்திற்கொள்ளும்போது, கோயிற்குளம் என்பது வளம்பெற்ற பெரிய ஊராக இருந்திருக்க வெண்டும் என்றும், இப்பகுதியை காத்தான் என்னும் ஒரு குறுநில மன்னன் ஆண்டிருக்கலாம் என்ற ஐதீகமும் காணப்படுகின்றது.

காத்தான் தொடர்பான மற்றுமொரு கதையும் மரபுவழியாகத் தொடர்கின்றது. ஆலயம் அமைந்துள்ள பகுதி, மிகப் பழைய காலத்தில் காத்தான் என்ற தமிழர் தலைவன் ஒருவனின் அதிகாரத்திற்குட்பட்டதாகக் காணப்பட்டது. அவன் தனது வழிபாட்டிற்கென தனது குலதெய்வமான குமரனுக்கு கோயில் அமைத்தான். ஆலயவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், ஆலய வேலைகளைப் பார்வையிட வந்த காத்தான், ஆலமர நிழலிலே தங்கியிருந்தான். அப்பொழுது காத்தானுக்கு ஒரு தங்கவேல் தென்பட்டது. அதனை கண்டு ஆச்சரியப்பட்டபொழுது அந்தவேல் கல்லாகச் சமைந்துவிட்டது. ஆச்சரியமுற்ற காத்தான், தான் கட்டிய கோயிலில் கல்வேலை வைத்து வழிபாடியற்றி வந்தான். அவன் கோயில் கட்டியதாகக் கூறப்படும் இடம், கோயில் குளம் என்று கூறப்படுகின்றது. கோயில் குளம் பிரதேசத்திலே காணப்படுகின்ற, மாளிகை போன்ற கட்டிட இடிபாடுகளின் தடயங்களிலிருந்து, அது ஒரு குறுநில மன்னனின் இருப்பிடமாக இருந்திருக்கலாம் என்றும் கூறுவர்.

காத்தான் பற்றிய மற்றுமொரு கதையை பழைய ஏடொன்றிலிருந்து திரு. சி.ப. கண்ணப்பன் என்பவர் 1887இல் பிரதி பண்ணி வெளியிட்டார். அப்பிரதியைப் பார்த்த திரு. சி. குலசேகரம்பிள்ளை என்பவர், 1980 ஆம் ஆண்டு பிரதி செய்து இக்கோயிலின் வரவுசெலவு அறிக்கையிலே சேர்த்துள்ளார். அக்கால வரலாறுகள் பற்றி குறிப்புக்கள் ஏடுகளிலே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. ஏட்டிலே பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"சில காலத்திற்கு முன் காத்தான் என்னும் பெயரையுடைய வேடன் இப்பகுதியில் இருந்தான். இவனுடைய தொழில் மீன் பிடித்தலும், மிருகவேட்டையாடுதலுமேயாகும். அக்காலத்தில் இருந்த குடிசனங்களில் இவனே மிகவும் அதிகாரம் வாய்ந்தவன். இவன் வசித்திருந்த காலம் 1692 ஆம் ஆண்டு, அதாவது கலியுகம் பிறந்து 4794 ஆம் வருடத்தின்பின் என்பதாகும். இவனோர் வந்தேறு குடியைச் சேர்ந்தவன். இவனது பரம்பரையினர் அக்காலத்தில் புத்தளப்பகுதியில் குடியேறியிருந்த தென் இந்தியராவர். இவன் வசித்திருந்த இடம் காத்தான்குடியென்னும் கிராமத்தின் மத்தியபகுதியாகும். அங்கிருந்து இவன் வழக்கம்போல, வலைகொண்டு தெற்கு நோக்கி வரும்போது. ஒருநாள் ஆற்றங்கரையோரமாக ஒரு பற்றைக்குள், கல்லினாற் செதுக்கப்பட்ட ஒரு விக்கிரகங் கிடக்கக் கண்டு, அதை எடுத்து கிட்டடியாக மணல்செறிந்த இடமாயுள்ள ஒரு பெரும் விருட்சத்தடியில் வைத்து, அதை வணங்கிக் கொண்டு வந்தான். இவனோர் பிரமச்சாரியாதலின் அன்றுதொட்டு இவன் தனது சொந்த இருப்பிடத்திற்குப் போகாமல், விக்கிரகமிருந்த இடத்தையே தனது பதியாகக்கொண்டு சீவித்து வந்தான். மழைக்காலம் வந்ததும் அவ்விக்கிரகம் இருந்த இடத்தில் இலைகுழைகளினாலும், புல்லினாலும் வேயப்பட்ட ஒரு குடிசையை இயற்றி, அவ்விக்கிரகத்தையும் காப்பாற்றித் தனது தொழிலையும் வழமைபோலச் செய்து வந்தான்".

இவ்வாறு காத்தான் விக்கிரகத்தை வைத்து வணங்க ஆரம்பித்த இரண்டொரு வருடத்திற்குள், இவ்வூரிலே கொடிய பேதிநோய் ஏற்பட்டது. ஊரிலுள்ள மக்களில் அனேகம்பேர் இந்நோயால் இறந்தனர். ஆயினும் காத்தானுக்கு எவ்வித நோயும் பீடிக்காது, உடல் ஆரோக்கியத்தோடு காணப்பட்டான். இதனைக் கண்ட மக்கள், காத்தான் வணங்கும் விக்கிரகத்தின் அருளாலேதான், காத்தானுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று உணர்ந்து, விக்கிரகத்தை வணங்கி வேண்டுதல் செய்தனர்.

*வளரும்...*

மலேசிய மடல்

# கொரோனா தாக்கத்திலிருந்து நாட்டைக்காக்க ஒற்றுமை அரசாங்கம் அவசியம்

## - செனட்டர் பொன். வேதமூர்த்தி



நக்கீரன்



கோலாலம்ப்பூர், மே 28:

கோவிட்-19 இன் தாக்கமும் பாதிப்பும் அதிகமாக இருப்பதால் மக்களின் பாதுகாப்பிற்கும் வாழ்க்கைக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அதற்கு ஏற்ப நாட்டில் கட்சிகளைக் கடந்த ஒற்றுமை அரசாங்கம் அவசியம் அமைய வேண்டும் என்று மலேசிய முன்னேற்றக் கட்சி (எம்.ஏ.பி.) தலைவர் செனட்டர் பொன்.வேதமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

அரசியல் கட்சிகள் தங்களின் வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, ஒற்றுமை அரசாங்கத்தை அமைக்க அரசுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். கோவிட்-19 உயிர்க்கொல்லி கிருமிக்கு எதிரான நடவடிக்கை ஓர் எதிரி நாட்டுடன் போரிடுவதைப் போல இருப்பதால், நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஒருமுகமாக செயல்பட வேண்டிய தருணம் இது.

அரசியல் தலைவர்கள், மருத்துவ வல்லுநர்கள், நிதி மற்றும் பொருளாதார நிபுணர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும். நம் தேசத்தையும் மக்களையும் நேசிக்க வேண்டிய இந்த நெருக்கடியான நேரத்தில் அரசியலுக்கு இடமளித்து காலத்தை விரயமாக்க்கிவிடக் கூடாது.

மக்களின் நலம் கருதி அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைப்பதற்காக பிரதமர் இயங்கலை மூலம் ஒரு கூட்டத்திற்கு உடனே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எம்.ஏ.பி. கட்சி சார்பில் கேட்டுக் கொள்வதுடன் நாட்டில் ஒற்றுமை அரசு அமைக்கப்பட்டவுடன் அவசரகால சட்டத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவந்து நாடாளுமன்ற நடவடிக்கை தொடர்வதற்கும் வழிகாண வேண்டும் என்று ஒற்றுமைத் துறை முன்னாள் அமைச்சருமான செனட்டர் பொன்.வேதமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தி உள்ளார்.

**நக்கீரன் - Nakkeeran: 013-244 36 24**

# சளைக்காத மக்கள் சேவையில் 'தமிழச்சி' காமாட்சி

## மலேசியாவின் ஒரே தமிழ்ப் பெண் சட்டமன்ற உறுப்பினர்





கோலாலம்பூர், ஜூன் 03:

மலேசியாவில் 14 மாநிலங்கள் இருந்தாலும் ஒரேயொரு மாநிலத்தில் இருந்து ஒரேயொரு தமிழ்ப் பெண் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு பெற்றிருக்கிறார். அவர்தான் "தமிழச்சி" காமாட்சி.

மலேசியாவின் மேற்கு மண்டலமாகவும் பெரிய மாநிலமாகவும் விளங்கும் பகாங்கு மாநிலத்தின் பெந்தோங் மாவட்டத்தில் உள்ள சபாய் என்னும் சட்டமன்றத் தொகுதியில் இருந்து இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் திருமதி. காமாட்சி துரைராஜு, இரவு பகல் என பாராமல் எந்த நேரமும் தன் சேவைக் கரங்களை நீட்டுவதற்கு அணியமாக இருக்கிறார்.

அரசியல் ஈடுபாட்டுடன் தமிழ்ப் பற்றும் இலக்கிய தாகமும் மிக்க திருவாட்டி காமட்சியின் பெயருடன் தமிழச்சி என்னும் சொல்லும் ஒட்டிக் கொண்டதால், மலேசியவாழ் தமிழர்களிடத்தில் தமிழச்சி என்றால், அது காமாட்சி என்றாகிவிட்டது.

அரசியலில் நீண்ட பாரம்பரியம் இல்லாவிட்டாலும் ஜசெக என்னும் ஜனநாயக செயல் கட்சியில் இணைந்த மூன்று ஆண்டுகளிலேயே தேர்தல் களம் காணும் பொன்னான வாய்ப்பை கட்சி இவருக்கு வழங்கியது. அதற்கு ஏற்ப தன்னையும் தக அமைத்துக் கொண்டு சீனர்களின் மேலாண்மைமிக்க அந்தக் கட்சியில் ஒரு துடிப்புமிக்க அரசியல்வாதியாகவும் மக்கள் பிரதிநிதியாகவும் சமூகத் தொண்டராகவும் தொடர்கிறார் திருமதி. காமாட்சி.



அரசியலில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளுமுன், மலேசியத் தமிழ் அறவாரியத்தின் சார்பில் மாத வெளியீடாக வந்துகொண்டிருந்த செம்பருத்தி இதழ்வழி தமிழ்ப் பணியும் சமுதாயப் பணியும் ஆற்றி வந்தவர் காமாட்சி.

துன் மகாதீர் முதல் முறை பிரதமராக இருந்த காலத்தில், நாட்டில் உள்ள தேசிய (மலாய்ப்) பள்ளிகள், தமிழ், சீனப் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து ஆரம்ப பாடசாலைகளிலும் கணித, அறிவியல் பாடங்கள் ஆங்கில மொழியில்தான் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு அதை நிறைவேற்றுவதற்கான காரியமெல்லாம் மளமளவென்று நடைபெற்றன.

புத்தாயிரத்தாம் ஆண்டு தொடங்கிய நேரத்தில் இந்த நடைமுறை அமலுக்கு வந்தது. அவ்வேளையில், தமிழ் மற்றும் சீன சமுதாயங்களைச் சேர்ந்த கல்வியாளர்கள், மொழி ஆர்வலர்கள் உள்ளிட்ட தரப்பினர் இந்த இரு முக்கியப் பாடங்களும் தாய் மொழிவழியேதான் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, அதை பாரிய அளவில் தேசிய மட்டத்தில் முன்னெடுத்தனர்.

தேசிய முன்னணி ஆட்சியில் இணைந்திருந்த மலேசிய இந்தியர் காங்கிரஸ் (மஇகா) கட்சியும் அதன் அப்போதைய தலைவர் துன் ச. சாமிவேலுவும் இந்த விடயத்தில் மகாதீருடன் அணிகோத்தனர்.

அந்தக் கட்டத்தில் செம்பருத்தி மாத இதழ் மூலம், அறிவியல் - கணிதப் பாடங்கள் தாய்மொழியில்தான் படிப்பிக்கப்பட வேண்டும் என்று பலவகையாலும் அழுத்தமான சமூக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நேரத்தில், திருமதி. காமாட்சியும் அதில் குறிப்பிடத்தக்க பங்காற்றினார்.



தமிழ்ப் பற்று, இனப்பற்றுடன் சேவை மனப்பான்மையும் இணைந்திருந்த காமாட்சிக்கு, இயல்பாகவே அரசியல் எண்ணம் துளிர்விட்டதில் வியப்பில்லை. அவர் அரசியலில் இணைந்த அடுத்த ஆண்டில் 2007 நவம்பர் 25-ஆம் நாள் தலைநகரில் நடைபெற்ற ஹிண்ட்ரா·.ப் எழுச்சி, இலண்டன், சென்னை வரையெல்லாம் பிரதிபலித்தது.

மலேசிய அரசியலில் 2008-ஆம் ஆண்டு நடைபெற்ற பன்னிரண்டாவது பொதுத் தேர்தலில் ஆழிப் பேரலை ஏற்பட்ட அளவிற்கு அரசியல் மாற்றம் நிகழ்ந்தது. 60 ஆண்டு சுதந்திர மலேசியாவில் முதல் முறையாக ஐந்து மாநிலங்களை எதிர்க்கட்சிக் கூட்டணி கைப்பற்றியது. இதற்கெல்லாம் ஹிண்ட்ராப் பேரணிதான் காரணம். ஆனாலும், மேற்கு மாநிலமான பகாங்கில் தேசிய முன்னணியே ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டது.


அந்தத் தேர்தலில், தமிழ்ப் பெண்ணுக்கு வாய்ப்பு என்னும் அடிப்படையில் சபாய் தொகுதியில் போட்டியிட ஜசெக கட்சியில் வாய்ப்பு கிடைத்த காமாட்சி, சொற்ப வாக்குகள் வேறுபாட்டில் வெற்றிக்கோட்டை கோட்டைவிட்டார். ஆனாலும், அடுத்தத் (2013) தேர்தலில் வென்று மக்கள் பணி ஆற்றிய காமாட்சி, அதற்கு அடுத்த முறையும் வென்று தற்பொழுது இரண்டாவது தவணையாக சமூக வெளியிலும் அரசியல் தளத்திலும் களமாடி வருகிறார்.

சபாய் சட்டமன்றத் தொகுதியில் மலாய் வாக்காளர்கள் அதிகமாக இருந்தாலும் சீன வாக்காளர்களும் ஏறக்குறைய அவர்களுக்கு இணையாக 37 விழுக்காட்டளவில் உள்ளனர். இந்திய (தமிழ்) வாக்காளர்கள் 21 விழுக்காட்டிற்கும் மேலாக இருக்கின்ற சபாய் வட்டாரம், சற்று பின் தங்கிய பகுதிதான் என்றாலும் நடுத்தர மக்கள் அதிகமாக வாழ்கின்றனர்.

அத்துடன் தோட்டப்புறங்களும் நிறைந்த இந்தத் தொகுதியில் இனம், மொழி என பாராமல் மலாயர், சீனர், இந்தியர், பூர்வ குடியினர் என்றெல்லாம அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கல்வி, மருத்துவம், சமூக நலம் சார்ந்து இரவு பகல் என பாராமால் எந்த நேரத்தில் அழைத்தாலும் கூப்பிட்ட குரலுக்கு செவிசாய்த்து சம்பந்தப்பட்ட இடத்தில் அடுத்த அரை மணி நேரத்தில் காணப்படும் காமாட்சியை பொதுவாக அனைத்து மக்களுக்கும் பிடித்திருக்கிறது.

கோலாலம்பூரில் எந்த இடத்தில் இலக்கிய நிகழ்ச்சி, நூல் வெளியீட்டு விழா நடைபெற்றாலும் காமாட்சியின் காட்சி அங்கேத் தென்படும். மொழி-இனம் சார்ந்த நிகழ்ச்சிகளில் அரசியல் வேறுபாட்டை அடியோடு ஒதுக்கி வைக்கும் பண்பு நலம் நிறைந்த காமாட்சி வரும் பொதுத் தேர்தலிலும் களம் காண்பாரா என்பது அப்போது தெரியும் என்றாலும், களமிறங்கும் நம்பிக்கையில் காரியமாற்றி வருகிறார் திருமதி. காமாட்சி.

அண்மையில் தமிழ் மலர் நாளேட்டின் சார்பிலும் அண்ணல் அம்பேத்கார் இயக்க ஆதரவிலும் தலைநகரில் சுதந்திர சதுக்கத்தை ஒட்டியுள்ள சிலாங்கூர் ரோயல் கிளப்'பில் சட்ட மேதை அம்பேத்கார் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம் சிறப்பாக கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில் திருவாட்டி காமாட்சியும் கலந்து கொண்டார்.



அதில் அம்பேத்கரைப் பற்றிய அரிய செய்திகளை அன்வார் தன்னுரையில் குறிப்பிட்டார். பொதுவாக அரசியல் நாட்டமும் சேவை மனப்பான்மையும் மிகுந்திட்ட தமிழச்சி காமாட்சி, சற்றுமுன்னர்கூட, கொரோனா பாதிப்பினால் நாட்டில் நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணை நடைமுறையில் இருக்கும் இந்த நேரத்தில், தோட்டவாசிகளிடம் காய்கறிகளை சேமித்து வந்து அவற்றை நெகிழிப் பைகளில் பகிர்ந்து கட்டி, தன் வீட்டு முகப்பிடத்தில் வைத்து தேவையான அன்பர்கள் வந்து எடுத்துச் செல்லும்படி புலனத்தில் தகவல் அனுப்பிவிட்டு, அதன்படி வருகின்ற தன் தொகுதி மக்களை வரவேற்று காய்கறிப் பையை வழங்கி வருகிறார்.

கோலாலம்பூரில் அட்டியின்றி சேலையில் தென்படும் அரசியல் தலைவர்களில் ஒருவரான தமிழச்சி காமாட்சியின் குடும்பம் அளவானது. கணவர் பாலச்சந்திரன் செல்வரத்தினம், மகள் யாழினி வினோஷா, மகன் அறிவன் வினோதன், தாயார் மாரியம்மாள் ஆகியோர் கொண்ட குடும்பத்தில், குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் காமாட்சியின் பொது வாழ்க்கை தொடர்கிறது. அவர்களுக்கு கனடாவின் உதயன் இணைய இதழ் மற்றும் பருவ இதழ் சார்பில் இன்னுங்குறிப்பாக அதன் நிருவாக தலைமை ஆசிரியர் அண்ணன் திரு. என். லோகேந்திரலிங்கம் சார்பில் டொரொண்டோ நகரில் இருந்து வாழ்த்துகள்.

**நக்கீரன் - Nakkeeran: 013-244 36 24**

# இவ்வார ராசிபலன்

## 04-06-2021 வெள்ளி தொடக்கம் 10-06-2021 வியாழன் வரையும்




**மேஷம்:** பூமியால் லாபமும் புத்திரயோகமும் கிடைக்கக்கூடிய வாரம். சாதனை படைக்கும் நாள். நிர்வாகம் செலவுகள் கூடும். வாய்ப்புகள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத் தொழில் ஆதாயம் தரும். உடன் பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். மாருதி வழிபாடு மகிழ்ச்சியைத் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராமபிரான், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**ரிஷபம்:** சந்தோஷமான நிகழ்வும் சாதகமான சூழ்நிலையும் நிலவும் வாரம். பெருமிதம் நிறைந்த நாள். புதிய வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுப காரியம் கைகூடும். சந்தோஷம் பெருகும். தனலட்சுமி வழிபாடு பணவரவு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: எமதர்மராஜா, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**மிதுனம்:** பணிவான பேச்சுக்களால் பணவரவை பார்த்துக் கொள்ளக்கூடிய வாரம். பாராட்டுக்கள் கூடும். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புகள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும் உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். இடமாற்றம் ஏற்படும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: சக்ரத்தாழ்வார், அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகி ஆசைகள் நிறைவேறும் அற்புத வாரம். பொருளாதாரம் உயரும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபரியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச் செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முயற்சி பலன் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நடராஜப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**சிம்மம்:** போட்டி, பொறாமைகள் மறையக்கூடிய மகத்தான வாரம். நன்மைகள் பெருகும் நாள். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதம் உண்டு. பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலாம் கவனம் தேவை. புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வீண் விரயம் அதிகமாகும். பெருமைகள் கூடும். திறமைகள் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் மறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**கன்னி:** பயணங்களால் பணவரவு கிடைக்கக்கூடிய பகட்டான வாரம். தந்திரமாக செயல்படுவீர்கள். கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. வாய்ச் சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடிவரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும. இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கைகொடுக்கும் காமதேனு
அதிர்ஷ்ட எண்: 5, அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**துலாம்:** எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடக்கக்கூடிய எதார்த்தமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். தோல்விகள் விலகும். கட்டிட தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தகாரியம் நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு நிர்வாகத் திறமை அதிகரிக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** வம்புதும்புகள் ஒழிந்து வரவுகள் அதிகாரிக்கக்கூடிய வாரம். சச்சரவுகள் அகலும் நாள். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். மற்றவரால் நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புகள் கூடி வரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புகள் அடங்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மீனாட்சிஅம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**தனுசு:** கலைந்த குடும்பம் ஒன்று சேரக்கூடிய கலகலப்பான வாரம். பணிவான பேச்சுக்கள் தேவை. மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச் செய்தி வரும். வியாபார விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத் தொழில் மோசடி ஏற்படும். இடையூறுகள் அதிகமாகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சயன கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V





ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
‘ராஜயோகம்’
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** பணவரவில் லாபமும் உடல்நலத்தில் ஷேமமும் கிடைக்கக்கூடிய வாரம். பயணம் தவிர்ப்பது நல்லது. பெரிய மனிதர்களை சந்திப்பிர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கை கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்ப மேன்மை தரும். ஆரோக்கியம்த சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மங்களமாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**கும்பம்:** வீரியத்தோடு செயல்பட்டு வெற்றிகளை காத்துக் கொள்ளக்கூடிய வாரம். போட்டிகள் உருவாகும் நாள். தாய் வழி உறவால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். தனவரவில் மேன்மை கூடும். நிதி நிலைமை சீராகும். பண வரவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். உடல் நலனில் கவனம் தேவை. கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பஞ்சபூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மீனம்:** எடுத்த காரியத்தில் கொடுத்த வெற்றியை அடுத்தடுத்து சந்திக்கக்கூடிய வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீக சொத்து வந்து சேரும். வழக்குகள் வெற்றி தரும். வீண் வம்பு விலகும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரளய தேவி, அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J

----------------------------------------

# 40 வகை கீரைகளும் அதன் முக்கிய மருத்துவ பயன்களும்

- அகத்திக்கீரை - ரத்தத்தை சுத்தமாக்கி பித்தத்தை தெளியவைக்கும்.
- காசினிக்கீரை - சிறுநீரகத்தை நன்கு செயல்பட வைக்கும். உடல் வெப்பத்தை தணிக்கும்.
- சிறுபசலைக்கீரை - சருமநோய்களைத் தீர்க்கும் பால்வினை நோயை குணமாக்கும்.
- பசலைக்கீரை - தசைகளை பலமடையச் செய்யும்.
- கொடிபசலைக்கீரை - வெள்ளை விலக்கும் நீர் கடுப்பை நீக்கும்.
- மஞ்சள் கரிசலை - கல்லீரலை பலமாக்கும், காமாலையை விலக்கும்.
- குப்பைகீரை - பசியைத்தூண்டும்.வீக்கம் வத்தவைக்கும்.
- அரைக்கீரை - ஆண்மையை பெருக்கும்.
- புளியங்கீரை - சோகையை விலக்கும், கண்நோய் சரியாக்கும்.
- பிண்ணாருக்குகீரை - வெட்டையை, நீர்கடுப்பை நீக்கும்.
- பரட்டைக்கீரை - பித்தம், கபம் போன்ற நோய்களை விலக்கும்.
- பொன்னாங்கன்னி கீரை - உடல் அழகையும், கண்ஒளியையும் அதிகரிக்கும்.
- சுக்கா கீரை - ரத்த அழுத்தத்தை சீர்செய்யும், சிரங்கு மூலத்தை போக்கும்.
- வெள்ளை கரிசலைக்கீரை - ரத்தசோகையை நீக்கும்.
- முருங்கைக்கீரை - நீரிழிவை நீக்கும், கண்கள், உடல் பலம்பெறும்.
- வல்லாரை கீரை - மூளைக்கு பலம் தரும்.
- முடக்கத்தான்கீரை - கை, கால் முடக்கம் நீக்கும் வாயு விலகும்.
- புண்ணக்கீரை - சிரங்கும், சீதளமும் விலக்கும்.
- புதினாக்கீரை - ரத்தத்தை சுத்தம் செய்யும், அஜீரணத்தை போக்கும்.
- நஞ்சுமுண்டான் கீரை - வி‘ம் முறிக்கும்.
- தும்பைகீரை - அசதி, சோம்பல் நீக்கும்.
- முரங்கைகீரை - சளி, இருமலை துளைத்தெரியும்.
- முள்ளங்கிகீரை - நீரடைப்பு நீக்கும்.
- பருப்புகீரை - பித்தம் விலக்கும், உடல் சூட்டை தணிக்கும்.
- புளிச்சகீரை - கல்லீரலை பலமாக்கும், மாலைக்கண் நோயை விலக்கும், ஆண்மை பலம் தரும்.
- மணலிக்கீரை - வாதத்தை விலக்கும், கபத்தை கரைக்கும்.
- மணத்தக்காளி கீரை - வாய் மற்றும் வயிற்றுப்புண் குணமாக்கும், தேமல் போக்கும்.
- முளைக்கீரை - பசியை ஏற்படுத்தும், நரம்பு பலமடையும்.
- சக்கரவர்த்தி கீரை - தாது விருத்தியாகும்.
- வெந்தயக்கீரை - மலச்சிக்கலை நீக்கும், மண்ணீரல், கல்லீரலை பலமாக்கும். வாத, காச நோய்களை விலக்கும்.
- தூதுவலை - ஆண்மை தரும். சருமநோயை விலக்கும். சளித்தொல்லை நீக்கும்.
- தவசிக்கீரை - இருமலை போக்கும்.
- சாணக்கீரை - காயம் ஆற்றும்.
- வெள்ளைக்கீரை - தாய்பாலை பெருக்கும்.
- விழுதிக்கீரை - பசியைத்தூண்டும்.
- கொடிகாசினிகீரை - பித்தம் தணிக்கும்.
- துயிளிக்கீரை - வெள்ளை வெட்டை விலக்கும்.
- துத்திக்கீரை - வாய், வயிற்றுப்புண் அகற்றும். வெள்ளை மூலம் விலக்கும்.
- காரகொட்டிக்கீரை - மூலநோயை போக்கும். சீதபேதியை நிறுத்தும்.
- மூக்கு தட்டைகீரை - சளியை அகற்றும்.
- நருதாளிகீரை - ஆண்மையைப் பெருக்கும், வாய்ப்புண் அகற்றும்.





*(சென்ற வார தொடர்ச்சி...)* *(அத்தியாயம் 143)*

# வந்தியத்தேவனின் தஞ்சைப் பயணம்

சித்திர மண்டபத்தில் இவற்றைக் கண்டு, ஆர்வத்துடன் பார்த்த வந்தியத்தேவன் மேலும் உள்ள சித்திரங்களை நோக்கினான். ஓவ்வொரு சோழ அரசிற்கு பழுவூர் சிற்றரசர் வம்சத்தினர் தலை சிறந்த உதவிகளைச் செய்திருக்கிறார்கள். சித்திரங்களில் பழுவேட்டரையர் முதன்மையை பார்த்து அவன் கண்கள் அகல ஒவ்வொன்றாகப் பார்க்கத் தொடங்கினான். முத்தரையர் வசத்தில் இருந்த தஞ்சைக் கோட்டையை முற்றுகையிட்டு முதலில் அந்த நகரில் பிரவேசித்தவர் ஒரு பழுவேட்டரையர். விஜயாலய சோழன் திருப்புறம்பியம் போர்க்களத்தில் அதிபராக்கிரம செயல்களிற்கு தோள் கொடுத்து உதவியது ஒரு பழுவேட்டரையர். ஆதித்த சோழன் தலையில் கிரீடத்தை வைத்து பட்டாபிஷேகம் செய்தவர் ஒரு பழுவேட்டரையர். ஆதித்த சோழன் அபராஜித்தவர்மனை கொல்லும் போது முதுகும் தோளும் கொடுத்தவர் பழுவேட்டரையர்தான். போர்க்களத்தில் யானை மீது பாய்ந்து பகைவனைக் கொல்ல முயன்ற இராஜாதித்தன் போர்க்களத்தில் காயப்பட்டு விழும் போது ஒரு பழுவேட்டரையர் தன் மடி மீது போட்டு இராஷபிரவயப் படைகள் தோற்று ஓடும் செய்தியை தெரிவித்தவர். அரிஞ்சயருக்கும் சுந்தர சோழரிற்கும் உதவியவர் பழுவேட்டரையர்களே! இதனால் தானே சின்ன பழுவேட்டரையர் பெரிய பழுவேட்டரையர் கைகள் இங்கு ஓங்கி நிற்கின்றது. அது நியாயமும் கூட என்று நினைத்துக் கொண்டான். நன்றி உள்ளம் படைத்த சோழப் பெருமானார் உள்ளம் கண்டு பூரித்தான்.

'இப்பொழுது சின்ன பழுவேட்டரையரிற்கு என் மீது சந்தேகம் வந்துள்ளது என்னை தஞ்சாவூர் பாதாளச் சிறையில் போட்டால் என்னால் மீள முடியாதே! அத்தனை கொடுமையானது அதனால் பெரிய பழுவேட்டரையர் இங்கு வருமுன்னர் நான் இங்கிருந்து தப்பிச் செல்ல முயல வேண்டும்' என்று சிந்தனையில் ஆழ்ந்தான். அப்பொழுது சின்னபழுவேட்டரையர் சித்திர மண்டபத்திற்கு வந்தார். சின்ன பழுவேட்டரையர் உள்ளே வந்ததும் காவலாளர்கள் 'எஜமானே தாங்கள் சொன்னபடியே இவனை உபசரித்தோம் ஆனால் இவன் எங்களைத் திருடன் என்று நன்றாக அடித்து, உதைத்து விட்டான். தன் பழைய உடைகளில் பொற்காசும், தன் முக்கியமான ஒரு பொருளும் வைத்திருந்தானாம். அதனால் தன் பழைய உடைகளைக் கேட்கிறான்' என்று முறையிட்டார்கள். அதற்கு சின்னப் பழுவேட்டரையர், 'தம்பி அப்படி என்ன முக்கியமான ஆவணம் வைத்தருந்தாய்' என்றார். 'அது என் சொந்த விடயம்' என்று வந்தியத்தேவன் பதில் அளித்தான். பழுவேட்டரையர், 'தஞ்சைக் கோட்டைக்குள் சொந்த விடயம் கூட இந்தத் தளபதிக்கு தெரிந்தாக வேண்டும். இது சக்கரவர்த்தியின் பாதுகாப்புக் கருதி இந்த சட்டம் உள்ளது. அதனால் நீ சொல்லி விட வேண்டும்' என்றார். அதற்கு வந்தியத்தேவன் உண்மையைச் சொன்னான். 'நான் இன்னுமோர் ஓலை கொண்டு வந்தேன். அதனை ஆதித்த கரிகாலர் தன் தமக்கை குந்தவைக்கு கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். அதனை என் ஆடையில் சுற்றி வைத்திருந்தேன்' என்றான். உடனே சின்னப்பழுவேட்டரையர் அவனுடைய பழைய ஆடைகளை எடுத்து வரச் சொல்லி அந்த ஓலையை எடுத்துப் பார்த்துவிட்டு வியப்பில் ஆழ்ந்தார். 'இவன் ஓர் அந்தரங்க ஒற்றன். இவனை கொஞ்சம் கண்காணிக்க வேண்டும்' என்று நினைத்து அவனுடைய ஓலையை மீண்டும் அவனிடம் கொடுத்தான். வந்தியத்தேவன் தான் தஞ்சை கோட்டையை சுற்றி பார்க்க விரும்புவதாகக் கூறினான் அவரும் வீரர்களை அவனுடன் அனுப்பி அவனிற்கு கோட்டையை சுற்றிக் காட்டுமாறு கூறினான். 'நன்றாக தஞ்சைக் கோட்டையைச் சுற்றிப் பார் வெளியில் போக வேண்டாம். வெளியில் போனால் உள்ளே வரமுடியாது' என்று கூறி, இரு காவலர்களை அவனுடன் அனுப்பி வைத்தார். வந்தியத்தேவன் புறப்படும் போது எப்படியாவது தப்பிக்க வேண்டும் என்ற பலத்த யோசனையுடன் வெளியே வந்து நாலாபுறமும் சுற்றிப் பார்த்தான். அந்தக் கணத்தில் வேளக்கார படையினர் மகாராஜா தரிசனம் செய்து விட்டு திரும்புவதைக் கண்டான். உடனே அவனும் அந்தக் கூட்டத்துடன் சேர்ந்து வெளியேற முற்பட்டான். அப்பொழுது காவல் காரர்கள் அவனைத் தடுக்கவில்லை. ஏனையோரும் வேளக்கார படைகளுடன் முரண்பட விரும்பவில்லை. வேளக்காரப்படை ஊர்வலமாக வெளியேற அனைவரும் ஒதுங்கி இடம் கொடுப்பது வழக்கம். இதன்படி ஒரு பெண் தயிர் கூடையுடன் ஒதுங்கி நிற்க, வேளக்காரப் படையில் ஒருவன் அவளிடம் தயிர் கேட்க, அவள் மறுத்து பயந்து ஓடினாள். அவளைத் துரத்திக் கொண்டு சில வீரர்கள் தொடர்ந்து ஓடினர். இவர்களைத் தொடர்ந்து வந்தியத்வேனும் 'பிடி பிடி' என்றபடி ஓடினான். அந்தப் பெண் சந்து பொந்து பார்த்து ஓடினாள். அதனால் வேளக்காரப் படையினரால் தொடர முடியவில்லை. ஆனால் வந்தியத்தேவன் தொடர்ந்து சென்றான். இறுதியாக வந்தியத்தேவன் ஓர் சுவர் ஓரமாக ஒதுங்கிக் கொண்டான். அவனிற்கு தூக்கம் வந்தது இலேசாகத் தூங்கினான். பின் பொழுது சாயும் நேரம் இலேசாகக் கண்களைத் திறந்தான். அவன் முன்னே இருந்த மரத்தில் ஒரு வேதாளம் இருப்பது போல் கண்டான். அந்த வேதாளம் ஒரு ஏணியை எடுத்து, 'கவனம் இந்த ஏணியைக் கொண்டு ஏறி வெளியே வா' என்று சொன்னதும், அவன் திகைப்புடன் யாராக இருந்தால் என்ன இந்த சந்தரப்பத்தை கை நழுவ விடக் கூடாது என்று எண்ணி அதைப் பிடித்துக் கொண்டு ஏறி மறு பக்கம் போனான்.




*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**

---


# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

**0%வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




**எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்**

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

**தமிழில் தொடர்புகளுக்கு:**
**வசந்தி சிவராஜா - 416-616-3077**

# கொரோனாவின் பெயரால் தமிழர்தேசம்மீது இராணுவமயமாக்கல்!

- ஆதித்தன்

**கொ**ரோனா பேரிடர் என்பது இந்த உலகை நிலை குலையச் செய்கிறது. இந்த நோய் பற்றிய புரிதலும் விழிப்புணர்வும் மக்களுக்கு இன்னமும் தேவைப்படுவதுடன் தடுப்பூசி குறித்த அச்சத்தையும் போக்க வேண்டியிருக்கிறது. கொரோனாவுக்கு எதிரான போரில் முன் களப் பணியாளர்களாக சுகாதாரத்துறையினர் நிற்கின்றனர். பொதுமுடக்கம் என்பதும் மக்களின் பௌதீக ரீதியான தொடர்பாடலைத் தடுப்பதும்தான் இந்த நோயில் இருந்து உலகம் தன்னை காத்துக் கொள்ளக்கூடிய வழியாக இருக்கிறது. இந்த சூழலில் இலங்கையில் துப்பாக்கிகள் மற்றும் இராணுவ டாங்கிகளைக் கொண்டு கொரோனவை தடுக்கிற வேலையும் நடக்கிறது.

அண்மையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வந்த சமயத்தில், கொரோ-னா நோய்க்கிருமிகள் இலங்கை அரச படைகளுக்கு தோழமை சக்தியாகிவிட்டன. அவற்றின் துணையுடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரச படைகள் மேற்கொண்டன. அன்றைக்கு வடக்கு கிழக்கு முழுவதும் இராணுவத்தின் மிகவும் கோரமான நிலையில் நின்றனர். துப்பாக்கிகளை ஏந்தியபடி இராணுவ பீல் பைக் அணிகள் கிராமங்களுக்கு மக்களை பயமுறுத்தும் விதமாக உறுமிக் கொண்டு திரிந்தன. வழமைக்கு மாறாக இராணுவத்தின் ரோந்துகள் அதிகரிக்கப்பட்டன. வீதிகள், சந்திகளிலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு மக்கள் தடுக்கப்பட்டார்கள். கொரோனா காலத்தில் எப்படியான நினைவேந்தலை செய்ய வேண்டும் என்று தமிழ் மக்களுக்குத் தெரியும். சுகாதார வழிமுறைகளை எப்படி பின்பற்ற வேண்டும் என்றும் அவர்களுக்குத் தெரியும். அன்றைக்கு வடக்கு கிழக்கே கனத்த நெஞ்சுடன் இருந்தது. எங்கள் தேசம் சோகத்தில் இருந்தது. ஆனால் அதனை இன்னும் ஒரு போர்க்கள நிலமாக மாற்றும் அத்தனை காரியங்களையும் இலங்கை அரச படைகள் செய்தன. அன்றைக்கு வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக, அது தனித்த ஒரு தேசமாகவே தென்பட்டது. தெற்கை ஒருவிதமாகவும் வடக்கு கிழக்கை இன்னொரு விதமாகவும் நடத்துவது என்பது நிச்சயமாக இரண்டு தேசங்களையும் பிரித்துக்காட்டுகின்ற செயல்தான். அது தமிழ் மக்களிடமிருந்து வரவில்லை. சிங்கள அரசிடமிருந்தும் அதன் படைகளிடமிருந்துமே வருகின்றன.

அத்துடன் முள்ளிவாய்க்கால் 18ஐ முன்னிட்டு இலங்கை அரச படைகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டன. அன்றைய நாளில் சிங்கள இனவழிப்பு படையை சேர்ந்த 452 அதிகாரிகளுக்கும் 4289 சிப்பாய்களுக்கும் கடற்படையை சேர்ந்த 64 அதிகாரிகளும், 1904 சிப்பாய்களும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. மே 18 என்பது ஈழத் தமிழ் மக்களுக்கு மிகப் பெரிய இனவழிப்பு பரிசளிக்கப்பட்ட நாள். அந்த நாள் பதவி உயர்வுக்கும் இலங்கை இராணுவப் பெருமைக்கும் உரிய நாளாக இருக்கிறது, என்பதும் தமிழர் தேசத்திற்கு வலுத்த சேதியை சொல்கிறது.

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் கொன்றழிக்கப்பட்ட ஒரு நாள் அது. இந்த தீவின் பூர்வீகக் குடிகள் ஒன்றரை லட்சம் இல்லாமல் ஆக்கப்பட்ட நினை-வழியாத தினம் அது. தமிழர்களின் வாழ்விலும் வரலாற்றிலும் ஈடு செய்ய முடியாத பெரும் உயிரழிவு நிகழ்த்தப்பட்ட நாள். அந்த நாளில் இலங்கை அரசு தனது படைகளுக்கு பதவி உயர்வு வழங்குகிறது என்றால், நிச்சயமாக ஈழத் தமிழ் மக்களை கொன்றழிப்பதற்கான பரிசாகவும் பாராட்டாகவுமே அதனைக் கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த செய்தியைதான் இந்தமுறை மே 18 இல் தென்னிலங்கை அரசு தமிழர்களுக்கு தந்திருக்கிறது.

இராணுவ மயத்தை குறைக்க வேண்டும், சிவில் நடவடிக்கைகளில் இராணுவத் தலையீடு இருக்கக்கூடாது என்றும் தமிழர்கள் கடந்த பத்தாண்டுகளாக கோரிக்கை விடுத்து வந்திருக்கிறார்கள். இது சர்வதேச ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயம் ஐ.நா அறிக்கைகளிலும்கூட சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் கொ-ரேனாவின் பெயரால் இராணுவமயத்தை பெருக்கும் வேலைகளில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகின்றனர். ஊடரங்கு தளர்த்தப்படும் வேலைகளில் இராணுவத்தினர் மக்களை அச்சுறுத்தும் விதமாக நடந்து கொள்கின்றனர். சமயம் பார்த்து தமி-ழின வெறுப்பை இராணுவத்தினர் வெளிப்படுத்துவதை மிகத் தெளிவாக உணர முடிகின்றது.

மக்களை அச்சுறுத்தி, அடக்கி ஒடுக்குவதால் கொரோனாவை ஒடுக்க முடியாது. உலகில் இராணுவச் சீருடை கொண்டும், துப்பாக்கிகள் கொண்டும், யுத்த டாங்கிகள் கொண்டும் கொரோனாவை அழிக்க முனையும் அறிவுபூர்வமான படைகளாக இலங்கைப் படைகள் சிறப்பு பெறுகின்றனர். தமிழ் மக்கள் இலங்கை இராணுவத்தினார் மிகக் கசப்பான அனுபவங்களைக் கண்டிருக்கிறார்கள். எமது உறவுகள் ஒன்றரை லட்சம் பேர் இல்லாமல் ஆக்கப்பட்ட குற்றத்தில் தொடர்புடைய இராணுவத்தினர் இன்று கொரோனா தடுப்பு என்ற பெயரில் எமது வீதிகளில் நின்று மீண்டும் எம்மை அடக்கி ஒடுக்க முயல்கின்றனர்.


வெளிநாடுகளைப் போல, சிவில் நிர்வாகத்தைப் பயன்படுத்தி கொரேனா தடுப்பு விதிகளை மீறுகின்ற நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். கொரோனாவை ஒழிக்கிறோம் என்ற பெயரில் நீதி, நிர்வாகம் மற்றும் சட்டத்தை இல்லாமல் செய்ய முடியுமா? உலகில் எந்த நாடுகளில் இப்படி நடக்கின்றன? அல்லது சர்வதேச சட்டங்கள் இதனை அனுமதிக்கின்றனவா? நோய் என்பது மனிதாபிமானத்துடனும் சுகாதாரத்துடன் தொடர்புடைய விடயம். இது இரத்தம் காண்பதற்கான யுத்தம் இல்லை. சுகாதாரத் தொண்டர்களைப் போல இலங்கை இராணுவத்தினர் நடந்துகொள்ளவில்லை. அப்படி அவர்களால் நடக்க முடியாது என்பதையும் நாம் நன்கு அறிந்தவர்கள்.

இந்த நாடு கொரோனவை பயன்படுத்தி முழுமையாக இராணுவமப்படுகிறதா என்பதே இங்கே எழுகின்ற வலுத்த கேள்வியாகும். ஏற்கனவே நாட்டின் அதிபர் இராணுவ அதிகாரி. பாதுகாப்பு செயலாளர் இராணுவ அதிகாரி. கொரோனா தடுப்பு ஒருங்கிணைப்பு அதிகாரி இராணுவத்தளபதி. இவர்கள் அனைவரும் கடந்த காலத்தில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான போரின் இனப்படுகொலையாளிகள். இவர்கள் தொடர்பில் சர்வதேச நாடுகள் பல குற்றங்களை சுமத்தியுள்ளன. தற்போது இவர்களே கொரோனாவை அழிக்க சபதம் எடுத்துள்ள படையினர்.

ஏற்கனவே இலங்கையில் சிறுபான்மை இனங்களில் உரிமைகளும் வாழ்வும் நசுக்கப்படுகின்றது. இந்த சூழலில் கொரோனாவின் பெயரால் மிச்சம் இருக்கும் வாழ்வையும் உரிமையையும் பறித்து, இலங்கைத் தீவை முழுமையான இராணுவ நா-டாக மாற்றும் முயற்சிகள் நடக்கின்றன. இதனை தடுக்க சர்வதேசம் முன்வரவேண்டும். ஏனெனில் கொரோனவைவிடவும் கொடிய இலங்கை இராணுவத்தினர், கொரோ-னாவின் பலியை விடவும் தமிழர்களை பலியெடுக்கக்கூடியவர்கள் என்பதை கடந்த காலம் தெளிவாக உணர்த்தியுள்ளது.

---

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும் #48

*வாழ்த்து கவிதை சென்றவார தொடர்ச்சி....*



மதுரையில் பிறந்து விட்ட கடைச்சங்க தமிழ் மகளின்
இயல் இசை நாடகமாய் நீ வளர்ந்து சிறந்து விட்டாய்.
அன்னைத் தமிழை நீ அழகு செய்யும் எழில் கண்டு
என்னைப் போல் வாழ்த்திடுவோர் ஏராளம்.. கோடி என்பேன்!
முன்னைத் தவம் தானோ உனை இங்கு தந்த தென்பேன்.
விண்ணதிர முழங்கி நீ முரசு கொட்டும் காட்சிகள்..
கண்பார்வை போனாலும் கனவுலகில் எதிரொலிக்கும்!
வருங்காலத் தலைமுறைகள் வரலாற்றைப் புரட்டுங்கால்,
வடிகாலாய் விளங்கிடுமே நீ நடித்த பாத்திரங்கள்,
வரலாற்று நாயகர்கள் உன் வடிவில் வாழ்வதனால்
பெருமைகள் பல சேர்ந்து பெருமகனாய் உலவுகிறாய்! பரதனை கண்டேன் என
பாரத ராஜரிீ ( ராஜாஜி ) பாராட்டி மகிழ்ந்தாரே!
யாருக்கு கிட்டும் இந்த வசி'டர் வாய் பாராட்டு,
காவியத்தில் நாயகனே உனைக் கைகூப்பி வணங்குகிறோம்!
“இந்து கண்ட சாம்ராஜ்ய“ இணையற்ற தலைவன் நீ
“இன்றுமுதல் உன் நாமம்“ சிவாஜியுடன் இணையட்டும்
என்று உன்னை வாழ்த்திவிட்ட “பெரியாரின்“ புகழாரம்
பூ மணமாய் கமழ்கிறது் புது வீரம் தருகிறது!
தலைமுறை இடைவெளி பலவாகி விட்டாலும்
“முதல்மரியாதை“ தலைமகனே உனக்குத்தான்!
“பராசக்தி“ தந்திட்ட “பசும்பொன்“ தேவரய்யா
பார்புகழும் உனை ஈன்ற அன்னையைத் தெய்வம் என்பேன்!
“தெய்வ மகனே“ உன் திருநாவில் உறங்குகின்ற
தேவியை தினம் தொழுவேன்!
கலைமகளின் திருமகனே! தமிழ்க் கலையுலகின் நாயகனே!
வாழி நீ வாழி! பல்லாண்டு வாழ்கவெனப்,
பாசமிகு தம்பி நான் தமிழால் வாழ்த்துகிறேன்!

(“நடிகர் திலகம்“ சிவாஜி கணேசன் அமெரிக்க லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு வருகை தந்திருந்த வேளை வாசித்து வழங்கப்பெற்ற வாழ்த்துக் கவிதை - 1995)

---

நடிகர் திலகம் அவர்கள் நேரத்தை பார்க்கவும் கீழேயிருந்து சாப்பாட்டுக்கு அழைப்பு வரவும் சரியாகவிருந்தது.

நேரம் அவருடைய வாழ்க்கையில் பொன்னுக்குச் சமானம். எதுவுமே நேரப்படி நடக்க வேண்டும் என்று விரும்புபவர் தவறாது கடைபிடிப்பவர். “பராசக்தி“ படப்பிடிப்பின் போது முதல் காட்சி படமாக்கப்படப்போகிறது என்று தெரிந்தவுடன் ”அன்று ஏவிஎம் ஸ்டுடியோவி-ல் எப்படி எல்லா கலைஞர்களுக்கும் முன்னோடியாக நேரம் தவறாது கால்பதித்தாரோ, இன்றும் கூட 50 ஆண்டுகளுக்குப் பின்பும் அவரது வாழ்வின் எல்லா காரியங்களிலும் “நேரம் தவறாமை“ என்பது கண்டிப்பான ஒழுங்குடன் கடைபிடிக்கப்படுகிறது.

“அன்னை இல்லத்தில்“ சரியாக ஒரு மணிக்கு சாப்பாடு. உணவுக் கூடத்தில் எல்லோரும் கூடினோம். அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. வெறுமனே சிவாஜி சார் அவர்களை பார்த்து பேசினால் போதும், என்று எண்ணிய எனக்கு விருந்து வைத்தார்! இது என்னவோ விட்ட குறை தொட்ட குறை போலும், என்னை நான் அவருடைய சாதாரண ரசிகர்களில் ஒருவனாக கருதவில்லை. அதற்கும் மேலானவன். எத்தனை பேர் எனக்கு சிவாஜி அவர்கள் பற்றி தவறான அபிப்பிராயங்களை கூறியிருப்பார்கள்.

அவருடன் பழகாமலேயே அவருடைய உள்ளத்தை புரிந்தவன் நான். இப்படியான உள்ளுணர்வு அறிதல் சிலருக்கு அமையப் பெறுவது இயற்கையே! என் கணக்கு தவ-றியதே இல்லை. ஆனபடியால் தான் எங்களுடன் அதிகம் நேரடித் தொடர்பு இல்லாமலேயே சில தலைவர்களையும், பெரியவர்களையும், நண்பர்களையும் நாங்கள் நேசிக்கிறோம் என்றால் அங்கு இருபாலருக்கும் இடையே உள்ள உள்ளுணர்வு அறிதல் எனும் ஈர்ப்பு சக்தியே ஆகும்!

முன்பின் பார்த்திராத யுவதிக்கும், வாலிபன் ஒருவனுக்கும் இடையே பார்த்தவுடன் அவர்கள் உள்ளத்தில் ஏதோ ஒரு உணர்வு ஏற்பட்டு பின் அது காதலாக மலர்வது போல!

“சிலப்பதிகாரம்“ எழுதிய இளங்கோவடிகள் இவ்உள்ளுணர்வை “விடுத்த அறியா விருப்பு“ என்று மிக அழகான, ஆழமான ஒரு வார்த்தை பிரயோகத்தை அறிமுகம் செய்து வைத்துள்ளார். அத்தகையதொரு “விடுதல் அறியா விருப்பே“ நான் நடிகர் திலகம், கலை-ஞர் ஆகியோரிடம் கொண்ட விருப்பமாகும்.

பெற்றோரைப் பணிதல், வணங்குதல் எனும் பண்பு தமிழர்களிடத்தில் மிகமிக போற்றுதலுக்குரிய பண்பாகும்.

பெரியவர்களை வணங்குதலும் இதற்குள் அடங்கும். சிவாஜி ஐயாவின் பிள்ளைகளுள் ஒருவரான பிரபு அவர்கள் சாப்பாட்டுக்கு வந்ததும் தந்தையின் திருப்பாதங்களில் பணிந்து வணங்கினார். அவர்களுடைய குடும்பத்தில் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அந்த சக்கரவர்த்திக்கு “முதல் மரியாதை“ செய்த பின்பே கூடத்தில் அமர்ந்தார்கள். இந்த அரிய பண்பு என்னை மிகவும் ஆகர்சித்தது! யா ழ்ப்பாணத்தவர்களிடையே பொதுவாக இவ்விதம் பெற்றோர்களை, பெரியவர்களைப் பணிதல் வணங்குதல் என்பது நான் உட்படக் கடைப்பிடிக்கப்படாத பழக்கம். ஆனால் மனதளவில் பக்தியும் - பயமும் - அன்பும் - மரியாதையும் உண்டு. சிறுவயதிலிருந்து எங்களை பழக்காதிருந்தமையும் ஒரு காரணமாக இருக்கலாம்.

வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை மட்டும் அவர்களுடைய குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒன்றுகூடி மதிய போசனம் உண்பது ஒழுங்காக கடைபிடிக்கும் பழக்கம் ஆகும். சில சமயம் வெளியூர் படப்பிடிப்பு இருந்தாலோ வேறு முக்கிய அலுவல் நிமித்தம் பயணங்கள் மேற்கொண்டு இருந்தாலோ விதிவிலக்குண்டு.

”ஐயா! வாங்க இப்படி உட்காருங்க!”, நடிகர் திலகத்திற்கு வலதும் இடதுமாக நானும் நண்பர் ஹமீதும் அமர்ந்தோம். சுமார் 25 பேர்களாது ஒரே தடவையில் உட்கார்ந்து விருந்து உண்ண கூடிய நீளமான சாப்பாட்டு மேசையை சுற்றி நம்ம இளைய திலகம் பிரபு, தளபதி ராம்குமார் மற்றும் பேரப்பிள்ளைகள் உட்பட யாவரும் உட்கார்ந்தார்கள்.

“ஹமீது“ உமக்காகவே “கலால் இறைச்சி “ வாங்கி கறி சமைத்துள்ளோம். ஐயா! எத்தனை தடவை இங்கு வாறீர், போறீர். எங்க வீடு இருப்பது உமக்கு நினைவுக்கு வராது! நீரெல்லாம் பெரியாளாகிட்டீர்” என்று உரிமையுடன் நண்பர் ஹமீதிடம் உள்ள நட்புரிமையை காட்டினார் சிவாஜி ஐயா. கமலாம்மா, சாந்தியம்மா உட்பட வீட்டுப் பெண்கள் யாவரும் பரிமாற தொடங்கினார்கள். மிகவும் பக்குவமாக சமைத்திருந்தார்கள். “சிவாஜி வீட்டு விருந்தென்பது“ உண்டு சுவைத்தால் தான் புரியும். மிகவும் ருசியான பதார்த்தங்கள். ”ஐயாவுக்கு தயிர்ப்பச்சடி வை” இந்த தயிர் பச்சடி என்பது இதற்கு முன் நான் சுவைக்காதது.

தலை வாழை இலையில் தான் எல்லோருக்கும் பரிமாறினார்கள். சிவாஜி அவர்கள் அளவோடு உண்பவர். மிகவும் ரசித்து சுவைத்து உண்பது அவருடைய ரசனை.“ உயர்ந்த மனிதன் “ “முதல் மரியாதை“யில் அவர் சாப்பிடும் காட்சி அலாதியானது. மீண்டும் வாழையிலையைக் கழுவித் துடைத்து போன்று ஒரு துகள் கூட மிச்சமின்றி அவருடைய இலை சுத்தமாயிற்று! எதிலும் ஒரு ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்கும் அவருடைய பழக்கம் என்னை வெகுவாக கவர்ந்தது! சாப்பாட்டிற்கு பின்பு சுவைப்பதற்கு இனிப்பு பண்டம் வைக்கப்பட்டது. அவர்கள் வீட்டிலேயே தயாரிக்கப்பட்ட “போளி“ என்ற இனிப்பு பண்டம். “ஐயா! இதை இப்படி சாப்பிடக்கூடாது இது நம்மாளின்ற உணவில்லை. இது கன்னடகாரன் நமக்கு அறிமுகம் செய்து வைத்தது. இதுக்கு மேலே முதல்ல நெய்யை ஊத்தனும்” சுத்தமான நெய்யை “போளி“யின் மேல் துளித்துளியாக ஊற்றினார். பின் அதை சுருட்டினார். சுருக்கியவாறு கையில் எடுத்து உண்பதற்கு காட்டிக் கொடுத்தார்.

இப்படியாக எங்கள் கலைச்சக்கரவர்த்தி தனது உயிருக்குயிரான கண்மணி பிள்ளைகள் என்று விழிக்கின்ற ஒரு ரசிகனுக்கு அருகிருந்து குடும்பத்துடன் விருந்துபசாரம் செய்து மிக மனமகிழ்வுடனும், உரிமையுடனும் உபசரித்தாரே இந்த “ராஜ விருந்து“ எனது வாழ்நாளில் மறக்க முடியாதது.


”வந்த நல் விருந்தினரை முகம் மலர்ந்து விரும்பி உபசரிப்பவனின் வீட்டிலே, தன் நெஞ்சம் விரும்பிச் செல்வத் திருமகள் தங்கி வாசம் செய்வாள். இது உறுதி” என்ற வள்ளுவப் பெரியாரின் திருவாக்கு, அன்னை இல்லத்தில் உறுதியாகவே குடிகொண்டிருந்தது.



”அகன் அமர்ந்து செய்யாள் உறையும் முகன்
நல்விருந்புவான் இல்” - திருக்குறள்
”என்ன புறப்படப் போறீங்களா! சும்மா உட்காருங்கய்யா
இங்க நான் வச்சதுதான் சட்டம்”
அன்பு கட்டளையை மீற முடியவில்லை.

- *அடுத்த இதழிலும் தொடரும்... வீணை மைந்தன்*

# கொரோனா தடுப்புஸீசிகள் பற்றி வதந்தி பரப்புவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும்



- மொன்றியால் சாந்தினி

உலகெங்கும் வாழும் ஒவ்வொரு மனிதனையும் குறிவைத்துக் காத்திருக்கும் கொடிதான கொரோனா கிருமிகள், காற்றில் பறந்து திரிகின்றன. ஆபத்து எங்களை சுற்றிச் சுற்றி சுழன்று வருகின்றது. இவ்வாறாக, நாம் ஒவ்வொருவரும் கடந்த ஒன்றரை வருட காலத்துக்கு மேலாக ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் கொவிட்-19 என்ற கொடிய வைரஸ் தொற்றில் இருந்து மீள்வதற்கான ஒரே வழி தடுப்பு மருந்து பெற்றுக் கொள்வதேயாகும் என்பதை உலகம் நன்கு புரிந்து கொண்டு விட்டது. உலக சுகாதார நிறுவனம் உட்பட சர்வதேச ரீதியிலான நிறுவனங்கள் அத்தனையும் இதனையே கூறுகின்றன. உலகின் பல நாடுகளும் தங்களால் முடிந்த அளவிற்கு நிதியை ஏற்பாடு செய்து தங்கள் சொந்த மக்களுக்காக தடுப்பூசிகளைப் பெற்றுகொள்வதற்கு முயன்று வருகின்றன.

மேலும் கொரோனா என்னும் கொடி நோயால் இதுவரை உலகெங்கும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை கோடிகளை நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தங்கள் நாட்டு மக்களை காப்பாற்றும் முயற்சிகளில் ஒவ்வொரு தேசத் தலைவரும் தம்மை வருத்திய வண்ணம் செயலாற்றுகின்றார் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

இந்த நேரத்தில் தான், தவிர்க்க முடியாத சுகாதாரப் பழக்கவழக்கங்களாக முகக்கவசம் அணிந்து நடமாடுதல், சமூக இடைவெளியைப் பேணியபடி நடந்து கொள்ளல், கைகளின் சுத்தம் பேணுதல் போன்றன கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. கொரோனா உலகை விட்டு முற்றாக விடைபெறும் வரை இவ்வாறான அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்துத்தான் ஆக வேண்டியுள்ளது.

ஆனாலும் இவையெல்லாம் நிரந்தரத் தீர்வாக அமைந்து விடப் போவதில்லை. இவ்வாறு மக்கள் எக்காலமும் முகக்கவசத்துடன் நடமாடித் திரிவதென்பதுவும், மற்றவர்களுடன் தொடர்பின்றி அந்நியப்பட்டு வாழ்வதென்பதுவும் தொடர்ந்தும் சாத்தியமாகப் போவதில்லை. கொரோனா தொற்று விடயத்தில் சுகாதார அவதானம் மிக்க வாழ்க்கை முறைகளெல்லாம் சில வருடங்களுக்கு மாத்திரமே சாத்தியமான விடயங்களாகும்.

இவற்றுக்கெல்லாம் அப்பால் உலகுக்கு கொரோனாவிடமிருந்து நிரந்தர விடுதலையைத் தரப் போவது தடுப்பூசி மட்டுமேயாகும் என்பதுதான் உலகின் இன்றைய இறுதி முடிவாகும். உள்நாட்டில் உள்ள எமது மருத்துவ நிபுணர்களும், உலகின் பிரபல்யம் வாய்ந்த மருத்துவ அறிவியலாளர்களும் தடுப்பூசியின் அவசியத்தையே வலியுறுத்துகின்றார்கள். தடுப்பூசி ஒன்றே கொரோனாவைத் தடுக்கும் சிறந்த ஆயுதம் என்பதை உலக சுகாதார ஸ்தாபனத்தின் முக்கியஸ்த்தர்கள் வலியுறுத்தி வருகின்ற இந்த வேளையில் எவ்விதமான சான்றுகளும் இன்றி உலகெங்கும் பலர் வதந்திகளை இலகுவாகப் பரப்பி வருகின்றதை நாம் அவதானித்து வருகின்றோம்.

இவ்வாறான வதந்திகளுக்கு இடையிலும் உலக சுகாதார நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட வயதெல்லைக்கேற்ப மக்கள் தவறாமல் கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதே நிரந்தரத் தீர்வாக அமையப் போகின்றது. தடுப்பூசி ஏற்றிக் கொள்வதைத் தவிர்ப்பதோ அல்லது அது குறித்து அச்சம் கொள்வதோ விவேகமானதல்ல. கொவிட் தடுப்பூசி ஏற்றிக் கொள்வதை மக்கள் ஒவ்வொருவரும் கட்டாயமானதாகக் கருதி செயற்பட வேண்டியது அவசியம். இந்த விடயத்தில் பெரும்பாலான மக்கள் மிகுந்த கவனத்துடன் செயற்பட்டு வருகின்றார்கள் என்பதை மறுக்க முடியாது.

இதேவேளை கொரோனா தடுப்பூசிகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு உலக நாடுகள் தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. கனடாவில் தடுப்பூசிகளை பல நாடுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. இதற்காக கனடிய அரசு பல கோடி டாலர்களை செலவு செய்து வருகின்றது என்பது உண்மையே. கனடாவின் அனைத்து மாகாணங்களிலும் கூடியளவு மக்களுக்கு தடுப்பூசிகளை வழங்க மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் தீவிரமாக உழைத்து வருவதை நாம் பார்க்கக் கூடியதாக உள்ளது.

இதே போன்று, இலங்கை அரசாங்கம் சீனாவில் இருந்தும், ரஷ்யாவில் இருந்தும் தருவிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகளை மக்களுக்கு ஏற்றும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அவை தவிர, ஏற்கனவே இந்தியாவின் அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்ற தடுப்பூசிகளை முதலாம் கட்டமாக ஏற்றிக் கொண்டோருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இது ஒருபுறமிருக்க, கொவிட்-19 இற்கான தடுப்பூசி தொடர்பாக உலகெங்கும் ஆதாரமற்ற செய்திகள் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தடுப்பு மருந்துக்கு சாதகமான செய்திகளாக அவை இல்லை. தடுப்பூசி ஏற்றிக் கொண்ட அத்தனை பேருமே ஒவ்வாமை உபாதைகளால் அவதியுறுவதாகவே அச்செய்திகள் உள்ளன. அச்செய்திகளுக்கான உண்மை ஆதாரங்களைக் காண முடியவில்லை. எனவே அவற்றை வீண் வதந்திகளென நினைத்து நிராகரிப்பதே பொருத்தமாகும்.

உலகெங்கும் இதுவரை பல இலட்சக்கணக்கான மக்களுக்கு கொரோனா தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு எந்தவிதமான பக்கவிளைவுகளோ அல்லது பாரதூரமான பாதிப்புகளோ ஏற்பட்டதாக தகவல்கள் இல்லை. சிறியளவிலான காய்ச்சல், உடல் அசதி போன்ற சிறு உபாதைகள் மாத்திரமே உணரப்பட்டுள்ளன. இந்த உபாதைகள் தொடர்பாக மருத்துவர்கள் ஏற்கனவே தெரிவித்துமிருந்தனர். இந்த விடயத்தில் உலகெங்கும் உள்ள பல விஞ்ஞானிகள் இந்த வதந்திகள் பற்றிய உண்மை விபரங்களை அறிந்து கொள்வதில் தீவிரமாக செயற்பட்டு வருகின்றார்கள்.

அதேசமயம், கொரோனா தடுப்பூசி மாத்திரமன்றி எந்தவொரு தடுப்பூசிக்கும் இவ்வாறான சிறு உபாதைகள் பக்கவிளைவுகளாக உணரப்படுவது புதுமையானதல்ல என்பதே மருத்துவர்களின் கருத்தாக உள்ளது. உடல் ஒவ்வாமை கொண்டவர்களாக இருப்பின் அது பற்றி கேட்டறிந்த பின்னரே தடுப்பூசி வழங்கப்படுகின்றதென்பதையும் இங்கு கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது. எனவே தடுப்பூசி பற்றிய ஆதாரமற்ற வதந்திகளுக்கு செவிசாய்ப்பதைப் பார்க்கிலும் உரிய மருத்துவர்களிடம் ஆலோசனை கேட்டறிந்து கொள்வதே நல்லதாகும்.

சமூக ஊடகங்கள் மற்றும் இணையத் தளங்கள் பெருமளவானவற்றின் தகவல்களில் மக்களுக்கு இன்று நம்பிக்கை கிடையாது. அவை வெறும் பரபரப்புச் செய்திகளை மக்களுக்கு அளிப்பதிலேயே குறியாய் நிற்கின்றன. உலகின் எங்கோவொரு சிறு மூலையில் நடந்த சம்பவமொன்றை பெரிதுபடுத்தி, அவற்றுக்கு தேவையற்று முக்கியத்துவம் கொடுப்பதிலேயே அவை கவனம் செலுத்துகின்றன. புரளியை கிளப்புவதன் ஊடாக தமது ஊடகத்துக்கு பிரபல்யம் தேடிக் கொள்வதுதான் அவற்றுக்கு முக்கியம்.

கொரோனா தடுப்பூசி தொடர்பான வதந்திகளையும் பல்வேறு இணையத்தளங்கள் இவ்வாறுதான் வெளியிடுகின்றன. அவை சமூக ஊடகங்களால் உலகெங்கும் பரப்பப்படுகின்றன. கொரோனா தடுப்பூசி தொடர்பாக பரப்பப்படுகின்ற வீணான வதந்திகளால் மக்கள் மத்தியில் தடுப்பூசி தொடர்பான அவநம்பிக்கையும், அச்சமும் உருவாகின்றன என்பதுதான் உண்மை.

எனவே மக்கள் நன்மைகளையும், தீமைகளையும் பிரித்தறிந்து பார்ப்பவர்களாக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் தகுதி வாய்ந்த மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையே எமக்கு அவசியம். ஆதாரமற்ற வீண் வதந்திகளைப் புறக்கணிப்பதே பிரதானம். வதந்திகளை நம்பாமல் நாம் வாழும் நாடுகளில் உள்ள மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் பின்பற்றி கொடிதான கோரோன நோயிலிருந்து விடுபடுவோம் என்பதை அனைவரதும் குறிக்கோளாக அமைய வேண்டும்.

## மனித உடலுக்கு பொட்டாசியம் அவசியம் தேவை

மனித உடலில் எத்தனையோ பல வித தாதுக்களும், உப்புக்களும் உண்டு. உடல் அணுக்களில் பெருமளவில் பரவியுள்ள தாது பொட்டாசியம் என்பதாகும். ஒரு சராசரி மனத உடலில் மொத்தம் 120 கிராம் பொட்டாசியம் உள்ளது. இதில் 117 கிராம் உடல் அணுக்களுக்குள்ளேயும் மிகுதி 3 கிராம் அணுக்களின் வெளித் திரவங்களிலும் காணப்படுகின்றன. மற்றய தாதுக்களைப் போலவே பொட்டாசியமும் மனித உடம்பின் வளர்ச்சிக்கு பல வழிகளில் உதவுகிறது. முக்கியமாக உடல் அணுக்களைத் தூண்டி 24மணி நேரமும் ஓய்வில்லாமல் செயல்படச் செய்வுது இந்தப் பொட்டாசியமே. ஒரு விரலை மடக்கி நீட்டுவதற்கு பொட்டாசியம் முகவும் முக்கியம் என்றால் மற்றய அவயங்களின் இயக்கத்திற்கு பொட்டாசியத்தின் அவசியம் எவ்வளவு தேவை என்பதை உணர முடியும்.

இருதயம், நுரையீரல், மூளை. சிறுநீரகம், கல்லீரல், முக்கிய உறுப்புகளில் திசுக்களை முறையாகப் பணிசெய்ய வைப்பதில் பொட்டாசியத்தின் பங்கு அளப்பரியது. நரம்புகள் தளர்ச்சி அடையாமல் இருக்க வேண்டும் என்றால் பொட்டாசியம் அவசியம் தேவை. இருதயம் இயங்குவதற்கு மிகவும் முக்கியமாக இந்தத் தாது தேவைப்படுகிறது. சராசரி வயதுள்ள ஒருவருக்கு தினமும் 2.5 மருந்து, 3.3 கிராம் பொட்டாசியம் தேவைப்படுகிறது. சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் அவர்களுடைய நிறைக்கு ஏற்ப இத்தாது தேவைப்படும்.

### பொட்டாசியம் குறைந்தால்:

சராசரி உணவு உண்பவர்களுக்கு பொட்டாசியம் குறைவு ஏற்படவதற்கு வாய்ப்பில்லை. சாப்பிடாமல் இருப்பவர்கள். வாந்தி. வயிற்றுப்போக்கு அதிகமான வியர்வை. சிறநீர் வெளியேற்றம் இவற்றால் பொட்டாசியம் உடம்பில் குறையலாம். சலரோகம். இருதயநோயாளிகளுக்கும் பொட்டாசியம் குறைய வாய்ப்புள்ளது. இதை விட Steriod என்னும் மருந்தக்கள் பாவிப்பதாலும் இத்தாது குறையலாம். உடமிபிலுள்ள மொத்தப் பொட்டாசியத்தில் 10 வீதம் குறைந்தாலே அதன் அறிகுறிகள் தென்பட ஆரம்பிக்கும்.

பொட்டாசியம் மிகவும் குறைந்த விட்டால் சிறுகுடல் இயக்கம் தடைப்பட்டு வயிறு ஊதிவிடும். பொட்டாசியம் உடம்பிலும், இரத்தத்திலும் குறையும்போது இரத்தப்பரிசோதனை மூலமும், ஈ.சி.ஜி என்னும் இருதய-வரைபட மூலமும் தெரிந்து கொள்ளலாம்.

### பொட்டாசியம் அதிகமானால்

பொட்டாசியம் உடம்பில் அதிகரிப்பது என்பது மிகவும் அபூர்வமானதே. (Addison's Disease) அடிசன் வியாதி. அமிலத் தேக்கநிலை. சிறுநீரக செயல் இழப்பு, தவறான இரத்தத்தைச் செலுத்ததல் போன்ற நிலைகளில் பொட்டாசியம் இரத்தத்தில் அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஈ.சி.ஜி என்னும் இரதய வரைபடத்தைப் பார்தால் மட்டுமே இந்த அதிகரிப்புத் தெரியவரும். இந்தபொட்டாசியம் அதிகமாகிவிட்டால் மரணம் சம்பவிக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

### நிறை அதிகரித்தால், இருதயம் அவஸ்த்தைப்படும்.

உங்கள் நிறை இருக்க வேண்டிய அளவை விட 10 அல்லது 12 கிலோ கூடுதலாக இருந்தால் இருதயம் படும்பாடு உங்களுக்குத் தெரியுமா?. தேவை இல்லாத ஊழச்சதையால் 2300 கிலோ மீற்றர் தூரத்திற்கு உடலக்குள் இருக்கும் இரத்தக் குழாய்களுக்கு உள்ளே கூடுதலாக இரத்தத்தைப் பாய்ச்சுகிறது. இதனால் இருதயம் தனது சுயமான இயக்கத்தை விட மூன்று மடங்கு அதிகமாக வேலை செய்ய வேண்டி உள்ளது. ஒரு மடங்கிற்கு 15 வருடங்களாகும். உதாரணமாக 80 வயதில் மரணம் அடைய வேண்டிய ஒருவர் 15 வருடங்களுக்கு முன்னரே இறந்து விடுவார். இது எல்லோருக்கும் பொருந்தும். உடல்நிலையில் கவனம் செலுத்தினால் நன்றே வாழலாம்.

# அன்பின் தொனி - 612

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**கர்த்தாவே, உம்முடைய இரக்கங்கள் மிகுதியாயிருக்கிறது**

அதிகாலையில் நான் எழுந்து சத்தமிட்டேன், உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன். உமது வசனத்தைத் தியா நிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்குமுன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும். உம்முடைய கிருபையின்படி என் சத்த த்தைக் கேளும், கர்த்தாவே, உம்முடைய நியாயத்தின்படி என்னை உயிர்ப்பியும். தீவினையைப் பின்பற்றுகிறவர்கள் சமீபிக்கிறார்கள், அவர்கள் உம்முடைய வேதத்துக்குத் தூரமாயிருக்கிறார்கள். கர்த்தாவே, நீர் சமீபமாயிருக்கிறீர், உமது கற்பனைகளெல்லாம் உண்மை. நீர் உம்முடைய சாட்சிகளை என்றென்றைக்கும் நிற்க ஸ்தாபித்தீர் என்பதை, அவைக ளால் நான் நெடுநாளாய் அறிந்திருக்கிறேன். என் உபத்திரவத்தைப்பார்த்து, என்னை விடுவியும், உமது வேதத்தை மறவேன். எனக்காக நீர் வழக்காடி என்னை மீட்டுக்கொள்ளும், உம்முடைய வார்த்தையின்படியே என்னை உயிர்ப்பியும். இரட்சிப்பு துன்மார்க்கருக்குத் தூரமாயிருக்கிறது, அவர்கள் உமது பிரமாணங்களைத் தேடார்கள். கர்த்தாவே, உம்முடைய இரக்கங்கள் மிகுதியாயிருக்கிறது. உமது நியாயங்களின்படி என்னை உயிர்ப்பியும். என்னைத் துன்பப்படுத்து கிறவர்களும் என்னை விரோதிக்கிறவர்களும் அநேகர், ஆனாலும் உம்முடைய சாட்சிகளை விட்டு விலகேன். உமது வசனத்தைக் காத்துக்கொள்ளாத துரோகிகளை நான் கண்டபோது, எனக்கு அருவருப்பாயிருந்தது. இதோ, உம்முடைய கட்டளைகளை நேசிக்கிறேன், கர்த்தாவே, உமது கிருபையின்படி என்னை உயிர்ப்பியும்.
**- சங்கீதம் 119: 147-159**

**கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்பின்மேல் ஆவலாயிருக்கிறேன்**

உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம், உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம். பிரபுக்கள் காரணமில்லாமல் என்னைத் துன்பப்படுத்தினார்கள், ஆனாலும் என் இருதயம் உமது வசனத்திற்கே பயப்படுகிறது. மிகுந்த கொள்ளை யுடைமையைக் கண்டுபிடிக்கிறவன் மகிழுகிறதுபோல, நான் உமது வார்த்தையின்பேரில் மகிழுகிறேன். பொய்யைப் பகைத்து அருவருக்கிறேன், உம்முடைய வேதத்தையோ நேசிக்கிறேன். உமது நீதிநியாயங்களினிமித்தம், ஒருநாளில் ஏழுதரம் உம் மைத் துதிக்கிறேன். உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை. கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்புக்கு நான் காத்திருந்து, உம்முடைய கற்பனைகளின்படி செய்கிறேன். என் ஆத்துமா உமது சாட்சிகளைக் காக்கும், அவைகளை நான் மிகவும் நேசிக்கிறேன். உமது கட்டளைகளையும் உமது சாட்சிகளையும் காத்து நடக்கிறேன், என் வழிகளெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது. கர்த்தாவே, என் கூப்பிடுதல் உமது சந்நிதியில் வருவதாக, உமது வசனத்தின்படியே என்னை உணர்வுள்ளவனாக்கும். என் விண்ணப்பம் உமது சந்நிதியில் வருவதாக, உமது வார்த்தையின்படி என்னை விடுவித்தருளும். உம்முடைய பிரமாணங்களை நீர் எனக்குப் போதிக்கும்போது, என் உதடுகள் உமது துதி-யைப் பிரஸ்தாபப்படுத்தும். உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள், ஆதலால், என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச்சொல்லும். நான் உம்முடைய கட்டளைகளைத் தெரிந்துகொண்டபடியால், உமது கரம் எனக்குத் துணையாயிருப்பதாக. கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்பின்மேல் ஆவலாயிருக்கிறேன், உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி. என் ஆத்துமா பிழைத்திருந்து உம்மைத் துதிக்கக்கடவது, உமது நியாயத்தீர்ப்புகள் எனக்கு உதவி யாயிருப்பதாக. காணாமற்போன ஆட்டைப்போல வழிதப்பிப்போனேன், உமது அடியேனைத் தேடுவீராக, உமது கற்பனை களை நான் மறவேன்.
**- சங்கீதம் 119: 147-176**

என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், அவர் எனக்குச் செவிகொடுத்தார். கர்த்தாவே, பொய் உதடுகளுக்கும் கபடநாவுக்கும் என் ஆத்துமாவைத் தப்புவியும். கபடநாவே, உனக்கு என்ன கிடைக்கும்? உனக்கு என்ன செய்ய ப்படும்? பலவானுடைய கூர்மையான அம்புகளும், சூரைச்செடிகளை எரிக்கும் தழலுமே கிடைக்கும். ஐயோ! நான் மேசேக்கிலே சஞ்சரித்தது போதும், கேதாரின் கூடாரங்களண்டையிலே குடியிருந்ததும் போதும்! சமாதானத்தைப் பகைக்கிற வர்களிடத்தில் என் ஆத்துமா குடியிருந்ததும் போதும்! நான் சமாதானத்தை நாடுகிகிறேன், அவர்களோ, நான் பேசும் போது யுத்தத்துக்கு எத்தனப்படுகிறார்கள். **- சங்கீதம் 120: 1-7**

எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். உன் காலைத் தள்ளாடவொட்டார், உன்னைக் காக்கிறவர் உறங்கார். இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை. கர்த்தர் உன்னைக் காக்கிறவர், கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார். பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப் படுத்துவதில்லை. கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார், அவர் உன் ஆத்துமாவைக் காப்பார். கர்த்தர் உன் போக்கையும் உன்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார். **- சங்கீதம் 121: 1-8**

கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன். எருசலேமே, உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று. எருசலேம் இசைவிணைப்பான நகரமாய்க் கட்டப்பட் டிருக்கிறது. அங்கே இஸ்ரவேலுக்குச் சாட்சியாகக் கர்த்தருடைய ஜனங்களாகிய கோத்திரங்கள் கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்குப் போகும். அங்கே தாவீதின் வம்சத்தாருடைய சிங்காசனங்களாகிய நியாயாசனங்கள் வைக்கப் பட்டிருக்கிறது. எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள், உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப் பார்களாக. உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக. என் சகோதரர் நிமித்தமும் என் சிநேகிதர் நிமித்தமும், உன்னில் சமாதானம் இருப்பதாக என்பேன். எங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தினிமித்தம் உனக்கு நன்மையுண்டாகத் தேடுவேன்.
**- சங்கீதம் 122: 1-9**

பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே, உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன். இதோ, வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், எங்கள் தேவனா-கிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ்செய்யும்வரைக்கும், எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது. எங்களுக்கு இரங்கும் கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்ளூ நிந்தனையினால் மிகவும் நிறைந் திருக்கிறோம். சுகஜீவிகளுடைய நிந்தனையினாலும், அகங்காரிகளுடைய இகழ்ச்சியினாலும், எங்கள் ஆத்துமா மிகவும் நிறைந்திருக்கிறது. **- சங்கீதம் 123: 1-4**



### 7 ஜீவன் முக்தி (பகுதி ) 116

## வாழ்க்கையின் லட்சியம்

இந்த உலகத்தில் 650 கோடி மக்கள் இருக்கிறார்கள். இவ்வளவு பேர் இருந்தும், அவர்கள் பூமிக்கு கூட்டு விழிப்புணர்வுக்கு அதாவது collective conciousness க்கு என்ன செய்தார்கள் என்று பார்த்தேம் என்றால். ஒன்றுமில்லை.

0.1 சதவீத அளவிற்கு அவர்கள் நேர்மறை கூட்டுவிழிப்புணர்வை, collective positivity ஐ அதிகப்படுத்தியிருந்தால் ஆச்சரியம்.

ஒரு கைப்பிடி அளவு ஞானிகள் மட்டுமே மொத்த உலக வரலாற்றையும் அடுத்தடுத்த கட்டத்திற்கு எடுத்துச சென்றிருக்கிறார்கள்.

ஆனால் இதுவரை பூமியில் தோன்றிய ஜீவன் முக்தர்களின் எண்ணிக்கையை எடுத்தால் அது 0.001 சதவீதம் கூடக் கிடையாது.

ஆனால் அவர்கள் பூமியில், இயற்கைச் சிர்வளத்திற்காக, நேர்மறை கூட்டு விழிப்புணர்விற்காக, கலாச்சார முதிர்ச்சிக்காக மனவள மேம்பாட்டிற்காக, நேர்மறை சுட்டு விழிப்புணர்விற்காக, கலாச்சார முதிர்ச்சிக்காக மனவள மேம்பாட்டிற்காக செய்ததுதான் 99.99சதவீத உலக வரலாற்றை உருவாக்கியிருக்கிறது.

விழிப்புணர்வு நான்கு நிலைகள்.

எண்ண ஒட்டங்கள். — எண்ண ஓட்டங்கள் அற்ற நிலை

ஜாக்ரத் — துரியம்

நான் எனும் விழிப்புணர்வுடன் இருக்கும் நிலை.

முழு விழிப்புணர்வுடன் கூடிய நித்தியானந்த நிலை — எண்ண ஓட்டங்களுடன் கூடிய விழிப்பு நிலை

சொப்பனம் — சுஷ-ப்தி

நான் எனும் விழிப்புணர்வு அற்ற நிலை — கனவுகளுடன் கூடிய தூக்க நிலை

விழிப்புணர்வு அற்ற ஆழ்ந்த தூக்கம

வாழ்க்கை ஞானிகள் தந்த பரிசு
காமசூத்திரத்தை எழுதிய வாத்ஸ்யாயனர்...
ஒரு சந்யாஸி. ஒரு ஞானி

நாட்டியக் கலையை உருவாக்கிய பரத ரிஷி...
ஒரு ஞானி
யோகத்தை உலகிற்குத் தந்த பதஞ்சலி...
ஒரு துறவி, ஒரு ஞானி.
தியானத்தை பயன்பாட்டுக்கு எடுத்து வந்த புத்தர்...
ஒரு துறவி, ஒரு ஞானி.
ஆயுர்வேத மருத்துவத்தை உலகுக்களித்த தன்வந்தரி...
ஓரு ஞான அனுபூதிமான்.
கட்டிடக் கைலையை உருவாக்கிய...
மயன் ஒரு ஞான அனுபூதிமான்.

மனோ தத்துவத்தை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், மனதைக் கடப்பதற்கான விஞ்ஞானத்தையும் வடிவமைத்த ரிஷிகள் ஞானிகள்.

இப்படி ஓராயிரம் ஞானிகள் அவர்களின் வாழ்வையே தியாகம் செய்து கோர்த்துத் தந்த மாலையைத் தான் நாம் இன்று வாழ்க்கையாக அனுபவிக்கின்றோம்.

ஒருவேளை இவர்கள் மட்டும் தோன்றாமல் போயிருந்தால் நம்முடைய இன்றைய பல சொகுசுகள், மருத்துவ முறைகள், கட்டிடங்கள், கலைகள் இருந்திருக்கவே இருந்திருக்காது.

வாழ்க்கை எனும் பரிசை நமக்களித்த ஞானிகளுக்கு நாம் ஜீவன் முக்தர்களாவதைத் தாண்டி எதை ஈடாகத் திரும்ப தர முடியும்?

நாம் செய்ய வேண்டிய ஒரேஒரு கைமாறு, நாமும் அவர்கள் தொட்ட அதே துரிய திலையைத் தொடுவதுதான், அதே ஜீவன் முக்த நிலையை வாழ்வதுதான்.

உலக அமைதி அல்லது உலக அழிவு மட்டுமே தவிர்க்க முடியாத எதிர்காலம்.

உடனடியாக ஓராயிரம் ஜீவன் முக்தர்களாவது உருவாகாவிட்டால், பூமிப்பந்து, சூரியக் குடும்பத்தில் சுற்றும். ஆனால் அதில் சுற்ற ஆட்கள் இருக்க மாட்டார்கள். இப்போது வேண்டுமானாலும் உங்கள் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு நீங்கள் உயிரோடு சென்று, உயிரோடு திரும்பி வரலாம்.

இதே நிலை, எதிர்மறை கூட்டு விழிப்புணர்வு அதிகமாகிக் கொண்டே சென்றால், உங்களின் பிள்ளைகள் அலுவலகத்திற்க செல்ல ஆரம்பிக்கும்போது உங்கள் வீட்டிலிருந்து அவர்கள் செல்கின்ற அலுவலகமும் இருக்கும். ஆனால், மாலை-யில் அலுவலகத்திலிருந்து திரும்பி வருவதற்கு, காலையில் அலுவலகத்திற்கு சென்ற ரோடு இருக்காது.

தீவரவாதம், தலைக்கு மேல் சென்றுவிட்டது. இதே நிலையில் சென்றால், 20, 30 வருடங்கள் கழித்து உங்களின் பேரக் குழந்தைகள் பிறக்கும் பூமி, 24 மணி நேர திகில் திரைப்படமாக இருக்கும்.

அதானால் பூமியைக் காப்பாறற, உடனடித் தேவை, ஓராயிரம் ஜீவன் முக்தர்காளாவது உடனடியாக பூமியின் மீது உலாவ வேண்டும்.

**(தொடரும்...)**

----

### *பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080

ekuruvi Steps 2021

Everyone is a hero of their health

# 10,000 STEPS PER DAY FOR 100 DAYS

JOIN FREE !

JUN 1ST - SEP 6TH

FOR INFO 416-272-8543



கடந்த வருடம் Ekuruvi Steps போன்று இந்த வருடமும் ஜூன் 1 ம் திகதியிலிருந்து ஆரம்பிக்கவுள்ளோம்

10,000 Steps Per Day to 1 Million steps over 100 Days வரும் ஜூன் 01 ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் 06 வரை நூறு நாட்கள், நாள் ஒன்றுக்கு 10,000 காலடிகள் என்று இலக்கு கண்காணிக்கப்பட்டு ஊக்கமளிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து உங்கள் உடல் உள அரோக்கியதை மேம்பெடுத்துவது மட்டுமல்லாது சமூகத்தையும் புத்துணர்ச்சியுடன் உங்களுடன் கொண்டுசெல்ல இணைந்து நடக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் .

BMI யைக் குறைத்து உடல் எடையைப் பேணுவது, நீரிழிவு, இருதய நோய் என்பவற்றை வராது தடுப்பது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது என்று பல பயன்களைக் கொண்ட இந்த நடைப்பயிற்சியைத் தொடர்ந்து 100 நாட்கள் என்று இலக்கு நிர்ணயித்து நிறைவேற்றுவதன் மூலம், நாளடைவில் அதுவே பழக்கமாகி உடல் ஆரோக்கியம் மேம்பட உதவும்.

இந்நிகழ்வில் இணைந்து கொள்ளும் ஒவ்வொருவரும் எங்கள் Whatsapp "Ekuruvi Steps 2021" இன் குழுமத்தில் இணைத்து ஒவ்வொரு நாளும் நீங்கள் நடக்கும் கால் நடைகளின் எண்ணிக்கையை ( 8,000 இலிருந்து 10,000 வரை ) பதிவிடவேண்டும் . அது எங்களால் தொடர்ச்சியாக 100 நாட்க்கள் கண்காணிக்கப்படும்.

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக, தாயகத்தில் வட, கிழக்கு மற்றும் மலையகம் எங்கும் கோவிட 19 காலத்தில் பொருளாதார கடும் நெருக்கடியை எதிர்வுகொள்ளும் ஆதரவற்ற மக்களுக்கு உதவுமுகமாக திரு ஆறுதிருமுருகன் ஐயாவின் வழிநடத்தலில் " சிவபூமி அறக்கட்டளை" யை ஒரு குறியீட்டு அமைப்பாக நாம் இந்த வருடம் ekuruvi Steps 2021 நேரடியாக உங்கள் பங்களிப்பை செய்யுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

உங்கள் உதவிகளுக்கு

SIVAPOOMI TRUST, KONDAVIL, JAFFNA | COMMERCIAL BANK JAFFNA | ACC . NO : 1060016510 | SWIFT CORD - CCEYLKLX

கனடாவிலிருந்து WWW.REMITBEE.COM இனுடாக அனுப்புவர்களுக்கு உதவியாக REMITBEE நிறுவனமும் உங்களது ஒவ்வொரு பரிமாற்றத்துக்கு $5 கனேடியன் டொலர்களை, சிவபூமி அறக்கட்டளைக்கு அனுப்பவுள்ளார்கள் . இத்துடன் வேறு கூடுதல் கட்டணம் எதுவும் அறவிடமாட்டார்கள் . PROMO CODE "EKURUVI2021"

அன்புடன்
நவஜீவன் அனந்தராஜ்

PLEASE SUPPORT THE BIG IMPACT OF SMALL DONATIONS

SIVAPOOMI TRUST | KONDAVIL , JAFFNA

COMMERCAL BANK JAFFNA | ACC. NO: 1060016510

+ 94 77 625 8511



மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான
மரக்கறி வகைகள்
மற்றும் பழவகைகளுக்கு
மொன்றியலில்
புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

25ஆவது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

உதயம் 1313 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 4, 2021

# ஸ்காபுறோ வைத்தியசாலை நிர்வாகத்திற்கு 270,000 டாலர்களிற்கான காசோலை வழங்கிய கனடா சரவணா பவன் உணவக உரிமையாளர்



கனடாவில் உலகப் பகழ்பெற்ற சரவணா பவன் உணவகத்திற்கு மூன்று கிளைகள் உள்ளன. ஒன்றாரியோவின் ஸ்காபுறோ, மிசிசாகா மற்றும் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் ஒன்று என இந்த கிளைகள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. இந்த மூன்று கிளைகளையும் உரிமையாளராக விளங்கி அதனை நிர்வகித்து வருகின்றவர் திரு கணேசன் சுகுமார் ஆவார்.

அவரது சிந்தனையின் விளைவாக தமது நிறுவனத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை இங்குள்ள வைத்தியசாலைகளுக்கு வழங்க வேண்டும் என்று எண்ணி மொத்த தொகையாக இந்த வருடத்திற்குள் மூன்றரை இலட்சம் டாலர்களை **Scarborough Health Network Foundation** என்னும்“ ஸ்காபுறோ நகரில் இயங்கும் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு வழங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

*(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

# சாந்தா பஞ்சலிங்கம் தலைமையில் தமிழர் வர்த்தக சம்மேளனம் ஸ்காபுறோ வைத்தியசாலைக்கு 25000 டாலர்களை ஒரே நாளில் சேகரித்து வழங்கியது

CTCC Canadian Tamils' Chamber of Commerce

கனடாவில் தமிழ் அன்பர்கள் பலர் இங்குள்ள வைத்தியசாலைகளின் நிதித் தேவைகளுக்காக ஒவ்வொரு வருடமும் அன்பளிப்புக்களை வழங்கும் வழக்கம் உள்ளது.

இந்த வரிசையில் நேற்று முன்தினம் புதன்கிழமை, கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் திரு சாந்தா பஞ்சலிங்கம் மற்றும் முக்கிய இயக்குனர்கள் மற்றும் அங்கத்தவர்கள் ஆகியோர் கூடி ஒரே நாளில் 25000 டாலர்களை ஸ்காபுறோ வைத்தியசாலை நிதிக்காக வழங்குவதற்காகச் சேகரித்து சாதனை செய்துள்ளனர். இந்த நிதிப் பங்களிப்பை பத்தாயிரம் டாலர்கள் வழங்கி ஆரம்பித்து வைத்த சம்மேளனத்தின் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்களைத் தொடர்ந்து ஏனைய முக்கிய இயக்குனர்சபை உறுப்பினர்கள் மற்றும் சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் ஆகியோர் தங்கள் பங்களிப்புக்களை வழங்கினர். சில மணிநேரத்தில் 25000 டாலர்கள் சேகரிக்கப்பட்டன.

இந்த தாராள நிதி அன்பளிப்பைச் செய்த கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தை கனடா- ரொரன்ரோ மனித நேயக்குரல் அமைப்பினர் பாராட்டுகின்றனர்.

நிதி அன்பளிப்பு வழங்கியவர்களின் பெயர்கள் கீழே காணப்படுகின்றன:-

*Santha Panchalingam..*
*Murali Sivaguru*
*Vithu Ramachandran*
*Christine Seevaratnam*
*Dilani Gunarajah*
*Sinnadurai Jeyakumar*
*Darshan Iconnect*
*Ari ARIARAN*
*Paul Darshan*
*Logan Velumailum*

*Rohan George*
*Poorani Sornabala*
*Murali Muraleetharan*
*Kannan Ilankai*
*Ken KIRUPA*
*Vimal Visvanathan*
*Rukshan Para*
*Esa Para*
*Vina Devadas*
*Samy Ramachandran*
*Sritharan Thurairajah*

# தொழிலதிபர் சங்கர் நல்லதம்பி நிதி உதவியில் ஈச்சிலம்பற்று உடப்புக்கேணி கிராம மக்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பெற்றன



இலங்கையில் உள்ள தற்போதைய கொரோணாவினால் மக்கள் வெளியில் செல்லமுடியாத நிலையி விதவைகள் அங்கவீனர்கள் கூலிக்கு வேலை செய்பவர்களின் நிலையை கருத்தில் கொண்டு கனடா தொழிலதிபர் சங்கர் நல்லதம்பி அவர்களின் நிதி உதவியோடு திருகோணமலை ஈச்சிலம்பற்று உடப்புக்கேணி ஆகிய கிராம மக்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பெற்றன. இதற்கான ஏற்பாடுகளை கனடா- ரொரன்ரோ மனித நேயக் குரல் அமைப்பு செயதிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. *(தொடர்ச்சி உள்ளே 8ம் பக்கத்தில்)*

# கனடா – ஓம் சரவணபவ அறக்கட்டளையினரின் நிதி உதவியில் சண்டிலிப்பாயில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பெற்றன

கனடாவில் இயங்கும் ஓம் சரவணபவ சேவா அறக்கட்டளையினர் வழங்கிய ரூபா 1,27,500 நிதி அன்பளிப்பின் மூலம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நாவலி கிழக்கு மற்றும் நாவலி தெற்கு ஆகிய இரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் கல்லுண்டாய் புதிய குடியிருப்பைச் சேர்ந்த 85 குடும்பங்களுக்கு அண்மையில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பெற்றன. தற்போதைய கோவிட்- 19 நோய்த் தொற்று காரணமாக தமது வாழ்வாதாரத்தினை இழந்து பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்களின் அவசர உணவுத் தேவையினை பூர்த்தி செய்து கொள்வதற்காக உலர் உணவு பொருட்களை தந்துதவுமாறு வட்டு இந்து வாலிபர் சங்கம் கனடா அமைப்பிடம் கோரியிருந்தது.



*தொடர்ச்சி உள்ளே 8ம் பக்கத்தில்)*

RE/MAX ACE
PUNCH
SOCKALINGAM
www.mlslistingtoday.com
FOR SALE
Punch
Dir: 416.786.2463
BUY...SELL...LEASE...INVEST...

# மலேசியாவில் தொழிலாளர்கள் சுரண்டப்படுவது குறித்து கனடா விசாரணை

*சிவா பரமேஸ்வரன்*
*(மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)*



மலேசியாவில் செம்பனை எண்ணை மற்றும் கையுறை தயாரிப்பு தொழிற்சாலைகளில் கொத்தடிமை முறை நிலவுகிறது எனும் குற்றச்சாட்டைக் கனடா விசாரிக்க ஆரம்பித்துள்ளது. மனித உரிமைகளுக்கு அதிக முன்னுரிமை அளித்து வரும் கனடா இது தொடர்பிலான விசாரணையைத் தொடங்கியுள்ளதாக சில தினங்களுக்கு முன்னர் அறிவித்தது. கனடா ஆண்டு தோறும் ஆயி-ரம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான செம்பனை எண்ணை இறக்குமதி செய்கிறது.

“மலேசியாவில் செம்பனை எண்ணை ரப்பர் கையுறை தயாரிக்கும் நிறுவனங்களில் தொழிலாளர்கள் கொத்தடிமை போல நடத்தப்படுகின்றனர் என்கிற குற்றச்சாட்டை நாங்கள் மிகவும் தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம்“ என்று கனடாவின் வேலை வாய்ப்பு மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சு வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்குத அனுப்பிய மின்னஞ்சலில் கூறியுள்ளது.

*தொடர்ச்சி உள்ளே 12ம் பக்கத்தில்)*